උතුරේ අවතැන්ව ශුභ සාධක
මධ්‍යස්ථානවල රැඳී සිටින ශිෂ්‍යාවන්
සඳහාවන අධ්‍යාපන සහන සේවා ව්‍යාපෘතිය

අදියර II

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி
நிலையங்களில் தங்கியுள்ள
மாணவர்களுக்கான கல்வி நிவாரண
செயல் திட்டம்.

கட்டம் II

# PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

**STAGE II**

KALABUSHANA P.M. PUNYAMEEN, T. JAYABALAN

# උතුරේ අවතැන්ව ශුභ සාධක මධ්‍යස්ථානවල රැඳී සිටින ශිෂ්‍යාවන් සඳහාවන අධ්‍යාපන සහන සේවා ව්‍යාපෘතිය

## අදියර II

# வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயல் திட்டம்.

## கட்டம் II

# PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

## STAGE II

KALABUSHANA P.M. PUNYAMEEN, T. JAYABALAN

| | |
|---|---|
| Title : | PR0JECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH. - STAGE - II |
| Subject : | PR0JECT REPORT |
| Authors : | P.M.PUNIYAMEEN & T. JAYABALAN |
| Edition : | DECEMBER 2009 |
| Price : | FREE |
| Copies: | 750 |

**PRINTED AND PUBLISHED BY**

**C.V. PUBLISHERS (PVT) LTD**
**(PRINTING DIVISION)**
**14, UDATALAWINNA MADIGE,**
**UDATALAWINNA 20802**
**SRILANKA**

**T/P : 0094 812 493892**
**FAX : 0094 812 493746**
**E-Mail : pmpuniyameen@yahoo.com**

**ISBN: 978-955-1779-28-3**

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT



මගේ අංකය: එස්ඩී 6/

2009 ඔක්තෝබර් මස 19 වැනි දින

කලාභූෂණම් බී.එම්.පුන්තියාමින් මහතා,
කළමනාකාර අධ්‍යක්ෂ - සී.ස.චින්තන කව ප්‍රකාශන (පුද්) සමාගම,
14, උඩතලවින්න, මඩිගේ,
උඩතලවින්න.

මහත්මයාණෙනි,

<u>උතුරේ අවතැන්ව ශුභ සාධන මධ්‍යස්ථානවල රැඳී සිටින ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් සඳහාවන අධ්‍යාපන සහන සේවා ව්‍යාපෘතිය</u>

ඔබ විසින් ඉහත කරුණ පිළිබඳව අතිගරු ජනාධිපතිතුමා වෙත එවන ලද සහන සේවා ව්‍යාපෘතිය පිළිබඳ වාර්තාව ලද බවත් ප්‍රචාරක අභිප්‍රායකින් තොරව ජාතික යුතුකමක් ඉටු කිරීමක් වශයෙන් උතුරේ අවතැන් වූ ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් වෙනුවෙන් කරනු ලබන මෙම සේවාව අතිගරු ජනාධිපතිතුමා අගය කරන බවත් එතුමාගේ නියමය පරිදි මෙයින් දන්වා සිටිමි.

එම්.ඩී.ඩබ්ලිව්. ආරියවංශ
ජනාධිපති අතිරේක ලේකම්,
ජනාධිපති ලේකම් වෙනුවට.

Karu/7/
2009.10.19

ගාලු මුවදොර, කොළඹ 01 / காலி முகத்திடல், கொழும்பு 01 / Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: 011 2354354, 011 4354354
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2340340
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail: ps@presidentsoffice.lk

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT



எனது இல: எஸ்டி 6/

2009 அக்டோபர் மாதம் 19 ஆந் திகதி

கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் அவர்கள்,
முகாமைத்துவப் பணிப்பாளர்,
வரை. சிந்தனை வட்டம் வெளியீடுகள் (தனியார்) கம்பனி,
14, உடதலவின்ன, மடிகே,
உடதலவின்ன.

அன்புடையீர்,

<u>வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களின் தங்கியிருக்கும் மாணவ மாணவிகளுக்கான கல்வி நிவாரண சேவைக் கருத்திட்டம்</u>

தங்களால் மேற்போந்த விடயம் சம்பந்தமாக அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரண சேவைக் கருத்திட்டம் தொடர்பான அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது என்பதையும் பிரசித்தப்படுத்தும் நோக்கின்றி தேசிய கடமையொன்றாகக் கருதி வடக்கில் இடம்பெயர்ந்த மாணவ மாணவிகள் சார்பாக ஆற்றப்படும் இவ்வரிய சேவையை அதிமேதகு சனாதிபதி அவர்கள் போற்றுகின்றார் என்பதையும் அதிமேதகையரின் ஆணைப்படி இத்தால் அறிவிக்கின்றேன்.

எம்.டி டப்ளிவ். ஆரியவங்ச
சனாதிபதியின் மேலதிகச் செயலாளர்
சனாதிபதியின் செயலாளருக்காக.


ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones: 011 2354354, 011 4354354
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2340340
ඉ-තැපැල / மின்-அஞ்சல் / e-mail: ps@presidentsoffice.lk

**ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය**

**இலங்கையின் பிரதம அமைச்சர்**

**Prime Minister of Sri Lanka**

PM/PS/15 2009.09.02

කලාභූෂණ බී.ඇම්.පුන්නියාමීන් මහතා,
14,
උඩතලවින්න,
මඩිගේ,
උඩතලවින්න 20802.

මහත්මයාණෙනි,

ඔබ විසින් මා වෙත එවන ලද අධ්‍යාපන සහන සේවා ව්‍යාපෘති වාර්තාවට ස්තුතිවන්ත වෙමි.

ස්තුතියි.

මෙයට - විශ්වාසී,

අග්‍රාමාත්‍ය

විපක්ෂ නායක කාර්යාලය

எதிர்கட்சித் தலைவர் அலுவலகம்

**OFFICE OF THE LEADER OF THE OPPOSITION**

08 September 2009

Mr. P.M. Puniyameen

14, Udatalawinna Madige

Udatalawinna.

Dear Sir,

Hon. Leader of the Opposition appreciated your informing him of the assistance you are giving, the children of IDP's .

With kind regards.

Yours truly

Sudath Chandrasekara.

Private Secretary to the Leader of the Opposition

පාර්ලිමේන්තුව, ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ, ශ්‍රී ලංකාව. / பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை, இலங்கை. / Parliament, Sri Jayewardenepura Kotte, Sri Lanka.

දුරකථන / தொலைபேசிகள் / Telephones :

ලේකම් / செயலாளர் / Secretary: 2777261, 2777257(Fax)

කාර්යාලය / அலுவலகம் / Office: 2777263

ෆැක්ස් / தொலைநகல் / Fax: 2777285, 2777257

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

# வடக்கில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான கல்விச்சேவை. உடத்தலவின்ன சிந்தனைவட்டத்தினதும், தேசம் நெட்டினதும் பெருமுயற்சி


## செல்வி க. தங்கேஸ்வரி

(மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)


வடக்கில் இடம்பெயர்ந்த இடைத்தங்கல் முகாம்களில் அடைபட்டுள்ள மாணவர்களின் கல்விநிலை பரிதாபகரமானது. இவர்கள் தங்கள் பாடசாலைகளுக்குச் செல்லமுடியாது. இவர்களில் இவ்வருடம் க.பொ.த. சாதாரணதர பரீட்சை எழுத வேண்டியவர்கள் ஏராளமாக உள்ளனர். இவர்கள் எவ்வாறு பரீட்சை எழுத முடியும்? எப்படிப் போதுமான புள்ளிகள் பெறமுடியும்?

இது பற்றி யாரும் தீவிரமாக சிந்திக்கவில்லை.

இந்த நிலையில் இவர்களுக்குக் கைகொடுக்க வேண்டுமென்ற சிந்தனை உடத்தலவின்னையைச் சேர்ந்த சிந்தனைவட்டப் பொறுப்பாளர் ஜனாப் பீ.எம். புன்னியாமீனுக்கு ஏற்பட்டது. அவரது முயற்சியால் இதற்கான ஒரு புதிய செயற்றிட்டம் உருவாக்கப்பட்டது.

வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மாணவர் களுக்கான கல்வி நிவாரண நடவடிக்கைகளை இத்திட்டம் கொண்டுள்ளது. இச்செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக பல நலன் விரும்பிகளை அணுகி அவர்களிடமிருந்து நிதியுதவி பெற்று, அவர் இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

# 5ம் வகுப்பு மாணவர்களுக்கான உதவி

வவுனியாவில் இயங்கும் நலன்புரிநிலையங்களில் உள்ள 53 பாடசாலைகளில் 5ம் வகுப்பிலுள்ள மாணவர்கள் 4872 ஆகும். இவர்கள் 5ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டியவர்கள். இப்பரீட்சை ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருந்தது. எனவே இவர்களுடைய கல்வித் தேவைக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கான நடவடிக்கை முதலில் எடுக்கப்பட்டது.

இவர்களுக்கு 30 மாதிரிவினாத்தாள்களும் 4 வழிகாட்டி நூல்களும் வழங்கப்பட்டன. நலன்புரிநிலையங்களிலுள்ள ஆசிரியர்கள், பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இவைகளை மாணவர்களுக்கு வழங்கி வகுப்புகளை நடாத்தினர். இவர்கள் பணி மகத்தானது.

ஒவ்வொரு மாணவனுக்கும் இந்த 30 மாதிரிவினாத்தாள்களும், 4 வழிகாட்டி நூல்களும் வழங்கப்பட்டன. இவ்வகையில் ஒரு மாணவனுக்கு ரூபா 570 பெறுமதியான ஆவணங்கள் கிடைத்தன. இவைகள் மிகத் துரிதமாக ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைப்பதற்கு நலன்புரிநிலையப் பாடசாலைகளின் இணைப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு. த. மேகநாதன் உதவியுள்ளார்.

இவை தவிர, இந்த ஆவணங்கள், சுமதிபுரம், தர்மபுரம், வீரபுர நலன்புரிநியலை மாணவர்களுக்கும், நகர்ப்புறங்களில் உள்ள 7 பாடசாலையிலுள்ள மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

இவ்வகையில் 2009 ஏப்ரல் முதல் 10.08.2009 வரை ஆரம்ப கட்டமாக 1956 மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டன. ஏப்ரல் மத்தியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் 3815 பேருக்கு 2ம் கட்டமாகவும் வழங்கப்பட்டன.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியான பின்பு 507 மாணவர்கள் அகதி முகாம்களில் சித்தியடைந்திருந்தனர். இது இவர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியே.

# க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு உதவி

இதற்கான செயற்றிட்டம் 2009 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரிநிலைய பாடசாலைகளில் தரம் 11ல் கல்வி கற்கும் 6290 மாணவர்களுக்கு உதவி வழங்கப்படும். 2009ம் ஆண்டு க.பொ.த.சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் இதில் அடங்குவர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதிரிவினாத்தாள்களும் கையேடுகளும் வழங்கப்படும். வினாத்தாள்கள் தொடர்பாக நலன்புரிநிலையப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் வகுப்புகளை நடாத்துவர்.

கையேடுகள் வழிகாட்டிக் குறிப்புகளைக் கொண்டதாகவும் பயிற்சிகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு இக்கையேடுகள் தாயரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாணவனுக்கும் வழங்கப்படும் இந்த ஆவணங்களின் பெறுமதி ரூபா 900 ஆகும்.

இச்செயற்றிட்டத்தில் பின்வரும் செயற்கூறுகள் அடங்கியுள்ளன.

1. ஆசிரியர்களுக்குரிய பயிற்சிகளை வழங்குதல்
2. மாணவர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்துதல்
3. கையேடுகள் வழங்குதல் (ஏற்கனவே குறிப்பிட்டபடி)
4. செயலட்டைகள் தயாரித்து வழங்குதல்
5. மாதிரிவினாத்தாள்கள் வழங்குதல் (ஏற்கனவே குறிப்பிட்டபடி)
6. மதிப்பீடு செய்தலும், பின்னூட்டலும்

இச்செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவதில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. மேகநாதன் முன்னின்று செயற்பட்டார்.

## கல்விப் பணிப்பாளரின் பங்களிப்பு

இச்செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மேற்குறித்த பாடசாலைகளின் இணைப்பாளரும் கல்விப் பணிப்பாளருமான திரு. த. மேகநாதன் அவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. மேற்படி வினாத்தாள்களும் துரிதமாக மாணவர்களிடம் சேர்வதற்கு மிகுந்த அர்ப்பணிப்புடன் அவர் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

சிந்தனைவட்டம் உடதலவின்னையிலிருந்து புகையிரதம் மூலம் மேற்படி ஆவணங்களை வவுனியா புகையிரத நிலையத்திற்கு அனுப்புகிறது. அவற்றை புகையிரத நிலையத்திலிருந்து பொறுப்பேற்பதும், அவற்றை நலன்புரி நிலையத்தி லுள்ள 53 பாடசாலைகளுக்கு விநியோகிப்பதும், இவரது பொறுப்பாகும். பல சிரமங்களுக்கு மத்தியில் அவர் இப்பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றிவந்தார்.

அத்துடன், சுமதிபுரம், தர்மபுரம், வீரபுரம் முதலிய கிராமங்களில் உள்ள 7 பாடசாலைகளுக்கும் அவர் இவ்விநியோகத்தை மேற்கொண்டார். இன்னும் சொல்லப்போனால் திரு. மேகநாதன் புன்னியாமீனுக்கு விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த உதவித்திட்டம் உருவானது. 28.3.2009ல் அனுப்பிய கடிதம் மூலம் அவர் இவ்வேண்டுகோளை விடுத்திருந்தார். புன்னியாமீனுக்கு இது ஒரு சவாலாக இருந்தது. உடனடியாகச் செயற்பட்டு, லண்டனில் தேசம் நெட் உற்பட பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் நிதிகளைப் பெற்று அவர் இந்த உதவித்திட்டத்தைச் செயற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இவரது இச்செயற்பாடுகளுக்கு உதவுமாறு எம்மால் மீள்குடியமர்வு அமைச்சர் கௌரவ ஜனாப் ரிசாட் பதியுதீன் அவர்களுக்கு வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டுள்ளது. உதவுவதாக கூறினார்.

தற்போது இத்திட்டம் நிறைவடைந்துள்ளதாக அறிவித்தல் விடுக்கப் பட்டுள்ளது. சிந்தனை வட்டம், தேசம் நெட் க.பொ.த மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்ட்த்தின் கீழ இவர்களுக்குக் கிடைத்த நிதியினைக் கொண்டு முழுமையாக 06 மாதிரி வினாத்தாள்களை மாத்திரமே டிசம்பர் முதல் வாரம் வரை, இவர்களால் வழங்க முடியுமாக இருந்துள்ளது. இவ்வினாத்தாள்கள் அனைத்தும் தற்போது மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி நலனுக்காக இவர்களின் பணி தொடர வேண்டும் என்றும், இவர்களது பணி சிறப்புற வேண்டும் என்றும், நான் இறைவனை பிரார்த்திக்கிறேன்.

ஒப்பம்
க.தங்கேஸ்வரி
பாராளுமன்ற உறுப்பினர்
மட்டக்களப்பு மாவட்டம்.

## උතුරේ අවතැන්ව ශුභ සාධක මධ්‍යස්ථානවල රැඳී සිටින 2009 දෙසැම්බර් මස අ.පො.ස (සා.පෙ) විභාගයට සූදානම්වන ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් සඳහාවන අධ්‍යාපන සහන සේවා ව්‍යාපෘතිය.

උතුරේ අවතැන්ව ශුභ සාධක මධ්‍යස්ථානවල රැඳී සිටින 2009 දෙසැම්බර් අ.පො.ස (සා.පෙ) විභාගයට පෙනී සිටින ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් සඳහා දේසම් නෙට් හා සින්තනෙයි වට්ටම් යන ආයතනයන් විසින් ක්‍රියාත්මක කල ව්‍යාපෘතිය යටතේ, ගණිතය, ඉතිහාසය, දෙමල භාෂාව හා සාහිත්‍යය, ඉංග්‍රීසි හා විද්‍යාව යන විෂයයන් පහ සඳහා ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් 6290 දෙනෙකුට ආදර්ශ ප්‍රශ්නෝත්තර පත්‍රිකා හය බැගින් සපයා දී ඇති අතර, අපගේ මෙම ව්‍යාපෘතිය 2009. 11. 21 දින අවසන් කර ඇත.

වන්නියේ ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ගේ අධ්‍යාපනය, බාධාවකින් තොරව, පවත්වාගෙනයාම සඳහා මෙම ව්‍යාපෘතිය ක්‍රියාත්මක කරන ලදී.

අපගේ අධ්‍යාපන සහන සේවා ව්‍යාපෘතියේ ප්‍රථම පියවර ලෙස පසු ගිය අගෝස්තු මස පවත්වන ලද 5 වැනි පන්තියේ ශිෂ්‍යත්ව විභාගයට සූදානම්වූ ඉහතකී සුභ සාධන මධ්‍යස්ථානවල සිටි ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් 4872 දෙදෙනෙකුට ආදර්ශ ප්‍රශ්නෝත්තර පත්‍රිකා හා ශිෂ්‍යත්ව පොත් බෙදාදීම ඉතා සාර්ථකව ක්‍රියාත්මක කෙළෙමු. විභාග දෙපාර්තමේන්තුව මගින් නිකුත් කරන ලද ප්‍රතිපල අනුව, මෙම ශුභ සාධක කඳවුරුවල සිටි ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් 507 දෙනෙකු සමත්වී ඇත. අපගේ මෙම ව්‍යාපාතිය ආරම්භ කල විට අපගේ ඉලක්කය වූයේ සිසුන් 300 ක් පමණ සමත් කිරීමය. නමුත් අප බලාපොරොත්තුවූවාට වඩා, එම ව්‍යාපෘතියෙන් සාර්ථක ප්‍රතිපල අත්වූ අතර, අප විසින් සම්පාදනය කරන ලද, ආදර්ශ ප්‍රශ්නෝත්තර හා අත්පොත් අධ්‍යයනය කළ යාපන විදුහලේ ශිෂ්‍යයෙකු මෙම විභාගයේ (දෙමළ මාධ්‍යයෙන්) මුළු ලංකාවේම ඉහළ ලකුණු සංඛ්‍යාව වන 192 ලබා සමත්වී ඇති බැව් එම විදුහලේ විදුහල්පති හා එම ශිෂ්‍යයාද අපට දන්වා ඇත.

මෙම ශුභ සාධක මධ්‍යස්ථානවල සිටින සිසුන්ට විවිධ සංවිධාන වලින් උදව් උපකාර ලබමින් පවති. නමුත් සිසුන්ගේ අධ්‍යාපන තත්ත්වය නංවාලීම සඳහා මෙම ආයතන විධිමත් වැඩ පිළිවෙලක් ක්‍රියාත්මක කරන බැව් නොපෙනේ. මේ ගැන සිත යොමු කළ අපි, සිසුන්ගේ භෞතික පහසුකම්වලට වඩා සිසුන්ගේ අධ්‍යාපන තත්ත්වය ගැන සිතා එය නංවාලීම සඳහා අපගේ සහන සේවාව ක්‍රියාත්මක කළෙමු.

මේ යටතේ අ.පො.ස (සා.පෙ) සිසුන්ගේ යහපත උදෙසා, අධ්‍යාපනඥයින්, විශ්ව විද්‍යාල කථිකාචාර්යවරුන්, අධ්‍යාපන නිලධාරීන් හා ගුරු උපදේශක වරුන්ගේ සහාය ඇතිව විශේෂ ව්‍යාපෘතියක් සකස් කළ අතර එසේ සකස් කිරීමේදී මෙහි පහත සඳහන් කරුනු ගැන විශේෂයෙන් සැලකිලිමත්වීමු.

1. උතුරු යුද්ධය හේතු කොට ගෙන මාස 6 ක් හෝ ඊට වැඩි කාලයක් පාසැල් අධ්‍යාපනය ලබාගැනීමට නොහැකිවීම.

2. යුද්ධ කටයුතු නිසා ළමුන්ගේ මානසිකත්වයට බාධා ඇතිවීම.

3. අ.පො.ස. (සා.පෙ) විභාගයට 10 හා 11 වසරට අදාල විෂය මාලාවක් ඇතුලත්වී ඇති හෙයින් ඒවා හැදෑරීමට නොහැකිවූ සිසුන්ට ප්‍රමුඛත්වය දීම.

4. යුද්ධ වාතාවරණය හා කඳවුරුවල මුහුණපාන්නට සිදුවන අපහසුකම් හේතු කොටගෙන. අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව මගින් සංවිධාන කරනු ලබන සම්මන්ත්‍රණ හා වැඩමුළුවලට සහභාගිවීමට ගුරුවරුන්ට නොහැකිවීම.

මේවා ගැන සිත යොමුකර. 2009 දෙසැම්බර් මස අ.පො.ස. (සා.පෙ) විභාගයට පෙනී සිටීමට නියමිත සිසුන් උදෙසා. මෙම ව්‍යාපෘතිය යටතේ. සිසුන්ට හැදෑරීමට නොහැකිවූ වසර 10. හා 11 විෂය මාලාවන්ට අදාල සටහන් හා ආදශී ප්‍රශ්නෝත්තරද සැපයීමට අපි තීරණය කෙලෙමු.

අපගේ ව්‍යාපෘතිය අනුව ඉහත සඳහන් විෂයයන් 5 සඳහා ආදර්ශ ප්‍රශ්නොත්තර පත්‍රිකා 30 ක් හා 2008 වර්‍ෂයේ නව නිර්දේශය අනුව පවත්වනලද ප්‍රථම අ.පො.ස. (සා.පෙ) විභාගයේදී ඉහත කී විෂයයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර 5 ක්ද. (අලුත් විෂය නිර්දේශ මාලාවන් යටතේ පවත්වනලද ප්‍රථම විභාගය නිසා ශිෂ්‍යයන් සතුව මෙම ප්‍රශ්නපත්‍ර නොමැතිනිසා) මෙයට අමතරව නව විෂයමාලාවේ ඇති කරුණුවලට අදාල සටහන් ඒකක: 42 ක්ද සහිතව ඒකක: 77 ක් ලබාදීමට බලාපොරොත්තුවූ නමුත්. බලාපොරොත්තුවූ ආධාර කිසිවක් නොලද නිසා. එය ඒපරිදි ක්‍රියාත්මක කිරීමට නොහැකිවිය. තවද. මෙම ව්‍යාපෘතිය එලෙස ක්‍රියාත්මක කිරීමේ මූල්‍ය පහසුකම් සිත්තනෙයි වට්ටම් හා දේසම් නෙට් ආයතනවලට නොමැති නිසා. සමහර ධානපතියන්ගේ සහයෝගය අපි බලාපොරොත්තුවෙන් සිටියෙමු. අපගේ ව්‍යාපෘතිය සම්පූර්ණයෙන් ක්‍රියාත්මක කිරීමට පවුම් 30.000 ක් පමණ අවශ්‍යවී තිබුනි. ඒ අනුව එක් සිසුවෙකුට පවුම් 5 ක පමණ වටිනා විභාග පත්‍රිකා ඇතුළු සටහන් සැපයීමට අපි මුලින් තීරණය කෙලෙමු. නමුත් අප බලාපොරොත්තුවූ අන්දමට ආධාර නොලැබුනු නිසා අපි සිතූ පරිදි එය ක්‍රියාත්මක කිරීමට නොහැකි විය. අපගේ මෙම ව්‍යාපෘතිය ලාභ ලැබීමේ චේතනාවෙන් පටන් ගත් එකක් නොව. එය අසරණ ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ගේ අධ්‍යාපන තත්ත්වය බිඳ වැටීමකින් තොරව පවත්වාගෙන යාමේ පිරිසිදු සිතින් අරඹන ලද බව, ඒ පිලිබඳ යථාර්ථ වාදීව සිතන්නන්ට අවබෝධවනු නොඅනුමානය.

අපගේ මෙම ව්‍යාපෘතිය සම්බන්ධයෙන් දෙමළ ජාතික සන්ධානයේ ගරු මන්ත්‍රිණී තංගේස්වරි මෙනෙවියද. අප සමග කිපවතාවක්ම සම්බන්ධවී මෙම ව්‍යාපෘතිය ක්‍රියාත්මක කිරීමට උපරිම සහයෝගය ලබාදීමට උත්සාහ දැරූ නමුත්. ඒ සියලුම ප්‍රයත්නයන් අසාර්ථක විය. ශ්‍රී ලංකාව තුලින් මෙම ව්‍යපෘතියට කිසිම ආධාරයක් නොලැබුනු අතර. ලංඩන් හා කැනඩා යන රටවල අවතැන්වී පදිංචි ශ්‍රී ලාංකිකයන්ගෙන් පමණක් මෙහි සදහන් පරිදි පවුම් 2680 ක් වටිනා ආධාර ලැබුනි.

<u>ලන්ඩනයෙන් ලද ආධාර</u>

| | |
|---|---|
| අගිලන් පදනම් ආයතනය | පවුම් - 500 |
| කරන් සර්විස් ස්ටේපන් | පවුම් - 500 |
| ගරු පොන්. සිවසුබ්‍රමනියම් | පවුම් - 500 |
| දේසම් නෙට් | පවුම් - 500 |
| එකතුව | පවුම් 2000 කි |

<u>කැනඩාවෙන් ලද ආධාර</u>

| | |
|---|---|
| අගිලන් නවරත්කම් මයා | කැ. ඩොලර් - 500 |
| වී. තුරෙයිසිංහම් මයා | කැ. ඩොලර් - 200 |
| ජේ. සින්නයියා මයා | කැ. ඩොලර් - 100 |
| එස්. නවරත්නම් මයා | කැ. ඩොලර් - 100 |
| එන්. විශ්වලිංගම් මයා | කැ. ඩොලර් - 50 |
| එස්. ආනන්දරාජා මයා | කැ. ඩොලර් - 50 |
| වී. පරම්සෝදි මයා | කැ. ඩොලර් - 50 |
| ඒ. සන්මුගනාදන් මයා | කැ. ඩොලර් - 50 |
| පී. අරුණාසලම් මයා | කැ. ඩොලර් - 50 |
| ආර්. චන්ද්‍රරාජන් මයා | කැ. ඩොලර් - 20 |
| වී. යෝගනාදන් මයා | කැ. ඩොලර් - 20 |
| එකතුව | කැ. ඩොලර් 1190 යි |
| තැපැල් ගාස්තු අඩුකලා | කැ. ඩොලර් 10 යි |
| ලද මුදල | කැ. ඩොලර් 1180 යි |

ශ්‍රී ලංකා මුදලින් මෙහි අගය රු: 1 29.210. 00 කි.
බ්‍රිතාන්‍ය මුදලින් පවුම්: 680 කි

මේ අනුව ලන්ඩනයෙන් හා කැනඩාවෙන් ලද මුළු ආධාර මුදල පවුම් 2680 කි.

මෙම මුදලින් සිසුන් 6290 දෙනෙකුට මෙම පත්‍රිකා මුද්‍රනය කර දුනිමි. මේ සදහා අප විසින් දරන ලද මුළු වියදම පවුම් 2847 කි.

අමතර වියදම් වන පවුම් 167 හා අනෙකුත් පොදිකිරීම් හා ප්‍රවාහන වියදම් (දුම්රිය ගාස්තු හා තැපැල් ගාස්තු) සින්නතෙයි වට්ටම් ආයතනය විසින් දරණ ලදි. මේ සම්බන්ධ ගිනුම් වාර්තා. දායකත්වය ලබා දුන් අයට පොත්වශයෙන් ඉදිරිපත් කරනු ලැබේ. මෙම විස්තර ලබාගැනීමට කැමති අය පහත සදහන් ඊ මේල් අංකයට. තමන්ගේ ඊ මේල් අංකය එවන්නේනම් ඒවා යැවීමට කටයුතු කළ හැක.

අප විසින් යවනලද පෙට්ටි ප්‍රමාණය - 40 කි. පෙට්ටිවල බර ප්‍රමාණය කි. ග්‍රෑ - 761 කි.

තවද. සරණාගත කදවුරුවල සිටින සිසුන්ට අවශ්‍ය ආදර්ශ ප්‍රශ්නෝත්තර හා සටහන් සකස්කර. මෙම ව්‍යාපෘතියට සහාය දක්වන ලෙස (මුදල් ආධාර නොවේ) සියලුම දිස්ත්‍රික්කවල පිහිටි දෙමළ පාසැල් 1782 කට පුද්ගලිකව ලිපි යවා ඇත. මෙයින් ලිපි 415 ක් යාපනේ පිහිටි පාසැල්වලටත් මහනුවර හා කොළඹ පිහිටි ප්‍රසිද්ධ පුද්ගලික පාසැල්වලටත් යවා ඇත. නමුත් මෙම එකම පාසැලකින් හෝ කිසිම ප්‍රතිචාරයක් නොලද බැව් කණගාටුවෙන් ප්‍රකාශ කළයුතුව ඇත. ඒ නිසා අවසානයේදී පේරාදෙනිය විශ්ව විද්‍යාලයෙන් හා මහනුවර ප්‍රදේශයේ ප්‍රකට ගුරු මහත්ම මහත්මීන්ගෙන් අදාල ප්‍රශ්නෝත්තර හා සටහන් විස්තර ලබාගත් අතර. ඒවාට අදාල ගාස්තු සින්නතෙයි වට්ටම් ආයතනය විසින් දරණ ලදි.

අප විසින් සපයන ලද ප්‍රශ්නෝත්තර පත්‍රිකා මෙහි පහත සදහන් ගුරු මහත්ම මහත්මීන් විසින් සකස් කර දෙන ලදි.

යූ. එල්. එම්. බසීර් මයා - ගරු උපදේශක (ඉතිහාසය)
ජ්. එම්. ෆායිස් මයා - පුහුණු ගණිත ගුරු
එෆ්. ටී. රියාල් මෙනෙවිය - උපාධි ගුරු (දෙමළ)
( විභාග් ඒකකය - වත්තේගම අධ්‍යාපන කළාපය)

තවද. ගාස්තුවකින් තොරව. තමන් සතුව තිබූ ආදර්ශ ප්‍රශ්නෝත්තර පත්‍රිකා පහත සදහන් මහත්ම මහත්මීන් විසින් ලබාදෙන ලදි.

යූ. එල්. එම්. බසීර් - මයා
එම්. නූන්යමීන් - මිය
ටී. රියාල් - මෙනවිය
ජ්. එම්. ෆායිස් - මයා
සිවනාදන් - මයා (අධ්‍යාපන අධ්‍යක්‍ෂ)
එම්. අයි. නලීමා - මිය.
එම්. අයි. එස්. මුම්තාජ් - මිය
සබීරා නසාර් - මිය
(විභාග ඒකකය - වත්තේගම අධ්‍යාපන කළාපය)

මේ සියලූ දෙනාටම සින්නතෙයි වට්ටම්. දේසම් නෙට් ආදි ආයතන. සරණාගත ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් වෙනුවෙන් ස්තුතිය ප්‍රකාශ කර සිටී.

## අපගේ ව්‍යාපෘතිය අසාර්ථක වීමට හේතු

1. මූල්‍යාධාර මුලදී නොලැබීම මත. අප මුලදී තීරණය කළ ආකාරයට අගෝස්තු මස අවසානයේදී ව්‍යාපෘතිය ආරම්භ කිරීමට නොහැකිවීම.

2. ඔක්තෝබර් හා නොවැම්බර් මාසවල, සරණාගත කඳවුරුවල සිටි සිසුන් නැවත තම ගම්මානවල පදිංචි කරවීම.

3. ප්‍රධානතම හේතුව, ඉහත කී පුද්ගලයින් ගෙන් හා ආයතනවලින් හැර වෙනත් කිසිම මූල්‍යමය ආධාර නොලැබීම.

කෙසේ වෙතත් මෙලෙස සුළු වශයෙන් හෝ උපකාර කිරීමට ලැබීම අපගේ භාග්‍යයක් ලෙස සලකමු. මෙම ව්‍යාපෘතිය මගින් එක් සිසුවකුට පවුම් 5 ක් වටිනා ආධාර ලබාදීමට අප මුලදී බලාපොරොත්තු වුවත්, අපට අවසානයේදී හැකිවුයේ පෙන්ස 45 ක් පමණ වටිනා ආධාර ලබාදීමට පමණි. මෙ ලෙස හෝ මෙම කටයුතු කිරීමට උදව් උපකාර කළ ආයතනවලටත් විශේෂයෙන් වවුනියා නියෝජ්‍ය අධ්‍යාපන අධ්‍යක්ෂක ටී. මේගනාදන් මහතාටද අපගේ ස්තුතිය ප්‍රකාශ කර සිටිමු.

## අනාගතය සඳහාවන යෝජනා

දැනට රජය කටයුතු කරන ආකාරයට 2010 ජනවාරි 31 දිනට පෙර සුභ සාධක මධ්‍යස්ථානවල සිටින සියලුම සරණාගතයින් නැවත තම ගම්මානවල පදිංචි කිරීමට අවශ්‍ය කටයුතු සිදුවමින් පවතී. දැනටමත් කිලිනොච්චියේ පාසැල් හතරක් විවෘත කර ඇත (දෙසැම්බර් පාසැල් නිවාඩුවට පෙර, කිලිනොච්චි, මුලතිව් ප්‍රදේශවල තවත් පාසැල් විවෘත වීමට ඉඩ ඇත.)

පාසැල් නැවත විවෘත කිරීමෙන් පමණක් හෝ පාසැල්වල සංඛ්‍යාව වැඩි කිරීමෙන් හෝ සිසුන්ගේ අධ්‍යාපන තත්වය නංවාලීමට නොහැකිය. විශේෂයෙන් අවතැන්වූ දෙමළ ජනතාවත්, ලංකාවේ අනෙකුත් ප්‍රදේශවල ජීවත්වන දෙමළ ජනතාවත් වන්නි සිසුන්ගේ අධ්‍යාපනය නංවාලීමට හැකි සියලුම කටයුතු තම ව්‍යාපෘතිවලට ඇතුලත් කළ යුතුව ඇත.

විශේෂයෙන් නැවත පදිංචි කරවනලද ප්‍රදේශවල ඇති පාසැල්වල පවතින ගුරු හිගය, අවශ්‍ය සම්පත් නොමැතිවීම, ආදි අඩුපාඩු දක්නට ඇත. මෙම සිසුන්ගේ අධ්‍යාපන තත්වය නංවාලීම සඳහා අවශ්‍ය සියලූ කටයුතු ඉටු කළ යුතුව ඇත. 2010 වසර වන විට සහන සේවා ගම්මානවල සිසුන් යනුවෙන් නොව, නැවත පදිංචි කරනලද ශිෂ්‍යයන් ලෙස පස්වැනි පන්තියේ ශිෂ්‍යත්ව විභාගය, අ.පො.ස. (සා.පෙ.) හා අ.පො.ස. (උ.පෙ) යන රජයේ විභාගවලට සිසුන් සූදානම් කරවීමේ ව්‍යාපෘති ක්‍රියාත්මක කළයුතුව ඇත. මෙය අප කාගේත් යුතුකම හා වග කීමද වේ.

විවේචන කිරීම පහසුය. පුවත්පත්වල වාර්තා පලකිරීමද පහසුය නමුත්, නිර්මාණශීලී ව්‍යපෘතියක් ක්‍රියාත්මක කිරීමේදී එයට සහයෝගය දැක්වීම ඉතාම දුර්වලව පවතී. මෙය සත්‍යයෙකි.

සරණාගත කදවුරුවල සිටින, තව නොබෝ දිනකින් තම ගම්මානවලට යන මෙම සිසුන්ගේ අධ්‍යාපන තත්ත්වය නංවාලීමට විධිමත්ව කටයුතු නොකර, මේ ගැන කථා කරමින් කාලය නාස්ති කිරීමෙන් සිදුවන්නේ සිසුන්ගේ අධ්‍යාපන තත්ත්වය පිරිහී තවත් වසර කීපයක් ආපස්සට තල්ලුවී යාම පමණි. එවැනි තත්ත්වයක් උදාවුවහොත්, මෙරට පුරවැසියන් වශයෙන් අපට පසුතැවිලි වීමට සිදුවනු නියතය.

ටී. ජෙයබාලන්
ප්‍රධාන කර්තෘ
දේසම් නෙට්
තැ.පෙ. 35806
ලන්ඩන්
E113 JX
එක්සත් රාජධානිය
www.thesamnet.co.uk

කලාභූෂණ පී. එම්. පුන්නියමීන්
කලමනාකරණ අධ්‍යක්ෂ
සී. වී. ප්‍රකාශක පුද්ගලික සමාගම
අංක 14, උඩතලවින්න මඩිගේ,
උඩතලවින්න - 20802.
ශ්‍රී ලංකා
දුරකථනය:- 0094812493746
0094812493892
pmpuniyameen @ yahoo.com

# வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம் 2009

வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான - தேசம்நெட், சிந்தனைவட்ட கல்வி நிவாரண செயற்றிட்டத்தின் கீழ் கணிதம், வரலாறு, தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய ஐந்து பாடங்களுக்குமான 06 மாதிரி வினாத்தாள்களை உள்ளடக்கி: 6290 மாணவர்களுக்கும் வழங்கியுள்ளதுடன், தனது 2009 வருடத்துக்கான நிவாரண செயற்றிட்டத்தை 2009. 11. 21ம் திகதி நிறைவு செய்து கொண்டது.

வன்னி மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படையக் கூடாது என்ற நீண்டகால அடிப்படையைக் கருத்திற் கொண்டு சிந்தனைவட்டமும், தேசம்நெற் உம் கல்வி நிவாரண செயற்றிட்ட செயற்பாடுகளை முன்னேடுக்கத் திட்டமிட்டு சில நடவடிக்கைகளை மேற்கொண்டன.

முதற் கட்டமாக தரம் 05 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு எம்மால் மேற்கொள்ளப்பட்ட கல்வி நிவாரண செயற்றிட்டம் எமக்குப் பூரண வெற்றியைத் தந்தது. குறிப்பாக எமது முதற் திட்டத்தின் கீழ் 4872 மாணவர்கள் நேரடியாகப் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் 30 மாதிரி வினாத்தாள்களையும், 4 வழிகாட்டிப் புத்தகங்களையும் நாம் வழங்கினோம். பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறு பேறுகளுக்கமைய எமது கல்வி நிவாரண செயற்றிட்ட உதவிகளைப் பெற்ற 507 மாணவர்கள் அகதி முகாம்களில் சித்தியடைந்திருந்தமை எமக்கு மன நிறைவினையளித்தது. அதேநேரம், தரம் 5 மாணவர்களின் செயற்றிட்டத்தை ஆரம்பித்த வேளையில் 300 மாணவர்களை சித்தியடையச் செய்ய வைக்கும் இலக்கோடு தான் நாம் எமது பணியை ஆரம்பித்தோம்.

2009 ஆகஸ்ட்டில் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் எம்மால் வழங்கப்பட்ட மாதிரி வினாத்தாள்களையும், வழிகாட்டிப் புத்தகங்களையும் கற்ற வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் லோ. ஸ்ரீகர்சன் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலமாக 192 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றார். (இம்மாணவரின் கடிதப் பிரதி பின்னால் இணைக்கப்

பட்டுள்ளது.) இம்மாணவனுக்கு எம்மால் வழங்கப்பட்ட மாதிரி வினாத்தாள்களும், வழிகாட்டிப் புத்தகங்களுமே அகதி முகாம் மாணவர்கள் 4872 பேருக்கும் இலவசமாக வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

நிவாரணக் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு பல சுயேட்சை நிறுவனங்கள் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது தொடர்பாகவும், அனைத்து முகாம்களிலுமுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தைக் கருத்திற் கொண்டு பரந்துபட்ட திட்டங்களை சுயேட்சை நிறுவனங்கள் முறையாக மேற்கொண்டதாக அறியமுடியவில்லை. இதனைக் கருத்திற்கொண்டே மாணவர்களின் பௌதீக வசதிகளைவிட மாணவர்களின் கல்வித் தரத்தைக் கருத்திற் கொண்டு நாம் கல்வித் தரத்தை பாதுகாக்கும் நோக்கில் எமது கல்வி நிவாரண செயற்றிட்டங்களை முன்னெடுத்தோம்.

இந்த அடிப்படையில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் கல்வி நிலையை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டத்தினை வகுத்தோம். இத்திட்டம் வகுக்கப்படும் போது கல்வி செயற்பாட்டுடன் ஈடுபாடுடைய புத்திஜீவிகள், பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், கல்வியதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் களுடன் கலந்தாலோசித்து க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் கல்வி அபிவிருத்திற்கென விசேட திட்டமொன்றினைத் வகுத்தோம்.

எமது திட்டத்தை வகுக்கும்போது நாம் குறிப்பாக பின்வரும் விடயங்களை விசேடமாக கவனத்திற் கொண்டோம்.

01. நிவாரண கிராமங்களிலுள்ள மாணவர்கள் வடக்கின் யுத்தம் காரணமாக 6 மாதங்கள் மற்றும் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலங்களில் பாடசாலை கல்வியை பெற முடியாது இருந்தமை

02. யுத்த பாதிப்புக்களினால் மாணவர்களின் மானசீகமான பாதிப்புக்களை கருத்திற் கொண்டமை.

03. சாதாரண தர பரீட்சை தரம் 10, 11 பாடப்பரப்புக்களை உள்ளடக் கியதாக அமையும். எனவே, பாடசாலைகளில் கற்க முடியாது போன பாட அலகுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியிருந்தமை.

04. நிவாரணக் கிராமங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் கற்கும் மாணவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் பாடப் புத்தகங்கள் தவிர, மேலதிக கல்வியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டிகளோ, வசதிகளோ இல்லாதிருந்தமை.

05. புதிய பாடத்திட்டத்தைத் தழுவி இப்பரீட்சை நடைபெறுகின்ற போதிலும்கூட, யுத்த சூழ்நிலை காரணமாகவும் முகாம்களின் சில அசௌகரியங்கள் காரணமாகவும் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படக்கூடிய பயிற்சிக் கருத்தரங்குகள் முறையாக நலன்புரி கிராம ஆசிரியர்களுக்கு வழங்கப்படாதிருந்தமை.

இத்தகைய நிலைகளைக் கருத்திற்கொண்டு 2009 டிசம்பர் மாதம் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்காக வேண்டி எம்மால் நடத்தப்படக்கூடிய கல்வி நிவாரண செயற்றிட்டத்தில் மாணவர்களுக்கு கற்க முடியாது போன தரம் 10, 11 பாட அலகுகளை மையமாகக் கொண்ட குறிப்பேடுகளையும், மாணவர்கள் அரசாங்கப் பரீட்சையை இலகுவான முறையில் எதிர்கொள்வதை கருத்திற் கொண்டும் பரீட்சைப் பற்றிய விளக்கத்தை வழங்கக்கூடிய வகையில் மாதிரி வினாத்தாள்களையும் வழங்கத் தீர்மானித்தோம்.

எமது திட்டப்படி மேற்குறிப்பிட்ட 5 பாடங்களுக்கும் 30 மாதிரி வினாத்தாள்களையும், 2008ஆம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க வினாத்தாள் 5 ஐயும் (இம்மாணவர்களிடம் புதிய பாடத்திட்டத்தின் கீழ் இலங்கையில் முதலாவதாக நடைபெற்ற 2008 டிசம்பர் அரசாங்க வினாத்தாள்கள் கைவசமிருக்கவில்லை.) இவற்றுக்கு மேலதிகமாக புதிய பாடத்திட்டத்தில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள புதிய விடயங்களை உள்ளடக்கிய 42 குறிப்பேடுகளையும் வழங்கத் திட்டமிட்டிருந்தோம். எமது நிவாரண உதவிகள் ஒரு சில நிவாரணக் கிராம மாணவர்களுக்கு மாத்திரம் போய்ச் சேராமல் வவுனியா நிவாரணக் கிராமங்களில் உள்ள 6290 மாணவர்களுக்கும் சென்றடையக் கூடிய வகையிலே திட்டங்களை தீட்டினோம்.

மேலும் நிவாரணக் கிராமங்களில் உள்ள மாணவர்கள் மீள்குடியமர்த் தப்படுமிடத்து அந்த மாணவர்களுக்கு எமது மாதிரி வினாத்தாள்களையும், பாட அலகுகளை மையமாகக் கொண்ட குறிப்பேடுகளையும் வழங்கும் போது மீள்குடியமர்த்தப்படும் இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும், விசேட ஒழுங்குகளை செய்தோம்.

அதேநேரம், மாதிரிவினாத்தாள்கள், அரசாங்க வினாத்தாள்கள், கையே டுகள் என 77 அலகுகளாக வகுத்து இவற்றின் அச்சீட்டுக்கான தனித்தனி அச்சீட்டு செலவு விபரங்களையும் பகிரங்கமாக வெளிப்படுத்தினோம்.

இவ்விடத்தில் சில உண்மைகளை வெளிப்படையாக குறிப்பிட வேண்டிய ஒரு கட்டாயப்பாடுண்டு. இத்திட்டத்தை மூலமாக முன்னெடுத்த சிந்தனைவட்டம் அமைப்போ தேசம்நெற் அமைப்போ பாரியளவில் நிதியினைக் கொண்டுள்ள நிறுவனங்களல்ல. இதனால் எமது திட்டத்தை நடைமுறைப்படுத்த சில பரோப காரிகளின் உதவியைப் பெற வேண்டிய நிலையிலேயே எமது முழுமையான திட்டத்தை அவர்களிடம் வழங்கி உதவிகள் கோரினோம். கிட்டத்தட்ட எமது

முழுமையான செயற்றிட்டத்தை நிறைவேற்ற எமக்கு சுமார் 30 ஆயிரம் பவுண்கள் தேவைப்பட்டன. கிட்டத்தட்ட ஒரு மாணவனுக்கு 5 பவுண்களுக்குட்பட்ட ஒரு தொகையை ஒதுக்கீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டு மேற்படி திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருந்தோம். ஒரு மாணவனுக்கு நாம் ஒதுக்கிய 5 பவுண்களிலிருந்தே 30 மாதிவினாத்தாள்களையும் 5 அரசாங்க வினாத்தாள்களையும் 42 வழிகாட்டி குறிப்பேடுகளையும் வழங்க தீர்மானித்திருந்தோம். எனவே, அறிவுபூர்வமாக சிந்திக்கும் எவருக்கும் இது இலாப நோக்கத்தைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமன்று என்பதையும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு திட்டமிட்ட செயற்பாடு என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் பல தனவந்தவர்களுடனும், அரசியல் வாதிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தினோம். இலங்கையில் ஒருவரிடமும் நாம் பணமாகக் கேட்கவில்லை. மாறாக எமது திட்டத்தை வழங்கி குறிப்பிட்ட மாதிரிவினாத்தாள்களை அல்லது வழிகாட்டிப் புத்தகங்களில் ஓரிரண்டை அச்சிட்டு தரும்படி மாத்திரமே கோரினோம். எமது திட்டத்தை நன்றாக ஆராய்ந்து எம்முடன் பல தடவைகள் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வி தங்கேஸ்வரி அவர்கள் தொடர்புகொண்டு அவரும் உச்ச முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வியிலே முடிந்துள்ளதுடன், இலங்கையிலிருந்து எதுவிதமான உதவிகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

## லண்டனிலிருந்து எமது இத்திட்டத்துக்கு உதவிகள் வழங்கியவர்கள்

| | |
|---|---|
| அகிலன் பவுண்டேஷன் (லண்டன்) | 500 பவுண்கள் |
| கரன் சேவிர்ஸ் ஸ்ரேசன்ஸ் (லண்டன்) | 500 பவுண்கள் |
| திரு பொன் சிவசுப்ரமணியம் (லண்டன்) | 500 பவுண்கள் |
| தேசம்நெற் (லண்டன்) | 500 பவுண்கள் |
| லண்டனிலிருந்து மொத்தமாகக் கிடைத்த தொகை | 2000 பவுண்கள் |

## கனடாவிலிருந்து எமது இத்திட்டத்துக்கு உதவிகள் வழங்கியவர்கள்

(கனடாவில் திரு. Ahilan Navaratnam அவர்கள் எமது திட்டத்திற்கு தானாக முன்வந்து பூரண ஒத்துழைப்பினை வழங்கினார்.)

| | |
|---|---|
| Ahilan Navaratnam | 500.00. CDN |
| Vijayakaran Thuraisingam | 200.00. CDN |
| Jeyanandan Sinniah | 100.00 CDN |
| Seenivasagam Navaratnam | 100.00. CDN |
| N.Visuvalingam | 50.00. CDN |
| Sriskandarajah Anandarajah | 50.00. CDN |

| | |
|---|---|
| Velupillai Pramsothy | 50.00. CDN |
| Aiyadurai Shanmuganathan | 50.00. CDN |
| P.Arunasalam | 50.00. CDN |
| R.Chandrarajan | 20.00. CDN |
| V.Joganathan | 20.00. CDN |

Total - 1190.00. CDN

அனுப்புதல் செலவு 10.00 CDN

இலங்கைக்கு அனுப்பப்பட்ட மொத்தத் தொகை 1180.00 CDN

இலங்கை நாணயப்படி 129, 210.00 ரூபாய்களாகும்.

பிரித்தானிய நாணய அலகுப்படி 680 பவுண்களாகும்.

இத்திட்டத்திற்கு லண்டனிலிருந்தும் கனடாவிலிருந்தும் கிடைத்த மொத்தத் தொகை 2680 பவுண்களாகும். இப்பணத்தொகையைக் கொண்டே நாம் 6290 மாணவர்களுக்குமான அச்சீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

எம்மால் அனுப்பப்பட்ட 6 மாதிரி வினாத்தாள்களுக்கும் மொத்த அச்சீட்டுச் செலவு 2847 பவுண்கள்.

மீதமான 167 பவுண்களை சிந்தனைவட்டம் பொறுப்பேற்றுக் கொண்டது. இச்செலவீனங்களுக்கு மேலாக போக்குவரத்து, பொதியிடல் போன்ற செலவு களையும் சிந்தனைவட்டம் பொறுப்பேற்றுக் கொண்டது. இது குறித்த பூரணமான கணக்கறிக்கை எமது செயற்றிட்டத்துக்கு பங்களிப்பு செய்தோருக்கு புத்தக வடிவில் அனுப்பப்படும். அக்கணக்கறிக்கையைப் பெற விரும்புவோர்கள் பின்வரும் ஈமெயில் முகவரிக்கு தங்களது முகவரிகளை அனுப்புமிடத்து தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எம்மால் அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை 40

எம்மால் அனுப்பப்பட்ட பெட்டிகளின் நிறை 761 கிலோகிராம்கள்.

அதேநேரம், இவ்விடத்தில் மற்றும் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். வன்னி அகதி முகாம்களிலுள்ள மாணவர்களுக்கு மாதிரிவினாத்தாள்கள் வழிகாட்டிக் குறிப்பேடுகள் தயாரித்துத் தரக்கூடிய உதவியைக் கோரி (பண உதவியல்ல) மொத்தம் 1782 பாடசாலைகளுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்களை அனுப்பினோம்.

அக்கடிதங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 415 பாடசாலைகளுக்கும், இலங்கையில் சகல மாவட்டங்களைச் சேர்த்த தமிழ் பாடசாலைகளுக்கும்,

கண்டியிலும், கொழும்பிலும் பிரபல்யம் மிக்க தனியார் கல்வி நிறுவன ஆசிரியர களுக்கும் அனுப்பி வைத்தோம். ஆனால், வேதனைக்குரிய விடயம். ஒரு பாடசாலை யிலிருந்தாவது அல்லது தனியார் கல்வி நிறுவன ஆசிரியரிடமிருந்தாவது எமக்கு ஒரு பதிலாவது வரவில்லை. இதனால் பேராதனைப் பல்கலைக்கழக மற்றும் கண்டி பிரதேச புகழ்பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மாதிரிவினாத்தாள்களையும், வழிகாட்டிக் குறிப்பேடுகளையும் பெற்றுக் கொண்டோம். குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை சிந்தனைவட்டமே பொறுப்பேற்றுக் கொண்டது.

இச்சம்பவத்தை வைத்து நோக்கும்போது வன்னி முகாம்களிலுள்ள மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த எம்மவர்கள் கதைப்பதன் அர்த்தத்தை எம்மால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. விசேடமாக பணமாகவன்றி தாம் ஏற்கனவே தயாரித்த மாதிரிவினாத்தாள்கள் வழிகாட்டிக் குறிப்பேடுகளையும்கூட தருவதற்கு இவர்கள் முன்வராமை இவ்விடத்தில் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமே. நாம் வழங்கிய மாதிரிவினாத்தாள்களை பின்வரும் பெருந்தகைகள் எமக்குத் தயாரித்துத் தந்தனர்.

ஜனாப் யூ.எல்.எம். பஷீர் - வரலாறு ஆசிரிய ஆலோசகர்
திருமதி எம்.எச்.எஸ். மஸீதா - பயிற்றப்பட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர்
ஜனாப் ஏ.எம். பாயிஸ் - பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்
செல்வி தஸ்மின் ரியால் - தமிழ் பட்டதாரி ஆசிரியர்
வத்தேகம கல்வி வலய பரீட்சைப் பிரிவு

மேலும், எம்மால் வழங்காமல் கைவசமுள்ள மாதிரி வினாத்தாள்களையும், வழிகாட்டிக் குறிப்பேடுகளையும் தயாரித்துத் தந்த பெருந்தகைகள்.

ஜனாப் யூ.எல்.எம். பஷீர்
திருமதி மஸீதா புன்னியாமீன்
செல்வி தஸ்மின் ரியால்
ஜனாப் ஏ.எம். பாயிஸ்
திரு. சிவநாதன் (கல்விப் பணிப்பாளர்)
திருமதி. எம்.ஐ. நளீமா
திருமதி. எம்.ஐ.எஸ்.மும்தாஜ்
திருமதி. சாபிரா நஸார்
வத்தேகம கல்வி வலய பரீட்சைப் பிரிவு

இவர்களுக்கு சிந்தனைவட்டமும் தேசம்நெற் உம் வன்னி முகாம் அகதிகள் சார்பில் தமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

எமது திட்டம் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்:

1. ஏற்கனவே திட்டமிட்டபடி ஆகஸ்ட் மாத இறுதியில் எம்மால் ஆரம்பிக்க முடியாமல் போனமை (இதற்கு மூல காரணம் ஆரம்பத்தில் எமக்கு நிதியுதவிகள் கிடைக்காமையே)

2. ஒக்டோபர் நவம்பர் மாதங்களில் முகாம்களில் இருந்த மாணவர்கள் மீள் குடியமர்த்தப்பட்டமை (இம்மாணவர்கள் மீள்குடியமர்த் தப்பட்டாலும்கூட எம்மால் அனுப்பப்பட்ட மாதிரிவினாத்தாள்கள் மீள்குடியேறிய இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.)

3. பிரதான காரணம் மேற்குறிப்பிட்டவர்களைத் தவிர வேறு எவ்விதமான நிதியுதவிகளும் எமக்குக் கிடைக்காமை.

எவ்வாறாயினும் ஓரளவுக்காகவது ஒரு சிறிய உதவியாவது வன்னி மாணவர்களுக்கு செய்யக் கிடைத்தமையை ஒரு பேறாகவே கருதுகின்றோம். ஆரம்பத்தில் இத்திட்டத்தின் கீழ் ஒரு மாணவனுக்கு 5 பவுண்கள் பெறுமதிமிக்க மாதிரிவினாத்தாள்களையும், கையேடுகளையும் வழங்க திட்டமிட்டிருந்தாலும்கூட, எமது திட்டம் நிறைவடையும் நேரத்தில் எம்மால் ஒரு மாணவனுக்கு வழங்க முடியுமாக இருந்த தொகை 45 பென்ஸ்கள் மாத்திரமே.

## எதிர்கால ஆலோசனைகள்:

தற்போது அரசாங்கம் செயற்பட்டுவரும் முறையில் அரசாங்கம் 2010 ஜனவரி 31க்கு முன்பு முகாம்களிலுள்ள அனைத்து அகதிகளையும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போதைய நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. (டிசம்பர் விடுமுறைக்கு முன்பாக கிளிநொச்சி முல்லைத் தீவு பிரதேசங்களில் மேலும் பல பாடசாலைகள் திறக்கப்படலாம்)

பாடசாலைகளைத் திறப்பதால் மாத்திரம் அல்லது திறந்த பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் மாத்திரம் மாணவர்களின் கல்வித் தரம் உயர்ந்துவிட மாட்டாது. விசேடமாக புலம்பெயர் தமிழர்களும், இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் வாழக்கூடிய தமிழ் மக்களும் வன்னி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியவற்றையும் தமது செயற்றிட்டங்களில் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

குறிப்பாக மீள்குடியமர்த்தப்பட்ட இடங்களிலுள்ள பாடசாலைகள் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளதாகவுள்ளன. போதிய ஆசிரியர்கள் இல்லை. போதிய வளங்கள் இல்லை. உள்ள வளங்களைக் கொண்டே தற்போதைய கல்வி நிலை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நிச்சயமாக இத்தகைய மாணவர்

களின் கல்வி நிலையை உயர்த்த திட்டங்களைத் தீட்ட வேண்டியது அவசியம். எமது அனுபவங்களை வைத்து நோக்குமிடத்து அகதிமுகாம்களில் வாழ்ந்த மாணவர்களுக்கு தரம் 05 பாடப்பரப்பை மையப்படுத்தி எம்மால் ஒரு நிறைவான வழிகாட்டலைக் காட்ட முடிந்தது. இதன் விளைவாக 507 மாணவர்கள் சித்தியடைந்தனர். 2010ஆம் ஆண்டில் நிவாரணக் கிராம மாணவர்கள் என்பதை விட மீள்குடியமர்த்தப்பட்ட மாணவர்கள் என்றடிப்படையில் தரம் 05 புலமைப்பரிசில், க.பொ.த.சாதாரண தரம், க.பொ.த. உயர்தரம் போன்ற மூன்று அரசாங்கப் பரீட்சைகளுக்கும் மாணவர்களை தயார்படுத்தக்கூடிய திட்டங்களை செயற்படுத்துதல் வேண்டும். இது உங்கள் பொறுப்பு.

விமர்சனங்கள் மேற்கொள்வது இலகு. பத்திரிகை அறிக்கைகள் வெளியிடுவது இலகு. ஆனால், ஆக்கபூர்வமான ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அதற்கு மானசீகமான முறையில் ஒத்துழைப்பு வழங்குவது மிகக் குறைவு. இது யதார்த்தம். எனவே பேசிப்பேசிக் காலத்தைக் கழிக்காமல் நிலையான திட்டமொன்றின் கீழ் இணையுமிடத்து வன்னி மாணவர்களின் கல்வித்தரத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும். அப்படியில்லாவிடில் அம்மாணவர் களின் கல்விநிலை இன்னும் சில ஆண்டுகள் பின்நோக்கித் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததே.

அவ்வாறு ஏற்பட்டால் என்றோ ஒரு நாள் நாம் கைசேதப்பட வேண்டிய நிலை உருவாகும்.

*கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்* -
**B.A (Cey) Dip in Journ (Ind) SLTS**
**முகாமைத்துவப் பணிப்பாளர்:**
**சிந்தனைவட்டம்**
**25.[illegible]2009**
**pmpuniyameen@yahoo.com**

**த. ஜெயபாலன்**
**பிரதம ஆசிரியர்**
**தேசம்நெற்**
**த.பெ.இ. 35806 லண்டன்**
**E113JX**
**ஜக்கிய இராச்சியம்**
**www.thesamnet.co.uk**

## PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH - WHO ARE PREPARING FOR THE G.C.E. (O/L) EXAM IN DECEMBER - 2009

1. Under the above project, sponsored by THESAM NET AND C.V. (PUBLISHERS) which was concluded on the 21st November, 2009, we have distributed six question papers with answers covering five subjects (Maths, History, Tamil Language and Literature, English and Science ) to 6290 students in all welfare centres and resettled villages.

2. We initiated this project, with the intention of improving the educational standard of this children which was badly affected due to the northern war.

3. Under stage No 1, We successfully launched our services for the benefit of year 5 scholarship students. Under this project, 4872 students were directly benefited. According to the results issued by the Department of Examination, 507 students who received our service, were successful. When we initiated our project, we had a target of about 300 students to be qualified. We are very glad to state that we have been informed that a student who got the highest marks in Tamil stream in the island ( 192) is a boy who had followed our same books and notes which were distributed to the displaced students in the above centres.

4. A number of non – governmental organizations have been engaged in providing various services to these displaced students. But, we regret to state, that no formal projects have been initiated to improve the Educational Standards of these students.

5. In order to assist the poor children who prepare for the G.C.E. (O/L) this December, we planned this project after consulting the Educationists, University Lecturers, Education Officers and Master Teachers.

When we planned our above project, we had to consider the following factors

I. The students who could n't attend schools for a period of six months and above.

II. Weakened Mentality of these students

III. G.C.E. (O/L) Exams consist of the syllabuses of year 10 & 11, so we had to give special priority for the syllabuses which they couldn't cover in schools.

IV. The teachers who are in these relief villages didn't have the opportunity of getting additional facilities or guidance except the free books issued to the students by the government.

V. Due to war conditions and other difficulties prevail in these villages, where these welfare centres are located, the teachers were unable to attend the seminars and workshops conducted by the Education Department though these Exams are conducted according to new syllabuses.

Considering the plight of the students and the teachers, we decided to donate the model question papers with answers with necessary instructions for the G.C.E. (O/L) students as they could not complete their lessons in year 10 and 11. According to our projects we had decided to distribute 77 units comprising of 30 model question papers with answers, 5 question papers issued at the G.C.E. (O/L) exam year 2008 under the new syllabus and 42 instruction notes respectively, hoping that we would receive donation from members of parliament, various other organizations and donors. But, we regret to state that we did not receive any donation within the island. We wanted £ 30,000 – for our projects. Although we had decided to distribute five pounds worth of articles to each student, we were able to provide only 42 pence worth of question papers as we received only £ 2680 worth of donation from donors in London and Canada. As a result our project was an utter failure. We did not seek any profit or gain from our project. This was purely for the sake of our children.

To implement our project, we did not seek any financial assistance in Sri Lanka. But we sought assistance only to provide model question papers or to get some papers printed. We take this opportunity to thank Miss. Thangeswari - a Honourable member of parliament, who tried her utmost to assist us. But all the efforts made in Sri Lanka were utter failure. We did receive nothing from Sri Lankans for this project.

## FINANCIAL HELP RECEIVED FROM DONORS FROM LONDON

| | |
|---|---|
| Akilan Foundation | £ 500 |
| Karan Service Station | £ 500 |
| Mr. Pon Siva Subramaniam | £ 500 |
| M/s Thesam Net | £ 500 |
| Total Donation | £ 2000 |

## HELP RECEIVED FROM CANADA

| | |
|---|---|
| Mr. Ahilan Nawaratnam | 500 |
| Mr. V. Thuraisinham | 200 |
| Mr. J. Sinniah | 100 |
| Mr. S. Nawaratnam | 100 |
| Mr. N. Visuwalingam | 50 |
| Mr. S. Anandarajah | 50 |
| Mr. V. Paramsothy | 50 |
| Mr. A. Shanmuganathan | 50 |
| Mr. P. Arunasalam | 50 |
| Mr. R. Chandrarajan | 20 |
| Mr. V. Jeganathan | 20 |
| Total Canadian | $ 1190 |
| Less Postal Charges | 10 |
| | $ 1180 |

Which is equallent to Rs: 129,210/= Sri Lankan Rupees.

Which is equallent to £ 680

The financial assistance received for this project from donors in London and Canada was amounting to £ 2680 .

The total cost for printing the question papers was amounting to £ 2847. and the balance of £ 167 was borne by C.V. Publishers. The details of these accounts will be furnished to our contributors in book form later. Those who are willing to obtain these details are kindly requested to contact the Email No pmpuniyameen @ yahoo.com

These papers were sent in 40 boxes, weighed 761 kgs.

It is with regret that I wish to state that although I mailed 1782 letters to Tamil Schools in the island ( including 415 Schools in Jaffna and prominent private Schools in Kandy & Colombo) requesting model question papers with notes, there were no response at all. As a result we had to obtain these model question papers and notes from the University of Peradeniya and some renowned teachers in Kandy.

From this poor response, we can observe the interest shown by our people in the education of our innocent displaced children. This is a matter which needs serious consideration.

I wish to thank the following teachers for preparing the model question papers for our project.

- Mr. U.L.M. Basheer - Teacher Advisor (History)
- Mr. A.M. Faiz - Trained Teacher (Maths)
- Miss. Thazmeem Riyal - Graduate Teacher (Tamil)
- ( Examination Unit - Zonal Education Office Wattegama)

Furthermore the following Teachers and Mr. Sivanathan (D.E) have generously supplied the model question papers and notes which they had possessed. But we couldn't print these papers due to lack of funds.

Mr. U.L.M. Basheer
Mrs. M. Punyameen
Miss Thasmin Riyal
Mr. A.M. Faiz
Mr. Sivanathan (Director of Education)
Mrs. M. I. Naleema
Mrs. M.I.S. Mumtajh
Mrs. Sabira Nazaar (Examination Unit Zonal Education Office Wattegama)

C.V. Publishers and Thesam Net wish to extend our sincere thanks to them on behalf of the displaced students.

## REASONS FOR THE FAILURE OF OUR PROJECTS

1. Failure to commence the project at the end of August as planned, due to lack of financial assistance.
2. Resettlement of the students in October and November ( Despite of this resettlement) we dispatched model question papers to resettlement villages
3. We didn't receive any aid from Sri Lanka except the aid received from London & Canada. Although we expected about £ 30,000 we received only £ 2680. Though we had planned to furnish £ 5 worth of Materials to each student, we were able to distribute items worth only 45 pences.

However we are glad to render even this meager assistance to these children.

## FUTURE PLANS

Now the government intends to complete the resettlement programme before the end of January next year. Now four Schools have been reopened in Killinochchi District and some more schools are to be opened in Killinochchi and Mullaitivu Districts before the school vacation in December.

The Educational standard of these students cannot be improved only by opening the schools. Therefore the displaced Tamil citizens who are living abroad and the Tamils living in different parts of the island must take necessary steps to improve the educational standard of the Vanni students.

Most of the schools in the resettlement areas are lack of some facilities such as insufficient staff and resources etc. Available resources are being utilized. Further action will have to be taken to prepare the students for the Government exam namely year 5 Scholarship Exam, G.C.E. (O/L) and G.C.E. (A/L) in the resettled areas. This is the responsibility of all.

It is easy to make criticism and issue newspaper statements. But there is very poor response when humanitarian activities are launched. This is the truth.

Therefore unless we do not take appropriate action to improve the educational standard of these poor and innocent students, there will be no doubt that their education will deteriorate further. If it, happens so, we all will have to repent one day.

Before the conclusion, I wish to extend our sincere thanks to all organizations and individuals who generously contributed towards this virtuous service and to Mr. T. Megananthan, the Deputy Director of Education and the Chief Co-ordinator of these schools located in the welfare centres in the North and his staff in distributing these items.

2009/12/10

Kalapooshana
P. M. PUNIYAMEEN
14, Udatalawinna, Madige
Udatalawinna,
Sri Lanka

T. Jayabalan
Chief Editor
Thesam Net
P.O. Box 35806
London
E113 JX
U.K
www.thesamnet.co.uk

Kalabushana P.M. Punyameen,
Managing Director,
C.V. Publishers (Pvt) Ltd.,
No: 14, Udatalawinna Madige,
Udatalawinna - 20802
Sri Lanka
Tel: 0094812493746
0094812493892
Email – pmpuniyameen @ yahoo.com

කලාප අධ්‍යාපන කාර්‍යාලය.
තුනුක්කායි.
2009 දෙසැම්බර් 09.

කලාභූෂණ පී.එම්. පුන්නියාමීන්.
" සින්තනෙයි වට්ටම් "
උඩතලවින්න.

**<u>අවතැන්ව වවුනියා ශුභ සාධක මධ්‍යස්ථානවල පිහිටි පාසැල්වල හා සහන ගම්මානවල රැඳී සිටින අ.පො.ස. (සා.පෙ) සිසුන් සඳහාවූ ආදර්ශ ප්‍රශ්න පත්‍රිකා ලැබුනු බව දැන්වීම.</u>**

ඉහත සඳහන් කාරණය සම්බන්ධයෙන් අපගේ ඉල්ලීම පිලිගෙන ඔබගේ සින්තනෙයි වට්ටම් හා ලන්ඩන් දේසම් නෙට් වෙබ් අඩවිය එක්ව අපවෙත එවනලද ආදර්ශ ප්‍රශ්න පත්‍රිකා නිසි ලෙස මේ වසර අ.පො.ස (සා.පෙ) විභාගයට පෙනී සිටින ශුභ සාධක මධ්‍යස්ථානවල හා සහන ගම්මානවල පදිංචි සිසුන්ට බෙදාදුනිමු.

තවද. සිසුන් එම ප්‍රශ්න පත්‍රිකාවලට උත්තර සැපයීමෙන් පසු උත්තර පත්‍රිකා හරි වැරදි බැලීමෙන් අනතුරුව ඒ සම්බන්ධ සාකච්ඡාකර සිසුන්ට අවශ්‍ය උපදෙස්ද ලබාදෙනලදී.

මෙලෙස. ඔබ විසින් දෙනලද ප්‍රශ්න පත්‍රිකා ස්තූති පූර්වකව භාරගෙන ඒවා සිසුන්ට බෙදාදුනිමු. මේ සම්බන්ධයෙන් අවතැන්වූ ජනතාව. විදුහල්පතිවරු. ගුරුවරු. සිසුන් හා කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂවරුන් (කිලිනොච්චි. මූලතිවු. තුනුක්කායි. හා වවුනියා උතුර) වෙනුවෙන් අපගේ ස්තූතිය මෙයින් පුදකර සිටිමු.

<u>අපි ලබාගත් ප්‍රශ්න පත්‍රිකා පිළිබඳ විස්තර</u>

ප්‍රශ්න පත්‍ර අංක: 1 (ඉතිහාසය) - පිටපත් - 6290
ප්‍රශ්න පත්‍ර අංක: 2 (විද්‍යාව) - පිටපත් - 6290
ප්‍රශ්න පත්‍ර අංක: 3 (දෙමළ) - පිටපත් - 6290
ප්‍රශ්න පත්‍ර අංක: 4 (ඉංග්‍රිසි) - පිටපත් - 6290
ප්‍රශ්න පත්‍ර අංක: 5 (ගණිතය) - පිටපත් - 6290
ප්‍රශ්න පත්‍ර අංක: 6 (ඉතිහාසය) - පිටපත් - 6290

2009 වසරේ සිසුන් අවතැන්වූ අවස්ථාවේදී ඔබ ලබාදුන් අධ්‍යාපන සහන සේවාවන් මෙන්. 2010 වර්ෂයේදී. නැවත පදිංචි කරනලද අ.පො.ස (උ.පෙ) අ.පො.ස (සා.පෙ) හා පස්වැනි පන්තියේ ශිෂ්‍යත්ව විභාගවලට පෙනී සිටින සිසුන්ටද අධ්‍යාපන සහන සේවාවන් ලබාදෙන මෙන් කාරුණිකව ඉල්ලා සිටිමු.

අ. කලේ.
ටී. මේඝනාදන්.
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂ.
තුනුක්කායි.

வலயக்கல்வி அலுவலகம்.
துணுக்காய்.
09.12.2009

கலாபூசணம் பீ. எம், புன்னியாமீன்.
சிந்தனை வட்டம்.
உடதலவின்ன.

### இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளிலும், நிவாரணக் கிராமங்களிலும் தங்கியிருக்கும்: க. பொ. த (சா/த) மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களைப் பெற்றுக் கொண்டமை.

மேற்படி செயற்பாடு தொடர்பாக எம்மால் தரப்பட்ட கோரிக்கையை ஏற்று தங்கள் சிந்தனை வட்டமும், லண்டன் தேசம் நெட் இணையத்தளமும் இணைந்து அனுப்பி வைத்திருந்த மாதிரி வினாத்தாள்களைப் பெற்று உரிய ஒழுங்கின் பிரகாரம் இவ்வாண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் நலன்புரி நிலைய மாணவர்களுக்கும், மீள்குடியேற்றப்பட்ட மாணவர்களுக்கும் விநியோகித்துள்ளோம்.

அத்துடன் மாணவர்கள் வினாத்தாள்களுக்கு விடையளித்த பின், விடைத்தாள்கள் திருத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன் மாணவர்களுக்கு அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

இந்த வகையில் தங்களால் தரப்பட்ட மாதிரி வினாத்தாள்களை நன்றி உணர்வுடன் பெற்று மாணவர்களுக்கு வழங்கியுள்ளோம் என்பதுடன், இடம் பெயர்ந்த மக்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு) சார்பாக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாம் பெற்றுக் கொண்ட மாதிரி வினாத்தாள்கள்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் இல 1 | (வரலாறு) | 6290 பிரதிகள் |
| வினாப்பத்திரம் இல 2 | (விஞ்ஞானம்) | 6290 பிரதிகள் |
| வினாப்பத்திரம் இல 3 | (தமிழ்) | 6290 பிரதிகள் |
| வினாப்பத்திரம் இல 4 | (ஆங்கிலம்) | 6290 பிரதிகள் |
| வினாப்பத்திரம் இல 5 | (கணிதம்) | 6290 பிரதிகள் |
| வினாப்பத்திரம் இல 6 | (வரலாறு) | 6290 பிரதிகள் |

2009ம் ஆண்டில் மாணவர்கள் புலம்பெயர்ந்த நேரத்தில் தங்களால் திட்டமிட்ட அடிப்படையில் வழங்கிய கல்வி நிவாரண உதவிகளைப் போல 2010ம் ஆண்டிலும் மீள்குடியமர்த்தப்பட்ட க.பொ.த உ/த, சா/த, மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்தி உதவிகளை வழங்குமாறும் கோரி நிற்கின்றோம்.

த.மேகநாதன்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,

துணுக்காய்.

T.MEGANATHAN
Zonal Director of Education
Zonal Education Office
Thunukkai
Mankulam.

Zonal Education Office
Thunukkai.
09th December, 2009

Kalabushana P.M. Punyameen,
" CINTHANAI VATTAM"
Udatalawinna.

**RECEIVING OF MODEL QUESTION PAPERS FOR THE DISPLACED STUDENTS RESIDING IN SCHOOLS LOCATED AT THE WELFARE CENTRES AND THE RELIEF VILLAGES, WHO ARE DUE TO SIT FOR THE G.C.E. (O/L) EXAM THIS YEAR.**

We duly distributed the above question papers you had sent in response to our appeal, among the displaced students staying in the schools located in the welfare centres and the relief villages.

Question papers answered by the students were corrected and the necessary instructions were given.

So, we wish to convey our sincere gratitude to you for your kind service rendered on behalf of the displaced people, students, teachers, principals and the Zonal Directors of Education (Kilinochchi, Mulaitivu, Thunukkai and Vauniya (North)

**DETAILS OF QUESTION PAPERS RECEIVED**

| | |
|---|---|
| Question Paper No: 1 (History) | - 6290 Copies |
| Question Paper No: 2 (Science) | - 6290 Copies |
| Question Paper No: 3 (Tamil) | - 6290 Copies |
| Question Paper No: 4 (English) | - 6290 Copies |
| Question Paper No: 5 (Mathematics) | - 6290 Copies |
| Question Paper No: 6 (History) | - 6290 Copies |

We kindly request you to provide this service to the resettled students for their G.C.E. (A/L) G.C.E. (O/L) and 5th standard Scholarship Exams in the year 2010 too.

Sgd
T. Meganathan
Zonal Director of Education,
Thunukkai.

சிந்தனை வட்டம்

நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

தேசம்

International Tamil Magazine

## இணைந்து வழங்கும் இடம்பெயர் மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

## 01 வது - அனுப்பப்பட்ட பொதி

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்வி பயிலும் க.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்,

*01. அனுப்பப்பட்டவை:*

01. தமிழ்மொழியும் இலக்கியமும்

| | | |
|---|---|---|
| அ. | பகுதி I | 6400 பிரதிகள் |
| ஆ. | பகுதி II | 6400 பிரதிகள் |
| இ. | பகுதி III | 6400 பிரதிகள் |

02. புள்ளடி இடும் தாள் — 6400 பிரதிகள்

02. அனுப்பப்பட்ட திகதி: 02.11.2009
03. அனுப்பப்பட்ட புகையிரத நிலையம்: உடத்தலவின்ன
04. பெற வேண்டிய புகையிரத நிலையம்: வவுனியா
05. அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை: 04
06. மொத்த நிறை: 90 கிலோகிராம்
07. பற்றுச்சீட்டு எண்: G 957004

UDL/VNA

Railway A. B. 14

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය

இலங்கை புகையிரத சேவை

SRI LANKA RAILWAY

G 957004

ගෙවුවා/PAID

பணம்செலுத்தப்பட்டது

PARCELS AND H. ... WAYBILL

From Station: Udatalawinna

To Station: Vavuniya

Guard's Initials

Date: 2009 - 11 - 02

Train No.

(The Guards of Train must see that the entries on the Waybill Correspond with the Articles delivered to and given up by them. They must also initial the Waybill.)

| Sender | Consignee | No. | Description | Weight Kg | Paid Rs. | cts. |
|---|---|---|---|---|---|---|
| Fr. ... Ponnuswami | Megavathan | (4) | C/ ... Books | 90 kg | [illegible] | 00 |

CM009251 – 5,000(2008/06) P

**சிந்தனை வட்டம்**
நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

**தேசம்**
International Tamil Magazine

## இணைந்து வழங்கும் இடம்பெயர் மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

# 02 வது - அனுப்பப்பட்ட பொதி

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்வி பயிலும் க.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்,

*01. அனுப்பப்பட்டவை:*

01. வரலாறு

| | | |
|---|---|---|
| அ. | பகுதி 1 | 6400 பிரதிகள் |
| ஆ. | பகுதி 11 | 6400 பிரதிகள் |

02. அனுப்பப்பட்ட திகதி: 03.11.2009
03. அனுப்பப்பட்ட புகையிரத நிலையம்: உடத்தலவின்ன
04. பெற வேண்டிய புகையிரத நிலையம்: வவுனியா
05. அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை: 02
06. மொத்த நிறை: 44 கிலோகிராம்
07. பற்றுச்சீட்டு எண்: G 957006

UDL/VNA

Railway A. B. 14
(2U 10 Quad. S.T., & E.)82/07

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
SRI LANKA RAILWAY

G 957006

ගෙවිවා/PAID
பணம்செலுத்தப்பட்டது

PARCELS AND H. C. & D. WAYBILL

From Station: Udatalawinna
To Station: Vavuniya
Guard's Initials: ..........
Date: 2009-11-03
Train No.: ..........

(The Guards of Train must see that the entries on the Waybill Correspond with the Articles delivered to and given up by them. They must also initial the Waybill.)

| Sender | Consignee | No. | Description | Weight Kg. | Paid Rs. | Cts. |
|---|---|---|---|---|---|---|
| M Pariyamean | Meganadan | 02 | C/Box Books | 44kg | 210 | 00 |
| | | | | [illegible] | 25 | 00 |
| | | | | [illegible] | 20 | 00 |
| | | | | | 255 | 00 |

CM009211 - 5,000(2008/06)

சிந்தனை வட்டம்
நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

தேசம்
International Tamil Magazine

இணைந்து வழங்கும் இடம்பெயர் மாணவர்களுக்கான
கல்வி நிவாரண செயற்றிட்டம்.

## 03 வது - அனுப்பப்பட்ட பொதி

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்வி பயிலும் க.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்,

*01. அனுப்பப்பட்டவை:*

01. வரலாறு

| | |
|---|---|
| பகுதி 111 | 6400 பிரதிகள் |
| புள்ளடி இடும் தாள் | 6400 பிரதிகள் |
| இலங்கை, உலகப்படம் | 6400 பிரதிகள் |

02. விஞ்ஞானம்

| | | |
|---|---|---|
| அ. | பகுதி 1 | 6400 பிரதிகள் |
| ஆ. | பகுதி 11 | 6400 பிரதிகள் |
| | புள்ளடி இடும் தாள் | 6400 பிரதிகள் |

02. அனுப்பப்பட்ட திகதி: 06.11.2009
03. அனுப்பப்பட்ட புகையிரத நிலையம்: உடத்தலவின்ன
04. பெற வேண்டிய புகையிரத நிலையம்: வவுனியா
05. அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை: 08
06. மொத்த நிறை: 160 கிலோகிராம்
07. பற்றுச்சீட்டு எண்: G 957010

UDL/VNA

Railway A. B. 14
(2U 10 Quad. B.T., & R.)83/07

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
SRI LANKA RAILWAY

ගෙවිකා/PAID
பணம்செலுத்தப்பட்டது

G 957010
VNA.

PARCELS AND H. C. & D. WAYBILL

From Station: Udatalawinna
To Station: Vavuniya
Guard's Initials:
Date: 2009/11/06.
Train No.:

(The Guards of Train must see that the entries on the Waybill Correspond with the Articles delivered to and given up by them. They must also initial the Waybill.)

| Sender | Consignee | No. | Description | Weight Kg. | Paid Rs. | cts. |
|---|---|---|---|---|---|---|
| D.M. Puniyameen. | | 08. | C/B box. | 160KG | 720 | 00 |
| | | 2 | books. | Vat | 57 | 60 |
| | | | | S/c. | 80 | 00 |
| | T. Meganathan | | | | 857 | 60 |
| | I.D. 500151056V | | | | | |

CMX/9211 – 5,000(2008/06) P

சிந்தனை வட்டம்
*நாளைய சந்ததியின் இன்றைய சக்தி*

தேசம்
International Tamil Magazine

## *இணைந்து வழங்கும் இடம்பெயர் மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.*

### 04 வது – அனுப்பப்பட்ட பொதி

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்வி பயிலும் க.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்,

*01. அனுப்பப்பட்டவை:*

01. விஞ்ஞானம்
    - பகுதி 11-B — 6400 பிரதிகள்
02. ஆங்கிலம்
    - அ. பகுதி I — 6400 பிரதிகள்
    - ஆ. பகுதி 11 -A — 6400 பிரதிகள்

02. அனுப்பப்பட்ட திகதி: 07.11.2009
03. அனுப்பப்பட்ட புகையிரத நிலையம்: உடத்தலவின்ன
04. பெற வேண்டிய புகையிரத நிலையம்: வவுனியா
05. அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை: 07
06. மொத்த நிறை: 110 கிலோகிராம்
07. பற்றுச்சீட்டு எண்: G 957012

Attd Mr Meganathan — UDL/VNA.

Railway A. B. 14
(SU 10 Quad. S.T., & E.)83/07

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
SRI LANKA RAILWAY

G 957012

PAID — VNA.

PARCELS AND M. C. & D. WAYBILL

From Station: Udatalawinna — To Station: Vavuniya — Guard's Initials:

Date: 2009/11/07 — Train No.:

(The Guards of Train must see that the entries on the Waybill Correspond with the Articles delivered to and given up by them. They must also initial the Waybill.)

| Sender | Consignee | No. | Description | Weight Kg. | Paid Rs. | c. |
|---|---|---|---|---|---|---|
| P.M. Puniyamoorthy. | | 07 | C/B box. | 110kg | 500 | |
| | | 2 | books. | Vt} | 60 | |
| | T. Meganathan. | | | S/r. | 70 | |
| | | | | | 630 | |

(M00921) - 5,000(2008/06)

# சிந்தனை வட்டம்

நாளைய சந்ததியின் இன்றைய சக்தி

# தேசம்

International Tamil Magazine

## இணைந்து வழங்கும் இடம்பெயர் மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

## 05 வது - அனுப்பப்பட்ட பொதி

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்வி பயிலும் க.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்,

*01. அனுப்பப்பட்டவை:*

01. ஆங்கிலம்

| | |
|---|---|
| பகுதி I | 6400 பிரதிகள் |
| பகுதி II -B | 6400 பிரதிகள் |

02. கணிதம்

| | |
|---|---|
| பகுதி I | 6400 பிரதிகள் |
| பகுதி II | 6400 பிரதிகள் |
| வரைபுத் தாள் | 6400 பிரதிகள் |

02. அனுப்பப்பட்ட திகதி: 13.11.2009
03. அனுப்பப்பட்ட புகையிரத நிலையம்: உடத்தலவின்ன
04. பெற வேண்டிய புகையிரத நிலையம்: வவுனியா
05. அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை: 12
06. மொத்த நிறை: 250 கிலோகிராம்
07. பற்றுச்சீட்டு எண்: G 957015

Mr Meganathan

UDL/VNA

Railway A. B. 14
(2U 10 Quad. S.T., & R.)82/07

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
SRI LANKA RAILWAY

G 957015

ගෙවා/PAID
பணம்செலுத்தப்பட்டது

பொதிகளுக்கும் கு. கா., நா. களுக்கும் வழிப்பட்டியல்
PARCELS AND H. C. & D. WAYBILL

VNA

From Station: Udatalawinna
To Station: Vavuniya
Guard's Initials: ..........
Date: 2009. 11. 13
Train No.: ..........

(The Guards of Train must see that the entries on the Waybill Correspond with the Articles delivered to and given up by them. They must also initial the Waybill.)

| Sender | Consignee | No. | Description | Weight Kg. | Paid Rs. | cts. |
|---|---|---|---|---|---|---|
| P.M. Punikmeera. | | 12 | C/B box | 250kg | 1100 | 00 |
| | | 2 | books. | Vat | 133 | 00 |
| | T. Meganathan | | | S/C. | 130 | 00 |
| | | | | | 1363 | 00 |

CM009211 - 5,000(2008/06) P

சிந்தனை வட்டம்

நானாய சந்ததியின் இன்றைய சக்தி

தேசம்

International Tamil Magazine

இணைந்து வழங்கும் இடம்பெயர் மாணவர்களுக்கான
கல்வி நிவாரண செயற்றிட்டம்.

## 06 வது - அனுப்பப்பட்ட பொதி

வவுனியா நலன்புரி நிலையப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்து கல்வி பயிலும் க.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக விநியோகிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள்,

*01. அனுப்பப்பட்டவை:*

01. வரலாறு

| | |
|---|---|
| பகுதி I | 6400 பிரதிகள் |
| பகுதி II | 6400 பிரதிகள் |
| இலங்கை, உலகம் | 6400 பிரதிகள் |
| புள்ளடித்தாள் | 6400 பிரதிகள் |

02. அனுப்பப்பட்ட திகதி: 21.11.2009
03. அனுப்பப்பட்ட புகையிரத நிலையம்: உடத்தலவின்ன
04. பெற வேண்டிய புகையிரத நிலையம்: வவுனியா
05. அனுப்பப்பட்ட பெட்டிகளின் எண்ணிக்கை: 07
06. மொத்த நிறை: 107 கிலோகிராம்
07. பற்றுச்சீட்டு எண்: G 957031

UDL/VNA

Railway A. B. 14
(2U 10 Quad, S.T., & E.)82/07

ශ්‍රී ලංකා දුම්රිය සේවය
இலங்கை புகையிரத சேவை
SRI LANKA RAILWAY

G 957031

ගෙව්වා/PAID
பணம்செலுத்தப்பட்டது

பொதிகளுக்கும் கு. வா., நா. களுக்கும் வழிப்பட்டியல்
PARCELS AND H. C. & D. WAYBILL

VNIA

From Station: Udatalawinna
To Station: Vavuniya
Guard's Initials: 
Date: 2009/11/21
Train No.: 

(The Guards of Train must see that the entries on the Waybill Correspond with the Articles delivered to and given up by them. They must also initial the Waybill.)

| Sender | Consignee | No. | Description | Weight Kg. | Paid ரூ./Rs. | சத/c. |
|---|---|---|---|---|---|---|
| P.M. Punigammen. | | 07 | C/B Box. Books | 107 Kg | 500 | - |
| | | | | VAT | 50 | - |
| | | | | etc. | 70 | - |
| T. Meganathan | | | | | 630 | - |

CM009211 - 5,000(2008/06) P

2009 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலாமிடத்தைப் பெற்ற மாணவன் லோ. ஸ்ரீகர்சனின் கடிதப் பிரதி

No ....................

Date ....................

வள்ளியம்மன் கோவிலடி,

சுழிபுரம்.

21.10.2009

நிர்வாகி,

சிந்தனை வட்டம்.

ஐயா,

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை இல் தரம் 5 இல் கல்விகற்கும் லோகேஸ்வரன். ஸ்ரீகர்சன் ஆகிய நான் தங்களால் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடி வினாத்தாள்கள் அனைத்தையும் நான் முறையாகச் செய்தமையும் நான் தேசிய மட்டத்தில் தமிழ் மொழி மூலப் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்திற்கு வந்ததற்கு வழியமைத்துத் தந்துள்ளது. இதனால் எனது வெற்றிக்கு வழி அமைத்துத்தந்த தங்களுக்கு பணிவன்புடன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்ஙனம்,

தங்கள் அன்புமிக்க

மாணவன்,

லோ. ஸ்ரீகர்சன்.

2009 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலாமிடத்தைப் பெற்ற மாணவன் லோ. ஸ்ரீகர்சனின் பெறுபேற்றை உறுதிப்படுத்தியுள்ள கடிதம்

# JAFFNA COLLEGE


**Principal:**
NOEL. A . VIMALENDRAN
B.Sc. ,Dip.In.Ed.,MA (Comp.Ed) Lond.,
P.G.Cert.Ecu.Studies(Swiss),
Cert.Counselling.(AHC).
Res.Tel: 0213212531
Dir & Fax: 021 222 3960

**Vice Principal:**
INDRANEE JEYAKUMARAN
B.Sc. ,Dip.In.Ed.,MA (Ed),
Teacher's Dip. In English
Tel: 0602212531 Ext.12
Res.Tel: 0602212531 Ext.14


19.10.2009

**SCHOLARSHIP EXAMINATION - 2009**

This is to certify that Mas. Logeswaran Srikarsan passed the Grade 5 Scholarship Examination in 2009.

| | |
|---|---|
| Index No: | 6020240 |
| Marks: | 192 |
| District Rank: | 1 |
| Income : | Above |
| Cut out Marks: | 140 |

National Level Rank: 1st (Tamil Medium)

N. A. Vimalendran

PRINCIPAL
JAFFNA COLLEGE

# வேண்டுகோள் கடிதம்

வலயக்கல்விப் பணிப்பாளர்,,
(துணுக்காய்,)
மேலதிகமாகாணக்கல்வி அலுவலகம்,
வவுனியா,
2009.08.17.

திரு: P.M புண்ணியாமீன்,
உடத்தலவின்ன,
கண்டி.

### 2009 டிசம்பர் மாதத்தில் நடைபெற உள்ள க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான துரித மீட்டல் செயற்றிட்டம்.

1. செயற்திட்டநோக்கம் :

கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, மடு ஆகிய வலயங்களைச் சேர்ந்த சுமார் 70,000 மாணவர்கள் இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரணக்கிராமங்களில் தங்கியுள்ளனர். இக்கிராமங்களில் தலா 01 அல்லது அதற்கு மேற்பட்ட பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவற்றுள் கதிர்காமர் வித்தியாலயம் 02.02.2009 இலும், ஏனையவற்றில் பங்குனி, வைகாசி மாதங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இடம்பெயர்ந்து அந்தந்த நிவாரணக்கிராமங்களில் தங்கியுள்ள ஆசிரியர்களினாலேயே கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுத்து வரப்படுகின்றன. இவர்களுள் 90 % மாணவர்கள் அசாதாரண சூழ்நிலை காரணமாக 6 மாதகாலத்திற்கு மேற்பட்ட காலம் வரை கல்வியை இழந்துள்ளனர். அதேவேளையில் மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் மனநிலை குழம்பிய / பாதிக்கப்பட்டநிலையில் காணப்பட்டு வருகின்றனர். இவர்களிற்கு உள, சமூகம் சார்பான ஆலோசனை வழிகாட்டல் ஊடாக கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு ஏற்றவகையில் பல செயலமர்வுகள் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இந்த வகையில் பல செயற்திட்டங்களின் ஊடாக க.பொ.த (உ/த)வகுப்பிற்கும், தரம் 5 வகுப்பிற்கும் மாணவர்கள் தயார்படுத்தப்பட்டு பரீட்சைக்குத்தோற்றி வருகின்றனர். இவ்வாறான செயற்திட்டங்களை க.பொ.த(சா/த) வகுப்பு மாணவர்களிற்கும் அமுல்படுத்துவதனூடாக மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச்செய்ய முடியும். இதனூடாக இம் மாணவர்கள் க.பொ.த.(உ/த)வகுப்பிற்கான தகுதியை பெற்றுக்கொள்வதனூடாக பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கும் வேலை வாய்ப்புக்களை பெறுவதற்கும் அவர்களைத் தயார்ப்படுத்தமுடியும்.

2) திட்டத்தின் செயற்கூறுகள்.

1) ஆசிரியர்களுக்குரிய பயிற்சிகளை வழங்குதல்.
2) மாணவர்களுக்கான கருத்தரங்குகளை துறைசார் ஆசிரியர்களின் உதவி கொண்டு நடத்துதல்.
3) கையேடுகள் தயாரித்து வழங்குதல்.
4) செயலட்டைகள் தயாரித்து வழங்குதல்.
5) மாதிரி வினாப்பத்திரங்களை வழங்குதல்.
6) மதிப்பீடு செய்தலும்,பின்னூட்டலும்.

3) பயனாளிகள்.

வவுனியா மாவட்ட நிவாரணக்கிராமங்களில் தங்கி கல்வி பயின்று வரும் தரம் 11 வகுப்புக்களிலுள்ள சுமார் 6000 மாணவர்கள்.

4) நிதி. –

5) வெளியீடு.

க.பொ.த.(சா/த)2009 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சித்தி வீதத்தை 40 வீதத்தினால் அதிகரித்தல்.

மேற்படி திட்டச் செயற்கூறுகளில் சிலவற்றை அமுல்ப்படுத்துவதற்கான நிதியினை/அச்சிட்ட வினாப்பத்திரங்களை வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

.....................................

திரு.த.மேகநாதன்
வலயக்கல்விப் பணிப்பாளர்.

T. MEGANATHAN
Zonal Director of Education
Zonal Education Office
Thunukkai
Mankulam.

## பத்திரிகை அறிக்கை

# நலன்புரி நிலையங்களில் வாழும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

# தேசம் நெட்டும் சிந்தனை வட்டமும் வழங்கும் கல்வி நிவாரணப் பணிகள்

**(அல் அஸ்லம்)**

யுத்த சூழ்நிலை காரணமாக வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் க.பொ.த சாதாரணதர மாணவர்களின் நலன் கருதி கல்வி நிவாரண செயற்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

உடத்தலவின்னையில் இயங்கிவரும் சிந்தனை வட்டமும் தேசம் நெட்டும் சில பரோபகாரிகளுடன் இணைந்தே இப்பாரிய பணியினைச் செய்ய முன்வந்திருக்கிறது.

வடக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலைக் கல்வியை இழந்து நிவாரணக் கிராமங்களில் அமர்த்தப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வடபகுதி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இச்செயற் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

நீண்ட காலமாக பாடசாலைக் கல்வியைப் பெற முடியாதிருந்த குறிப்பிட்ட மாணவர்கள் கற்றவற்றை மறக்காதிருப்பதற்காகவும், பாடசாலை காலங்களில் பெற்ற கல்வியை சுருக்கமாக மீட்டுவதற்கும் நாடளாவிய ரீதியில் நடக்கும் பரீட்சைகளில் ஏனைய மாணவர்களைப்போல் தோற்றி சிறந்த பெறுபேற்றினைப் பெறும் வண்ணம் தம்மை உருவாக்கிக் கொள்வதற்கும் இவ்வேலைத் திட்டம் தக்க உறுதுணையாக அமையும் என்று மேற்படி திட்டத்தின் பணிப்பாளர் கலாபூஷண புன்னியாமீன் நவமணிக்குத் தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மேற்படி முகாம்களைச் சேர்ந்த சுமார் 6290 மாணவர்கள் இதன் மூலம் பெரிதும் பயன் அடையக் கூடியதாக அமையும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது,

விஞ்ஞானம், கணிதம், தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய ஐந்து பிரதான பாடங்களுக்குமான முன்னோடி போதனா முறைகளே மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

புதிய பாடப்பரப்பை உள்ளடக்கிய பல்தேர்வு வினாக்கள், கட்டுரை வினாக்கள் கொண்ட ஆறு மாதிரி வினாத்தாள்கள் தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திற்கும் வழங்கப்படவிருக்கின்றன.

இவற்றுக்காக ஒரு மாணவருக்கு ரூபா 900/= வீதம் சுமார் 5661,000/= ரூபா மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் நடந்து முடிந்த 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மேற்படி முகாம்களின் 4872 மாணவர்களுக்கும் இத்தகைய கல்வி நிவாரண வேலைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு அது வெற்றியளித்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர்,

இத்திட்டத்திற்கு உதவ முன் வருவோர் 0094812493892 என்ற தனது தொலைபேசியுடனோ அல்லது லண்டனில் இயங்கும் த. ஜெயபாலன், ரி. சோதிலிங்கம் என்பவர்களின் 00442082790354 என்ற இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளலாம் எனவும் கேட்டுக் கொள்கிறார்.

நவமணி

சிந்தனை வட்டம் - தேசம் நெட்
இணைந்து செயற்படுத்தத் திட்டமிட்டுள்ள

# வடக்கில் இடம்பெயர்ந்துள்ள க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம் - 2009

# செயற்றிட்ட அறிக்கை

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் தரம் 11 இல் கல்வி பயிலும் 6290 மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக வேண்டி சிந்தனை வட்டம் - தேசம் நெட் இணைந்து செயற்படுத்தத் திட்டமிட்டுள்ள க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்-2009 பற்றிய விரிவான அறிக்கை.

**நோக்கம்:-**

*வடக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலைக் கல்வியை இழந்து நிவாரண கிராமங்களில் குடியேறியுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வடபகுதி மாணவர்களின் கல்வி நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடல்.*

*நீண்ட காலங்களாக பாடசாலை முறைசார் கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்த இம் மாணவர்கள் கற்றவற்றை மறக்காமலிருப்பதற்கும், பாடசாலைக்குச் செல்லாத காலங்களில் கற்பிக்கப்பட்ட விடயங்களை சுருக்கமாக மீட்டுவதற்கும் இவர்கள் எதிர்நோக்கும் அரசாங்கப் பரீட்சைகளை நாடளாவிய ரீதியிலுள்ள ஏனைய மாணவர்களைப் போல நம்பிக்கையுடனும், அச்சமின்றியும் எதிர்நோக்கக் கூடிய ஆயத்த நிலையை உருவாக்குதல்.*

**திட்டம்:-**

நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்து 2009 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு நேரடி பாடப்பரப்புக்கு உட்பட்ட வகையில் கல்வி நிவாரண உதவிகளை வழங்குவதினூடாக பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தல்.

**இலக்கு:-**

கடந்த காலங்களில் அரசாங்கப் பரீட்சையை எதிர்நோக்கிய வடமாகாண மாணவர்கள் பெற்ற சித்தி வீதத்தை பாதுகாத்தல். குறிப்பாக 2009 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் நலன் புரி நிலைய மாணவர்களுள் 35 சதவீதத்துக்கு மேலான மாணவர்களை க.பொ.த உயர்தரவகுப்புக்கான அனுமதியைப் பெறக்கூடிய வகையில் சித்தியடையச் செய்தல்.

## இத்திட்டத்தை வடிவமைப்பதற்கான காரணம்:

மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் . வவுனியா நலன்புரி நிலையப்பாடசாலைகளின் இணைப்பாளரும் துணுக்காய் கல்வி வலையப் பணிப்பாளருமான திருவாளர் த.மேகநாதன் 2009.08.17 ஆம் திகதியிடப்பட்ட கடிதப்படி விடுத்த வேண்டுகோள்

## உதவி வழங்கப்பட வேண்டிய மாணவர் எண்ணிக்கை

வடபுலத்து மண்ணில் தமிழர்கள் செறிவாக வாழ்ந்து வந்த கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பூநகரி, கண்டாவலை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலை மாணவர்களும், அதேபோல முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த துணுக்காய், ஒட்டி சுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் இன்று அகதிகளாக நலன்புரிநிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். 2009.07.31ஆம் திகதி அறிக்கைப் பிரகாரம் வவுனியா நலன்புரிநிலையங்களில் சுமார் 70,000 மாணவர்கள் மொத்தமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைப்படி 2009 ஆம் ஆண்டில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவாகளின் எண்ணிக்கை வருமாறு:

| | |
|---|---|
| வலயம் 0 - | 535 மாணவர்கள் |
| வலயம் 01 - | 1261 மாணவர்கள், |
| வலயம் 02 - | 1401 மாணவர்கள் |
| வலயம் 03 - | 912 மாணவர்கள், |
| வலயம் 04 - | 907 மாணவர்கள் |
| வலயம் 05 - | 99 மாணவர்கள் |
| சுமதிபுரம் நிவாரண முகாம் - | 156 மாணவர்கள் |
| வீரபுரம் நிவாரண முகாம் - | 116 மாணவர்கள் |
| தர்மபுரம் நிவாரண முகாம் - | 136 மாணவர்கள் |
| IDP பாடசாலைகள் - | 583 மாணவர்கள் |
| புல்மோட்டை நலன்புரி நிலையம் - | 184 மாணவர்கள் |
| மொத்தம் | 6290 மாணவர்கள் |

## மாணவர்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள கல்வி நிவாரண உதவிகள்

1 மாதிரி வினாத்தாள்கள் 2. 2008 அரசாங்க வினாப்பத்திரம்
3. கையேடுகள்

### 1. மாதிரி வினாத்தாள்கள்

புதிய பாடப்பரப்பை உள்ளக்கிய பல்தேர்வு வினாக்கள், கட்டுரை வினாக்கள், அமைப்பு வினாக்களைக் கொண்ட ஆறு மாதிரி வினாத்தாள்கள் ஐந்து பிரதான பாடங்களுக்கும் தனித்தனியே வழங்கப்படும். மொத்தமாக வழங்கப்பட உத்தேசிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் 30 ஆகும். இந்த மாதிரி வினாத்தாள்கள் நலன் புரி நிலைய பாடசாலைகளில் ஆசிரியர்களின் துணையுடன் பரீட்சைகளாக நடத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

இந்த மாதிரி வினாத்தாள்கள் அரசாங்க வினாப்பத்திரங்கள் மதிப்பீடு செய்யும். ஆசிரியர்களாலும், வினாப்பத்திர உருப்படிகளை தயாரிப்பதில் அனுபவம் மிக்க ஆசிரியர்களாலும், ஆசிரிய ஆலோசகர்களாலும் நலன் புரி நிலைய மாணவர்களின் கல்வி நிலையைக்கருத்தில் கொண்டு தயாரிக்கப்படும்.

### 2. 2008 அரசாங்க வினாப்பத்திரம்

புதிய பாடப்பரப்பின் கீழ் முதலாவது அரசாங்கப்பரீட்சை 2008 டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. இந்த வினாத்தாள்கள் அனேகமாக மாணவர்களின் கைவசம் இன்மையால் அவற்றை மாணவர்கள் மீட்டுவது பயனுடையதாக இருக்கும் என்ற அடிப்படையில் மேற்படி ஐந்து பாடங்களுக்குமான அரசாங்க வினாப்பத்திரங்களையும், புள்ளியிடல் படிவத்தையும் அனுப்புதல்.

### 3. கையேடுகள்

நலன் புரி நிலைய மாணவர்களின் கல்வி நிலையைக்கருத்தில் கொண்டு புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கையேடுகள் ஒவ்வொரு பாடத்திற்கும் குறிப்பிட்டளவில் வழங்கப்படல். விரிவான திட்டம் அச்சீட்டு செலவறிக்கையில் தரப்பட்டுள்ளது. இக்கையேடுகள் வழிகாட்டிக் குறிப்புக்களைக் கொண்டதாகவும் பயிற்சிகளைக் கொண்டதாகவும் அமைந்திருக்கும்.

### தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான பாடங்கள்.

1.விஞ்ஞானம் 2.தமிழ் 3.கணிதம் 4.ஆங்கிலம் 5.வரலாறு

## மாணவர்களிடம் கையளித்தல்.

எமது திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களும், கையேடுகளும் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு த. மேகநாதன் அவர்களுக்கு நேரடியாகவோ, அன்றேல் புகையிரதம் மூலமாகவோ அனுப்பப்பட்டு, அவர் மூலமாக அகதி முகாம் மாணவர்களுக்கு வழங்கப்படும். இவற்றை முகாம்களில் உள்ள ஆசிரியப் பெருந்தகைகள் வழிநடத்துவர். மாதிரி வினாத்தாள்கள் பரீட்சையாக நடத்தப்பட்டு விடைத்தாள்கள் திருத்தப்படுவதுடன், திருத்தப்பட்ட விடைத்தாள்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு பாட ஆசிரியைகளினால் கலந்துரையாடப்படும்.

## நிவாரணக் கிராமங்களில் இருந்து மாணவர்கள் மீள் குடியமர்த்தப்படுமிடத்து...

நிவாரணக் கிராமங்களில் இருந்து மாணவர்கள் மீள் குடியமர்த்தப்படுமிடத்து மீள்குடியமர்த்தப்பட்ட இடங்களுக்கு எம்மால் வழங்கப்படும், **வினாத்தாள்களையும், கையேடுகளையும் வழங்க** விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## இத்திட்டத்திற்கான செலவு

விரிவான செலவறிக்கை இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

## செலவுகளுக்கான பணத்தைப் பெறல்.

இத்திட்டத்திற்கான பண உதவிகளை இலங்கையிலும், புலம்பெயர்நாடுகளில் இருந்தும்: இத்திட்டத்தை நன்கு விளங்கிய வசதி படைத்தோரிடமிருந்தும், அன்பர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

## திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள காலம்.

2009 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்கள். இறுதிப் பொதியை அனுப்பத் திட்டமிட்டுள்ள திகதி 2009 நவம்பர் 30.

இத்திட்டம் வெற்றியடைய தங்களதும், தங்களுக்குத் தெரிந்த நல்லிதயங்களினதும் ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்றோம்.

27/08/2009

*கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்* -

**B.A (Cey) Dip in Journ (Ind) SLTS**
**முகாமைத்துவப் பணிப்பாளர்:**
**சிந்தனைவட்டம்**
**27.08.2009**

# வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம் -2009

# அச்சீட்டு செலவறிக்கை.

| | | |
|---|---|---|
| மாணவர்களுக்கு வழிகாட்டல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாடங்கள். | | |
| 01. விஞ்ஞானம் | 02. கணிதம் | 03. வரலாறு |
| 04. தமிழ் | 05. ஆங்கிலம் | |

மாணவர்களுக்கு வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள மாதிரிவினாத்தாள்கள், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்கான தனித்தனியான அச்சீட்டு செலவு விபரம்.

## விஞ்ஞானம்

விஞ்ஞான பாடத்தில் 06 மாதிரிவினாத்தாள்களும், 2008 அரசாங்கப் பரீட்சை வினாத்தாளும், 10 வழிகாட்டிக் குறிப்பேடுகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

**மாணவர் எண்ணிக்கை – 6290**

க.பொ.த. சாதாரண தர விஞ்ஞான பாடத்தேர்வு பல்தேர்வு வினாக்கள், அமைப்பு வினாக்கள், கட்டுரை வினாக்கள் ஆகிய மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. இம் மூன்று வினாத்தாள் களையும் உள்ளடக்கியதாக ஒரு மாதிரிவினாப்பத்திரம் அமையும். பல்தேர்வு வினாக்களுக்கான புள்ளடி விடைப்பத்திரமும் வழங்கப்படும்.

ஒரு மாணவனுக்கான உத்தேச செலவு:

01. மாதிரிவினாப்பத்திரம் 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
02. மாதிரிவினாப்பத்திரம் 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
03. மாதிரிவினாப்பத்திரம் 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
04. மாதிரிவினாப்பத்திரம் 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
05. மாதிரிவினாப்பத்திரம் 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
06. மாதிரிவினாப்பத்திரம் 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
07. அரசாங்க வினாப்பத்திரம் – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 16.00
08. வழிகாட்டிக் குறிப்பேடு 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
09. வழிகாட்டிக் குறிப்பேடு 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
10. வழிகாட்டிக் குறிப்பேடு 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
11. வழிகாட்டிக் குறிப்பேடு 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
12. வழிகாட்டிக் குறிப்பேடு 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
13. வழிகாட்டிக் குறிப்பேடு 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
14. வழிகாட்டிக் குறிப்பேடு 07 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
15. வழிகாட்டிக் குறிப்பேடு 08 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
16. வழிகாட்டிக் குறிப்பேடு 09 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
17. வழிகாட்டிக் குறிப்பேடு 10 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00

ஒரு மாணவனுக்கு விஞ்ஞானப் பாடத்துக்கான மாதிரி வினாப் பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான மொத்தச்செலவு - **ரூபாய் 212.00**

6290 மாணவர்களுக்கும் விஞ்ஞானப் பாடத்துக்கான மாதிரி வினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான மொத்தச்செலவு **212/= X 6290 = ரூபாய் 1,333,480.00**

## கணிதம்

கணிதப் பாடத்தில் 06 மாதிரிவினாத்தாள்களும், 2008 அரசாங்கப் பரீட்சை வினாத்தாளும், 08 வழிகாட்டிக் குறிப்பேடுகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

மாணவர் எண்ணிக்கை – 6290

க.பொ.த. சாதாரண தர கணித பாடத்தேர்வு பல்தேர்வு வினாக்கள், அமைப்பு வினாக்கள், கட்டுரை வினாக்கள் ஆகிய மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. இம்மூன்று வினாத்தாள்களையும் உள்ளடக்கியதாக ஒரு மாதிரிவினாப்பத்திரம் அமையும். மேலதிகமாக வரைபுத் தாள், மடக்கைப் புத்தகம் வழங்கப்படும்.

ஒரு மாணவனுக்கான உத்தேச செலவு:

18. மாதிரிவினாப்பத்திரம் 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
19. மாதிரிவினாப்பத்திரம் 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
20. மாதிரிவினாப்பத்திரம் 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
21. மாதிரிவினாப்பத்திரம் 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
22. மாதிரிவினாப்பத்திரம் 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
23. மாதிரிவினாப்பத்திரம் 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
24. அரசாங்க வினாப்பத்திரம் – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 17.00
25. வழிகாட்டிக் குறிப்பேடு 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
26. வழிகாட்டிக் குறிப்பேடு 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
27. வழிகாட்டிக் குறிப்பேடு 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
28. வழிகாட்டிக் குறிப்பேடு 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
29. வழிகாட்டிக் குறிப்பேடு 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
30. வழிகாட்டிக் குறிப்பேடு 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
31. வழிகாட்டிக் குறிப்பேடு 07 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
32. வழிகாட்டிக் குறிப்பேடு 08 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00

ஒரு மாணவனுக்கு கணிதப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு - **ரூபாய் 199.00**

6290 மாணவர்களுக்கும் கணித பாடத்துக்கான மாதிரி வினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு - **ரூபாய் 199/= X 6290 = ரூபாய் 1,251,710.00**

## வரலாறு

வரலாறுப் பாடத்தில் 06 மாதிரிவினாத்தாள்களும், 2008 அரசாங்கப் பரீட்சை வினாத்தாளும், 08 வழிகாட்டிக் குறிப்பேடுகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

மாணவர் எண்ணிக்கை – 6290

க.பொ.த. சாதாரண தர வரலாறு பாடத்தேர்வு பல்தேர்வு வினாக்கள், அமைப்பு வினாக்கள், கட்டுரை வினாக்கள் ஆகிய மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. இம்மூன்று வினாத்தாள்களையும் உள்ளடக்கியதாக ஒரு மாதிரிவினாப்பத்திரம் அமையும். பல்தேர்வு வினாக்களுக்கான புள்ளடி விடைப்பத்திரமும் உலக, இலங்கைப்படங்களும் வழங்கப்படும்.

ஒரு மாணவனுக்கான உத்தேச செலவு:

33. மாதிரிவினாப்பத்திரம் 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00
34. மாதிரிவினாப்பத்திரம் 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00

35. மாதிரிவினாப்பத்திரம் 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00
36. மாதிரிவினாப்பத்திரம் 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00
37. மாதிரிவினாப்பத்திரம் 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00
38. மாதிரிவினாப்பத்திரம் 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00
39. அரசாங்க வினாப்பத்திரம் – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 14.00
40. வழிகாட்டிக் குறிப்பேடு 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
41. வழிகாட்டிக் குறிப்பேடு 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
42. வழிகாட்டிக் குறிப்பேடு 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
43. வழிகாட்டிக் குறிப்பேடு 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
44. வழிகாட்டிக் குறிப்பேடு 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
45. வழிகாட்டிக் குறிப்பேடு 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
46. வழிகாட்டிக் குறிப்பேடு 07 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
47. வழிகாட்டிக் குறிப்பேடு 08 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00

ஒரு மாணவனுக்கு வரலாறுப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு - ரூபாய் 178.00

6290 மாணவர்களுக்கும் வரலாறுப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு 178/= X 6290= ரூபாய் 1,119,620.00

## தமிழ்

தமிழ்ப் பாடத்தில் 06 மாதிரிவினாத்தாள்களும், 2008 அரசாங்கப் பரீட்சை வினாத்தாளும், 08 வழிகாட்டிக் குறிப்பேடுகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன. மாணவர் எண்ணிக்கை – 6290 க.பொ.த. சாதாரண தர தமிழ் பாடத்தேர்வு பகுதி 01, பகுதி 02, பகுதி 03 ஆகிய மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. இம்மூன்று வினாத்தாள்களையும் உள்ளடக்கியதாக ஒரு மாதிரிவினாப்பத்திரம் அமையும். பல்தேர்வு வினாக்களுக்கான புள்ளடி விடைப்பத்திரமும் வழங்கப்படும்.

ஒரு மாணவனுக்கான செலவு:

48. மாதிரிவினாப்பத்திரம் 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
49. மாதிரிவினாப்பத்திரம் 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
50. மாதிரிவினாப்பத்திரம் 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
51. மாதிரிவினாப்பத்திரம் 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
52. மாதிரிவினாப்பத்திரம் 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
53. மாதிரிவினாப்பத்திரம் 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
54. அரசாங்க வினாப்பத்திரம் – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 13.00
55. வழிகாட்டிக் குறிப்பேடு 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
56. வழிகாட்டிக் குறிப்பேடு 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
57. வழிகாட்டிக் குறிப்பேடு 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
58. வழிகாட்டிக் குறிப்பேடு 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
59. வழிகாட்டிக் குறிப்பேடு 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
60. வழிகாட்டிக் குறிப்பேடு 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
61. வழிகாட்டிக் குறிப்பேடு 07 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00
62. வழிகாட்டிக் குறிப்பேடு 08 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 10.00

ஒரு மாணவனுக்கு தமிழ்ப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு - **ரூபாய் 171.00**

6290 மாணவர்களுக்கும் தமிழ்ப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு **171/= X 6290 =ரூபாய் 1,075,590.00**

## ஆங்கிலம்

ஆங்கிலப் பாடத்தில் 06 மாதிரிவினாத்தாள்களும், 2008 அரசாங்கப் பரீட்சை வினாத்தாளும், 08 வழிகாட்டிக் குறிப்பேடுகளும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.
மாணவர் எண்ணிக்கை – 6290 க.பொ.த. சாதாரண தர ஆங்கில பாடத்தேர்வு பகுதி 01, பகுதி 02, பகுதி 03 ஆகிய மூன்று வினாத்தாள்களைக் கொண்டது. இம்மூன்று வினாத்தாள்களையும் உள்ளடக்கியதாக ஒரு மாதிரிவினாப்பத்திரம் அமையும்.

ஒரு மாணவனுக்கான செலவு:

63. மாதிரிவினாப்பத்திரம் 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
64. மாதிரிவினாப்பத்திரம் 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
65. மாதிரிவினாப்பத்திரம் 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
66. மாதிரிவினாப்பத்திரம் 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
67. மாதிரிவினாப்பத்திரம் 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
68. மாதிரிவினாப்பத்திரம் 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
69. அரசாங்க வினாப்பத்திரம் – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 12.00
70. வழிகாட்டிக் குறிப்பேடு 01 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
71. வழிகாட்டிக் குறிப்பேடு 02 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
72. வழிகாட்டிக் குறிப்பேடு 03 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
73. வழிகாட்டிக் குறிப்பேடு 04 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
74. வழிகாட்டிக் குறிப்பேடு 05 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
75. வழிகாட்டிக் குறிப்பேடு 06 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
76. வழிகாட்டிக் குறிப்பேடு 07 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00
77. வழிகாட்டிக் குறிப்பேடு 08 – அச்சீட்டுச் செலவு – ரூபாய் 7.00

ஒரு மாணவனுக்கு ஆங்கிலப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு - **ரூபாய் 140.00**

6290 மாணவர்களுக்கும் ஆங்கிலப் பாடத்துக்கான மாதிரிவினாப்பத்திரங்களுக்கும், வழிகாட்டிக் குறிப்பேடுகளுக்குமான செலவு **140/= X 6290 = ரூபாய் 880,600.00**

## முக்கிய அவதானத்திற்கு:

மேற்குறிப்பிட்டவாறு எமது திட்டமிடலில் ஒரு மாணவனுக்கு மாதிரி வினாபத்திரங்களும், வழிகாட்டிக் குறிப்பேடுகளும் வழங்க உத்தேசிக்கப்பட்டாலும்கூட காலம், கிடைக்கும் நிதி ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மாற்றமடையலாம். க.பொ.த. சாதாரணதர பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது. எனவே, எம்மால் வழங்கப்படக்கூடிய மாதிரிவினாப்பத்திரங்களையும், வழிகாட்டிக் குறிப்பேடுகளையும் நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்பதாக வழங்குதல் வேண்டும்.

எமது பிரதான செயற்றிட்டத்தின்படி ஒரு மாணவனுக்கு 900 ரூபாய் வீதம் 6290 மாணவர்களுக்கும் 5,661,000.00 ரூபாய்கள் கணக்கிடப்பட்டது. கிடைக்கும் நிதியினையும், காலத்தையும் கருத்திற் கொண்டு கிடைக்கும் நிதிக்கேற்ப மேற்குறிப்பிட்டவற்றை வழங்க முடிவெடுத்துள்ளோம்.

உதாரணமாக எமக்கு உதவி நிதியாக 1 இலட்சம் ரூபாய் கிடைக்குமிடத்து முதலில் விஞ்ஞானம் மாதிரி வினாப்பத்திரம் இலக்கம் 01 ஐ அச்சிட்டு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம். வினாப்பத்திர இல. 01 அச்சீட்டு செலவு – ரூபாய் 16.00.
மாணவர் எண்ணிக்கை 6290 16X6290 =100,640.00

மேற்குறிப்பிட்ட உதாரண அடிப்படையிலேயே இத்திட்டத்தை முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

மேலே குறிப்பிட்ட அச்சீட்டு செலவு எனும்போது அச்சீட்டு செலவு, வினாப்பத்திரங்கள் தயாரிப்புக் கொடுப்பனவு, வினாப்பத்திர கணனிப் பதிப்பு, போக்குவரத்து, பொதியிடல், தொழிலாளர் கூலி உட்பட அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

*இலங்கையைச் சேர்ந்த பரோபகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் சில வசதி படைத்த கல்விமான்களுக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரதி. இக்கடிதம் தனிப்பட்ட முறையில் 612 பேருக்கு வழங்கப்பட்டது.*

---


# சிந்தனை வட்டம்

*நாளைய சந்ததியின் இன்றைய சக்தி*

வரையறுக்கப்பட்ட சிந்தனைவட்டப் பதிப்பகத்தார் (தனியார்) கம்பனி
14 உடத்தலவின்னை, மடிகே
உடத்தலவின்னை 20802, இலங்கை

தொலை பேசி : 081 - 2493746 / 2493892
தொலை நகல் : 081 - 2493746
மின் அஞ்சல் : pmpuniyameen @ yahoo.com


01.09.2009


*முகாமைத்துவப் பணிப்பாளர்: கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்* - **B. A (Cey) Dip in Journ (Ind) SLTS**


---

அன்பின் சோதர, சோதரி
வணக்கம், அஸ்ஸலாமு அலைக்கும்

## வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்- 2009

தற்போது வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள நிவாரணக் கிராமங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுள் 6000க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இம்மாணவர்களில் பெரும்பாலானோர் வடக்கு யுத்த நிலை காரணமாக 06 தொடக்கம் 09 வரையிலான மாதங்களாக பாடசாலைக் கல்வியினைப் பெற முடியாத நிலையில் காணப்பட்டதுடன், இவர்களது பாடப் புத்தகங்கள், குறிப்புகள் அனைத்தையும் இழந்த நிலையிலேயே இன்று முகாம்களில் தங்கியுள்ளனர். அத்துடன், மனோரீதியிலும் இவர்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

எமது சிந்தனைவட்டம் லண்டனில் இயங்கும் தேசம்நெற் இணையத்தளத்துடன் இணைந்து தரம் 05 மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டத்தை சுமார் 28 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொண்டு வெற்றிகரமான முறையில் நிறைவு செய்தது. எமது நிவாரண செயற்பாடுகள் ஒரு சில அகதி முகாம்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல் அனைத்து முகாம்களையும் மையப்படுத்தியதாகவே மேற்கொள்ளப்பட்டது. (இது பற்றிய பூரண அறிக்கையை இத்துடன் இணைத்துள்ளோம்.)

இதே அடிப்படையில் எதிர்வரும் 2009 டிசம்பர் மாதத்தில் க.பொ.த. சாதாரண தர அரசாங்கப் பரீட்சையை எழுதவுள்ள மாணவர்களுக்காக வேண்டியும், நாம் தேசம்நெற் இணையத்தளத்துடன் இணைந்து கல்வி நிவாரண செயற்றிட்டமொன்றினை நடை முறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம். (இது பற்றிய பூரணமான செயற்பாட்டறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

மேலும் நாம் மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ள 30 மாதிரிவினாத்தாள்கள், 05 அரசாங்க வினாத்தாள்கள், 42 வழிகாட்டிக் குறிப்பேடுகள் என்பவற்றுக்கான தனித்தனி அச்சீட்டு செலவறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள முன்னணி அச்சகங்கள் 03இல் இந்த அச்சீட்டு செலவு விபரங்களை கோட்டேஸனாகப் பெற்றோம். அதில் குறைவாகவுள்ள அச்சீட்டு செலவு விபரம் கண்டி, பஹிரவா கந்தை இலக்கம் 3 இல் அமைந்துள்ள ''கிரியேட்டிவ் அச்சகத்தார் (தனியார்) கம்பனி" மூலமாகவே எமக்குக் கிடைத்தது. நாம் அனுப்பும் மாதிரிவினாத்தாள்கள் அனைத்தும் 70 GSM இந்தோனேசியன் பேங் தாளில் அச்சிடப்படவுள்ளதுடன், ஒரு மாதிரிவினாத்தாள் A4 அளவில் 12 முதல் 16 பக்கங்களைக் கொண்டதாகவும், எம்மால் வழங்கப்படவுள்ள ஒவ்வொரு கையேடுகளும் A5 அளவில் குறைந்தது 32, கூடியது 48 பக்கங்களைக் கொண்டதாகவும் அமையும்.

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கணக்கு அச்சீட்டுச் செலவு விபரங்கள் மேற்குறிப்பிட்ட அளவு நியமங்களுக்கு ஏற்பவே பெறப்பட்டவையாகும். இவற்றுள் ஓரிரு மாதிரி வினாத்தாள்களை அல்லது வழிகாட்டிக் குறிப்பேடுகளையாவது அச்சிட்டுத் தர ஒத்துழைக்கும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். அதேநேரம், தங்களுக்குத் தெரிந்த அச்சகமொன்றினூடாக அச்சிட்டுத் தருவதாக இருப்பின் அதற்குரிய வினாத்தாள்களையும், குறிப்புகளையும் நாங்கள் வழங்க ஆயத்தமாகவுள்ளோம். நீங்கள் இத்திட்டத்துக்கு பூரணமான ஒத்துழைப்பினை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றோம். அச்சிடப்பட்ட தாள்களாக வழங்குவதையே நாம் பெரிதும் விரும்புகின்றோம்.

எனவே, யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, சில நேரங்களில் பெற்றோர்களை, உறவுகளை, தமது சொத்துக்களை இழந்துள்ள இம்மாணவர்களின் கல்வித்தரத்தைப் பேண மேற்கொள்ளப்படும் எமது இத்திட்டத்திற்கான உதவிகளை வழங்க விரும்பினால் எதிர்வரும் நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்க ஏற்பாடுகள் செய்யும்படி பணிவன்புடன் கோரி விடைபெறுகின்றோம்.

எமது இச்செய்தியை தங்களுக்கு மிகவும் தெரிந்த நண்பர்கள், மற்றும் உறவுகளிடமும் எத்திவையுங்கள்.

அன்புடன்
தங்கள் சோதரன்

1/09/2009

கலாபூஷணம் புன்னியாமீன்
01.09.2009

Kalapooshana
P. M. PUNIYAMEEN
14, Udatalawinna, Madige
Udatalawinna,
Sri Lanka

# Displaced Students Details inside Relief Village as on 31.07.2009

| Zones | Zone 0 | | Zone 1 | | Zone 2 | | Zone 3 | | Zone 4 | | Zone 5 | | Sumathipuram | | Veerapuram | | Tharmapuram | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Grades | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Boys | Girls | Total |
| 1 | 201 | 224 | 545 | 593 | 525 | 531 | 548 | 536 | 498 | 562 | 66 | 94 | 61 | 86 | 69 | 69 | 55 | 45 | 5308 |
| 2 | 226 | 229 | 549 | 563 | 538 | 568 | 564 | 563 | 603 | 652 | 55 | 65 | 55 | 63 | 65 | 47 | 60 | 60 | 5525 |
| 3 | 241 | 232 | 604 | 560 | 500 | 444 | 633 | 614 | 626 | 634 | 88 | 106 | 92 | 87 | 70 | 83 | 48 | 56 | 5718 |
| 4 | 223 | 253 | 559 | 519 | 537 | 684 | 602 | 531 | 582 | 495 | 62 | 84 | 78 | 49 | 63 | 63 | 77 | 63 | 5524 |
| 5 | 206 | 223 | 542 | 540 | 613 | 653 | 550 | 543 | 579 | 603 | 63 | 82 | 85 | 70 | 73 | 65 | 65 | 49 | 5604 |
| 6 | 179 | 168 | 499 | 483 | 533 | 512 | 429 | 422 | 360 | 372 | 68 | 72 | 55 | 65 | 53 | 53 | 61 | 53 | 4437 |
| 7 | 171 | 162 | 450 | 478 | 509 | 477 | 451 | 447 | 364 | 376 | 62 | 70 | 60 | 66 | 52 | 54 | 55 | 47 | 4351 |
| 8 | 226 | 180 | 480 | 536 | 536 | 540 | 457 | 461 | 363 | 408 | 75 | 95 | 61 | 78 | 45 | 53 | 42 | 69 | 4705 |
| 9 | 213 | 191 | 533 | 563 | 591 | 623 | 525 | 431 | 400 | 439 | 72 | 124 | 54 | 67 | 68 | 48 | 53 | 49 | 5044 |
| 10 | 189 | 219 | 520 | 633 | 562 | 629 | 509 | 446 | 400 | 448 | 78 | 92 | 46 | 78 | 57 | 62 | 57 | 69 | 5094 |
| 11 | 263 | 272 | 572 | 689 | 604 | 797 | 445 | 467 | 452 | 455 | 49 | 50 | 81 | 75 | 63 | 53 | 66 | 70 | 5523 |
| 12Sci | 9 | 17 | 13 | 5 | | | 14 | 17 | | | | | 3 | 2 | | | 0 | 0 | 80 |
| 12Math | 11 | 0 | 5 | 17 | | | 12 | 14 | | | | | 2 | 0 | | | 0 | 0 | 61 |
| 12Com | 22 | 16 | 23 | 20 | | | 21 | 25 | | | | | 1 | 1 | | | 2 | 0 | 131 |
| 12Art | 48 | 101 | 63 | 155 | 359 | 410 | 84 | 122 | 74 | 131 | 25 | 31 | 8 | 15 | 14 | 19 | 6 | 5 | 1670 |
| 13Sci | 8 | 1 | 6 | 6 | | | 3 | 9 | | | | | 0 | 2 | | | 0 | 0 | 35 |
| 13Math | 13 | 2 | 7 | 9 | | | 4 | 7 | | | | | 3 | 2 | | | 0 | 0 | 47 |
| 13Com | 9 | 5 | 21 | 18 | | | 37 | 26 | | | | | 5 | 3 | | | 0 | 1 | 125 |
| 13Arts | 17 | 23 | 35 | 79 | | | 48 | 152 | 86 | 149 | 21 | 27 | 6 | 15 | 37 | 49 | 1 | 0 | 745 |
| Total | 2475 | 2518 | 6026 | 6466 | 6407 | 6868 | 5936 | 5833 | 5387 | 5724 | 784 | 992 | 756 | 824 | 729 | 718 | 648 | 636 | 59727 |

Welfare center IDP students list seporately attached

IDP [illegible] 11 — 583
[illegible] 11 — 184

[illegible signature]
T. MEGANATHAN
Zonal Director of Education
Zonal Education Office
Thunukkai
Mankulam.

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்காக வேண்டி எம்மால் அனுப்பப்பட்ட மாதிரி வினாத் தாள்களைக் கொண்ட பொதிகளின் ஒரு தொகுதி.






2009 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு அகதி முகாம் மாணவர்களை ஆசீர்வதித்து உரை நிகழ்த்தும் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு த. மேகநாதன் அவர்கள். அவருக்கு இடப்புறமாக அமர்ந்து இருப்பவர் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. த. குருகலராஜா அவர்கள். இந்நிகழ்வு வவுனியா கல்வியியற் கல்லூரி நலன்புரி நிலையப்பாடசாலையில் இடம் பெற்றது.

# விசேட நன்றிகள்

சிந்தனைவட்டம் - தேசம்நெற்
வடக்கில்
இடம்பெயர் மாணவர்களுக்கான
க. பொ. த சாதாரண தர
கல்வி நிவாரண செயற்றிட்ட
நடவடிக்கைகளின் போது

நலன்புரிநிலைய மாணவர்களுக்கு
எமது
மாதிரிவினாத்தாள்களைப்
பெற்று
நேரடியாக விநியோகித்த
நலன்புரிநிலைய பாடசாலைகளின் இணைப்பாளரும்,
உதவிக் கல்விப் பணிப்பாளருமான
**திருவாளர் த. மேகநாதன் அவர்களுக்கு.**

மேலும்
எமது மாதிரிவினாத்தாள்களை
நலன்புரிநிலைய மாணவர்களுக்கு
வழங்கி
மாணவர்களை வழிநடத்திய
அதிபர்,
ஆசிரியர்கள்
நலன்புரிநிலைய பெற்றோர்களுக்கு.

இத்துடன் கீழே இணைக்கப்பட்டுள்ள கடிதப்பிரதியை யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 415 பாடசாலைகள் உட்பட, இலங்கையில் சகல மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் பாடசாலைகளுக்கும், கண்டியிலும், கொழும்பிலும் பிரபல்யம் மிக்க தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைத்தோம்.

ஆனால், வேதனைக்குரிய விடயம். ஒரு பாடசாலையிலிருந்தாவது அல்லது தனியார் கல்வி நிறுவன ஆசிரியரிடமிருந்தாவது எமக்கு ஒரு பதிலாவது வரவில்லை. என்றோ ஒரு காலத்தில் வன்னி மாணவர்களின் கல்வி நிலை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் போது சில நேரங்களில் இத்தகவல்களும் ஆய்வாளர்களுக்குத் தேவைப்படும் என்ற நோக்கில் இக்கடிதப்பிரதி கீழே பதிவாக்கப்படுகிறது.

# சிந்தனை வட்டம்

*நாளைய சந்ததியின் இன்றைய சக்தி*

*வரையறுக்கப்பட்ட சிந்தனைவட்டப் பதிப்பகத்தார் (தனியார்) கம்பனி*
*14 உடத்தலவின்னை, மடிகே*
*உடத்தலவின்னை 20802 இலங்கை*

தொலை பேசி : 081 - 2493746 / 2493892
தொலை நகல் : 081 - 2493746
மின் அஞ்சல் : pmpuniyameen @ yahoo. com

02.09.2009

*முகாமைத்துவப் பணிப்பாளர்: கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்* - B. A (Cey) Dip in Journ (Ind) SLTS

அதிபர் அவர்கட்கு,

## வவுனியா நலன்புரி நிலையங்களில் க. பொ. த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் 6290 மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நிவாரண நடவடிக்கைகளில் தங்களையும் இணைத்துக் கொள்ளல்.

2009 ஆகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்காக வேண்டி சுமார் 28 இலட்சம் ரூபாய் பெறுமதிமிக்க 04 வழிகாட்டி நூல்களையும் 30 மாதிரிவினாத்தாள்களையும் தனித்தனியாக 4872 மாணவர்களுக்கு வழங்கி நலன்புரிநிலைய ஆசிரியர்கள் துணையுடன் அம்மாணவர்களை வழிகாட்டி சிறந்த முறையில் பரீட்சையை எதிர்நோக்க எமது சிந்தனைவட்டம் வழியமைத்துக் கொடுத்ததை தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம்.

அதேபோல 2009 டிசம்பர் மாதத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்காக வேண்டியும் சுமார் 56 இலட்சம் ரூபாய் நிதித் திட்டத்தின் கீழ் கல்வி நிவாரண செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வடக்கிலுள்ள நலன்புரிநிலையங்களில் மொத்தம் 6290 மாணவர்கள் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். இம்மாணவர்கள் தற்போது கீழ்காணப்படும் நிவாரண முகாம்களில் பின்வரும் எண்ணிக்கையில் உள்ளனர்.

| | |
|---|---|
| வலயம் 0 - | 535 மாணவர்கள் |
| வலயம் 01 - | 1261 மாணவர்கள் |
| வலயம் 02 - | 1401 மாணவர்கள் |
| வலயம் 03 - | 912 மாணவர்கள் |
| வலயம் 04 - | 907 மாணவர்கள் |
| வலயம் 05 - | 99 மாணவர்கள் |
| சுமதிபுரம் நிவாரண முகாம் - | 156 மாணவர்கள் |
| வீரபுரம் நிவாரண முகாம் - | 116 மாணவர்கள் |
| தர்மபுரம் நிவாரண முகாம் - | 136 மாணவர்கள் |
| IDP பாடசாலைகள் - | 583 மாணவர்கள் |
| புல்மோட்டை நலன்புரி நிலையம் - | 184 மாணவர்கள் |
| மொத்தம் | 6290 மாணவர்கள் |

பல்கலைக்கழக மட்டத்திலும் சில புத்திஜீவிகளுடன் இணைந்து நாம் தயாரித்த செயற்றிட்ட அறிக்கையின்படி மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு மாணவனுக்கும் 05 பிரதான பாடங்களை மையமாகக் கொண்டு, ஒவ்வொரு பாடத்திற்கும் 06 மாதிரிவினாத்தாள்களையும், பாட அலகு ரீதியான 10 வழிகாட்டி கையேடுகளையும் வழங்க முடிவெடுத்துள்ளோம்.

பிரதானமாக புதிய பாடத்திட்டத்திற்கிணங்க கணிதம், விஞ்ஞானம், வரலாறு, தமிழ், ஆங்கிலம் ஆகிய 05 பாடங்களுக்கும் இத்தகைய மாதிரிவினாத்தாள்களையும், கையேடுகளையும் வழங்க உத்தேசித்துள்ளோம்.

தங்கள் கல்லூரியில் அனுபவமிக்க ஆசிரியர்களின் துணையுடன் அவர்களால் தயாரிக்கப்பட்ட அல்லது புதிதாக தயாரித்துத்தர விருப்பமுள்ள மாதிரிவினாத்தாள்கள் - குறிப்பிட்ட 05 பாடங்களுக்குமான கையேடுகள் அல்லது மாணவர்களுக்கு வழங்கப்பட்ட முக்கியமான குறிப்புகள் காணப்படின் அவற்றின் புகைப்படப் பிரதிகள் ஆகியவற்றை எமக்கு அனுப்பி வைத்தால் எமது கல்வி அபிவிருத்தி சபையின் வழிகாட்டலுடன் அவற்றை வடிவமைத்து நலன்புரிநிலைய மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய முடியும்.

எனவே, சுமார் 06 மாதங்களுக்கு மேல் பாடசாலை மண்ணையே மிதிக்காத நிலையில் சகலதையும் இழந்து, மிகவும் சிரமங்களின் மத்தியில் கல்வியைக் கற்று வரும் அகதிமுகாம் மாணவர்களுக்கு இந்த சிறு உதவியை செய்யுமிடத்து அவர்களுக்கான மாபெரும் உதவியாக இருக்கலாம்.

எனவே, இது விடயமாக கரிசனைக் காட்டி தங்கள் கல்லூரியில் திறமை வாய்ந்த, அனுபவமிக்க ஆசிரியர்களினூடாக தயாரிக்கப்பட்ட மாதிரிவினாத்தாள்கள், பாட அலகு ரீதியான கையேடுகள் இருப்பின் இம்மாத இறுதிக்குள் அனுப்பி வைப்பீர்களாயின் பேருதவியாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் வினாத்தாள்களிலும், கையேடுகளிலும் உரிய ஆசிரியர் பெயர், பாடசாலை முகவரி ஆகியவற்றையும் பிரசுரித்தே வழங்குவோம்.

சேவைநல நோக்கில் - பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்துக்காக உதவும் இத்திட்டத்திற்கு மேற்குறித்த வகையில் தங்கள் பங்களிப்பை வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

மாதிரிவினாத் தாள்களையும், கையேடுகளையும் அனுப்ப வேண்டிய முகவரி:

**KALAPOOSHANAM P.M. PUNIYAMEEN**
**14, UDATALAWINNA MADIGE,**
**UDATALAWINNA - 20802**

மிக்கநன்றி
தங்கள்

கலாபூஷணம் புன்னியாமீன்.
(முகாமைத்துவப் பணிப்பாளர் சிந்தனைவட்டம்.)

# எமது விசேட நன்றிகள்

எமது இத்திட்டம் வெற்றியடைய மிகவும் ஒத்துழைப்பாக இருந்த பின்வருவோருக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

1. எமது இத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கிய அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கு
2. எமது இத்திட்டத்தின் போது மிகவும் அவசரமாகவும் அழகிய முறையிலும் அச்சீட்டுப்பணிகளை நிறைவேற்றித் தந்த அச்சக உரிமையாளர் மற்றும் ஊழியர்களுக்கு
3. மாணவர்களின் நிலமையை உணர்ந்து விசேடமான முறையில் வினாப்பத்திரங்களை தயாரித்து ஒத்துழைத்த ஜனாப் யு.எல்.எம். பஷீர், திருமதி மஸீதா புன்னியமீன், ஜனாப் ஏ.எம்.பாயிஸ், செல்வி தஸ்மின் ரியாழ், வத்தேகம கல்வி வலயப் பரீட்சைப் பிரிவு திரு. சிவநாதன், திருமதி எம்.ஐ. நளீமா, திருமதி எம்.ஐ.எம். மும்தாஜ், திருமதி சாபிரா நஸார் ஆகியோருக்கு
4 கணனி பதிப்பில் ஒத்துழைப்பு நல்கிய மௌலவி ரமீஸ்தீன் அவர்களுக்கு
5. வினாப்பத்திரங்களை வவுனியாவிற்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்ட சிந்தனை வட்டத்தின் பணிக்குழுவினரான சகோதரர் எம்.சி.எம் அன்வர், பீ.சஜீர் அஹமட், ஜெஸீமா ஜெமால்தீன், ஜே. இல்முன் நிஸா, குமுது குமாரி லக்மாளி, பாத்திமா நஸ்ரின் ஆகியோருக்கு
6. பொதிகளை போக்குவரத்து செய்வதில் ஒத்துழைத்த சகோதரர் என்.எல்.எம் நாளின் அவர்களுக்கு
7. மற்றும் பொதிகளை அனுப்பும் போதும் பொதிகளை விநியோகிக்கும் போதும் ஒத்துழைப்புடன் செயற்பட்ட உடதலவின்னை புகையிரத நிலைய அதிபர் வவுனியா புகையிரத நிலைய அதிபர் ஆகியோர்க்கு
8. இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ள சிங்கள ஆங்கிலப் பக்கங்களை தமிழில் இருந்து மொழிபெயர்த்துத்தந்த ஜனாப். எம். என். எம் ரியாழ் அவர்களுக்கு, அவற்றைக் கணனிப்படுத்தித் தந்த ஜனாப். ரியாஸ் அவர்களுக்கு

மேலும் இத்திட்டத்தில் பல வழிகளிலும் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

*-கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்-*

முகாமைத்துவப் பணிப்பாளர்:
சிந்தனைவட்டம்
22.12.2009

செய்தி - 1
பிரசுரமான இணையத்தளம்: www.thesamnet.co.uk
திகதி: Oct 27.2009

# வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு 5 மாதிரி வினாத்தாள்கள் விநியோகம்

- பீ. எம் புன்னியாமீன் -

வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான தேசம்நெட், சிந்தனைவட்ட நிவாரண உதவித்திட்டத்தின் முதற் கட்டமாக கணிதம், வரலாறு, தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய ஐந்து பாடங்களுக்குமான முதலாம் கட்ட மாதிரி வினாத்தாள்களை இவ்வாரம் வழங்கப்படவுள்ளது.

தற்போது அகதி முகாம்களிலுள்ள மக்கள் பலவிதமான தேவைகளுக்கு உட்பட்டவர்களாக இருந்த போதிலும் கூட, நீண்ட கால அடிப்படையைக் கருத்திற்கொண்டு மாணவர்களின் கல்விநிலை பாதிப்படையக் கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு சிந்தனைவட்டமும், தேசம்நெற்உம் கல்விசார்ந்த நிவாரண நடவடிக்கைகளை முன்னேடுக்க திட்டமிட்டு சில செயற்பாடுகளை மேற்கொண்டது. முதற் கட்டமாக தரம் 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கு எம்மால் மேற்கொள்ளப்பட்ட நிவாரண செயற்றிட்டம் எமக்குப் பூரண வெற்றியைத் தந்தது. குறிப்பாக எமது முதற் திட்டத்தின் கீழ் 4872 மாணவர்கள் நேரடியாகப் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நிவாரணக் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு பல சுயேட்சை நிறுவனங்கள் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. ஆனால், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவது தொடர்பாகவும், அனைத்து முகாம்களிலுமுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தைக் கருத்திற் கொண்டும் பரந்துபட்ட திட்டங்களை சுயேட்சை நிறுவனங்கள் முறையாக மேற்கொண்டதாக அறியமுடியவில்லை. இதனைக் கருத்திற்கொண்டே மாணவர்களின் பௌதீக வசதிகளைவிட மாணவர்களின் கல்வித் தரத்தைக் கருத்திற் கொண்டு நாம் கல்வித் தரத்தை உயர்த்தும் முகமாக முதற் கட்டமாக புலமைப்பரிசில் பரீட்சைக்கான கல்வி உதவிகளை அனைத்து மாணவர்களுக்கும் வழங்கினோம்.

அதன் தொடர்ச்சியாகவே க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கும் கல்வி நிலையை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டத்தினை வகுத்தோம். இத்திட்டம் வகுக்கப்படும் போது கல்வி செயற்பாட்டுடன் ஈடுபாடுடைய புத்திஜீவிகள் பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள், கல்வியதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர்களுடன் கலந்தாலோசித்து க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் கல்வி அபிவிருத்திற்கென விசேட திட்டமொன்றினை வகுத்தோம்.

2009 டிசம்பர் மாதம் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்காக வேண்டி எம்மால் நடத்தப்படக் கூடிய நிவாரண கல்விச் செயற்றிட்டத்தில்; மாணவர்களுக்கு கற்க முடியாது போன தரம் 10, 11 பாட அலகுகளை மையமாகக் கொண்ட குறிப்பேடுகளையும், மாணவர்கள் அரசாங்கப் பரீட்சையை இலகுவான முறையில் எதிர்கொள்வதை கருத்திற் கொண்டும் பரீட்சைப் பற்றிய விளக்கத்தை வழங்கக் கூடிய வகையில் மாதிரி வினாத்தாள்களையும் வழங்கத் தீர்மானித்தோம். எமது திட்டப்படி மேற்குறிப்பிட்ட ஐந்து பாடங்களுக்கும் 30 மாதிரிவினாத்தாள்களையும் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற அரசாங்க வினாத்தாள் ஐந்தையும் (இம்மாணவர்களிடம் புதிய பாடத்திட்டத்தின் கீழ் இலங்கையில் முதலாவதாக நடைபெற்ற 2008 டிசம்பர் அரசாங்க வினாத்தாள்கள் இருக்கவில்லை.) இவற்றுக்கு மேலதிகமாக புதிய பாடத்திட்டத்தில் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள புதிய விடயங்களை உள்ளடக்கிய 42 குறிப்பேடுகளையும் வழங்கத் திட்டமிட்டிருந்தோம். எமது நிவாரண உதவிகள் ஒரு சில நிவாரணக் கிராம மாணவர்களுக்கு மாத்திரம் போய்ச் சேராமல் வவுனியா நிவாரணக் கிராமங்களில் உள்ள 6290 மாணவர்களுக்கும் சென்றடையக் கூடிய வகையிலே திட்டங்களை தீட்டினோம்.

மேலும் நிவாரணக் கிராமங்களில் உள்ள மாணவர்கள் மீள்குடியமர்த்தப் படுமிடத்து அந்த மாணவர்களுக்கு எமது மாதிரி வினாத்தாள்களையும், பாட அலகுகளை மையமாகக் கொண்ட குறிப்பேடுகளையும் வழங்கும் போது, மீள்குடியமர்த்தப்படும் இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் விசேட ஒழுங்குகளை செய்தோம்.

இவ்விடத்தில் சில உண்மைகளை வெளிப்படையாக குறிப்பிட வேண்டிய ஒரு கட்டாயப்பாடுண்டு. இத்திட்டத்தை மூலமாக முன்னெடுத்த 'சிந்தனைவட்டம்' அமைப்போ 'தேசம்நெற்' அமைப்போ பாரியளவில் நிதியினைக் கொண்டுள்ள நிறுவனங்கள் அல்ல. இதனால் எமது திட்டத்தை நடைமுறைப்படுத்த சில பரோபகாரிகளின் உதவியைப் பெற வேண்டிய நிலையிலேயே எமது முழுமையான திட்டத்தை அவர்களிடம் வழங்கி உதவிகள் கோரினோம். கிட்டத்தட்ட எமது முழுமையான செயற்றிட்டத்தை நிறைவேற்ற எமக்கு சுமார் 30 ஆயிரம் பவுண்கள் தேவைப்பட்டன. கிட்டத்தட்ட ஒரு மாணவனுக்கு 5 பவுண்களுக்குட்பட்ட ஒரு தொகையை ஒதுக்கீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டு மேற்படி திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருந்தோம். ஒரு மாணவனுக்கு நாம் ஒதுக்கிய 5 பவுண்களிலிருந்தே 30 மாதிவினாத்தாள்களையும், 5 அரசாங்க வினாத்தாள்களையும் 42 வழிகாட்டி குறிப்பேடுகளையும் வழங்கத் தீர்மானித்திருந்தோம். எனவே, அறிவுபூர்வமாக சிந்திக்கும் எவருக்கும் இது இலாப நோக்கத்தைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமன்று என்பதையும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு திட்டமிட்ட செயற்பாடு என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும். இருப்பினும், எமது இத்திட்டத்துக்கு லண்டனிலிருந்து 2000 பவுண்களும், கனடாவிலிருந்து 1180.00. CDN மாத்திரமே கிடைத்தன. இதனால் நாம் திட்டமிட்ட மாதிரிவினாத்தாள்களில் முதலாம் கட்ட மாதிரிவினாத்தாள்கள் ஐந்தை மாத்திரமே எம்மால் வழங்க முடியுமாக இருந்தது.

புலம்பெயர்ந்த நாடுகளில் மாத்திரமல்லாமல் இலங்கையிலும் பல தனவந்தவர் களுடனும், அரசியல் வாதிகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தினோம். இலங் கையில் ஒருவரிடமும் நாம் பணமாகக் கேட்கவில்லை. மாறாக எமது திட்டத்தை வழங்கி குறிப்பிட்ட மாதிரிவினாத்தாள்களை அல்லது வழிகாட்டிப் புத்தகங்களை ஓரிரண்டை அச்சிட்டு தரும்படி மாத்திரமே கோரினோம். எமது திட்டத்தை நன்றாக ஆராய்ந்து எம்முடன் பல தடவைகள் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வி தங்கேஸ்வரி அவர்கள் தொடர்புகொண்டு அவரும் உச்ச முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளும் தோல்வியிலே முடிந் துள்ளதுடன், இலங்கையிலிருந்து எதுவிதமான உதவிகளும் எமக்குக் கிடைக்கவில்லை.

அதேநேரம், இவ்விடத்தில் மற்றும் ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். வன்னி அகதி முகாம்களிலுள்ள மாணவர்களுக்கு மாதிரிவினாத்தாள்கள் வழிகாட்டிக் குறிப்பேடுகள் தயாரித்துத் தரக்கூடிய உதவியைக் கோரி (பண உதவியல்ல) மொத்தம் 1782 பாடசாலைகளுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்களை அனுப் பினோம். அக்கடிதப் பிரதியை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 415 பாடசாலைகளுக்கும் இலங்கையில் சகல மாவட்டங்களைச் சேர்த்த தமிழ் பாடசாலைகளுக்கும், கண்டியிலும், கொழும்பிலும் பிரபல்யம் மிக்க தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் களுக்கும் அனுப்பி வைத்தோம். ஆனால், வேதனைக்குரிய விடயம். ஒரு பாடசாலை யிலிருந்தாவது அல்லது தனியார் கல்வி நிறுவன ஆசிரியரிடமிருந்தாவது எமக்கு ஒரு பதிலாவது வரவில்லை. இச்சம்பவத்தை வைத்து நோக்கும்போது வன்னி முகாம்களிலுள்ள மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாக இவர்கள் கதைப்பதன் அர்த்தத்தை எம்மால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இந்நிலையில் சில முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்கள் வினாப்பத்திரங்கள் தயாரிப்பதில் எமக்கு ஒத்துழைப்பினை வழங்கினார்கள். அதே போல வத்தேகம கல்விப்பணிப்பாளர் திரு சிவநாதன் அவர்களும், எமக்கு ஆலோசணைகளையும் ஒத்துழைப்பையும் வழங்கினார். இவ்விடத்தில் இவர்களுக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விமர்சனங்கள் மேற்கொள்வது இலகு. பத்திரிகை அறிக்கைகள் வெளியிடுவது இலகு. ஆனால், ஆக்கபூர்வமான ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு மானசீகமான முறையில் ஒத்துழைப்பு வழங்குவது மிகக் குறைவு என்பதை எமது இம்முயற்சிக்கான அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. எனவே, ஒரு உண்மையான இலக்கை நோக்கி திட்டம் தீட்டுவதும் அதை நடைமுறைப்படுத்த முனைவதும் அர்த்தமற்ற ஒரு விடயம் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எவ்வாறாயினும் கூட, தரம் 05 மாணவர்களுக்கு சுமார் 15ஆயிரம் பவுண் பெறுமதிமிக்க செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நடத்திமுடித்தோம். ஆனால் க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கு சுமார் 2500 பவுண் பெறுமதியான உதவிகளை அதாவது ஒரு மாணவனுக்கு சுமார் 39 பென்ஸ் பெறுமதியான உதவிகளை மாத்திரமே வழங்கக்கூடியதாக இருந்தது.

இதனையொரு தோல்வியாக நாம் கருதவில்லை. நாம் அகதி மாணவர்களுக்கு உதவ முழுமையாக முயற்சிகள் செய்தோம். எமது முயற்சியால் அம்மாணவர் களுக்கு 5 மாதிரிவினாத்தாள்கள் அனுப்புவதை இச்சந்தர்ப்பத்தில் பெருமையாகக் கொள்கின்றோம்.

மீண்டும் இவ்விடத்தில் நாம் ஞாபகமூட்ட விரும்புகின்றோம். 2009ம் ஆண்டு ஆகஸ்ட் புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு எம்மால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாதிரிவினாத்தாள்கள் வழிகாட்டிப் புத்தகங்கள், கணக்கறிக்கைகள் போன்ற விபரங்களை தேசம்நெற் வாசகர்கள் பெறவிரும்பினால் பின்வரும் மின்னஞ் சல் முகவரிகளுடன் தொடர்புகொள்ளுமிடத்து பி.டி.எப். வடிவில் 126 பக்கங்கள் கொண்ட அவ்வறிக்கையை அனுப்பி வைப்போம்.

**த. ஜெயபாலன்** : 0044 208 279 0354 அல்லது 0044 7800 596 786 அல்லது **thesam97@hotmail.com**
**ரி. சோதிலிங்கம்** : 0044 7846 322 369 அல்லது **sothi@btinternet.com**
இலங்கையில்:
**பி எம் புன்னியாமீன்** :0094 812 493 892 அல்லது **pmpuniyameen@yahoo.co**

## 16 Comments

## இக் கட்டுரைக்கு வந்த பின்னூட்டங்கள் (வாசகர் கருத்துக்கள்)

* சட்டம் பிள்ளை. on October 27, 2009 6:52 am
// யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 415 பாடசாலைகளுக்கும் இலங்கையில் சகல மாவட்டங்களைச் சேர்த்த தமிழ் பாடசாலைகளுக்கும், கண்டியிலும் கொழும்பிலும் பிரபல்யம் மிக்க தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைத்தோம். ஆனால், வேதனைக்குரிய விடயம். ஒரு பாடசாலையிலிருந்தாவது அல்லது தனியார் கல்வி நிறுவன ஆசிரியரிடமிருந்தாவது எமக்கு ஒரு பதிலாவது வரவில்லை.//

அறிவை வழங்குவதற்கும் கஞ்சத்தனமா? அல்லது சமூக உணர்வின் புதிய வெளிப்பாடா?

* முஹம்மட் பரீட் on October 27, 2009 7:04 am
வன்னி அகதி மாணவர்களுக்காக வேண்டி சிந்தனை வட்டத்துடன் இணைந்து தேசம் நெட் ஆற்றும் பணி மிகவும் உயர்வானது. வன்னி முகாம் மாணவர்கள் பற்றி அதிகமாக பேசப்பட்டாலும்கூட மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்ததக் கூடிய திட்டமிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது குறைவாகவே உள்ளன. இவ்வருடம் சாதாரண தரத்தை எழுத உள்ள மாணவர்கள் மேலதிக கற்றலுக்கு வசதிகள் இன்றி மிகவும் சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இத்தகைய மாணவர்களுக்கு தங்களால் வழங்கப்படும் வசதிகள் நிச்சயமாக மிக்க பயனுடையதாகவே இருக்கும். அதே நேரம் ஐந்து வினாப்பத்திரங்கள் மாத்திரம் நீங்கள் அனுப்புவதால் அந்த மாணவர்களின் அறிவுப்பசிக்கு நிறைவான தீனியாக அமையும் என்று எதிர்பார்க்க முடியாது. இதைப்பற்றி 'தேசம் நெட்' மேலும் கரிசணை காட்டினால் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது எமது தாழ்மையான கருத்து.

பல்கலைக்கழக மாணவர்கள் சார்பாக
- முஹம்மட் பரீட் -

* chandran.raja on October 27, 2009 7:24 am

//விமர்சனங்கள் மேற்கொள்வது இலகு. பத்திரிக்கை அறிக்கைகள் வெளியிடுவது இலகு. ஆனால் ஆக்கபூர்வமான ஒரு செயல்திட்டத்தை நடைமுறைபடுத்தும் போது அதற்கு மானசீகமான முறையில் ஒத்துழைப்பு வழங்குவது மிககுறைவு என்பதை இம்முற்சிக்கான அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.// தேசம்நெற். புன்னியாமீன்.

ஆமாம். நிதர்சன உண்மை. உங்கள் சேவைக்கு தலைவணங்குகிறேன். பல்லியின் வார்த்தைகளில் சொன்னால் அன்னக்காவடி. குமாரியின் வார்த்தைகளில் சொன்னால் கையால்ஆகாத குற்றவுணர்வுள்ள மனிதர்களாக,..காலம் கடந்தாவது ஒரு சிறுதொகை யாவது 'லிட்டில் எயிட்'க்கு அனுப்பிவைக்கிறேன்.

* T Sothilingam on October 27, 2009 8:37 am

நன்றி சந்திரன்ராஜா. மேற்குறித்த செயற்றிட்டம் தேசம் நெற்றினாலும் சிந்தனை வட்டத்தினராலும் முன்னெடுக்கப்பட்டது. 'லிட்டில் எயிட்' ஆல் அல்ல. இந்த திட்டத்திற்கு உதவி செய்ய விரும்புவர்கள் உதவி செய்ய ஒரு இரு வாரங்களே உள்ளன. இருவாரங்களில் இந்த திட்டம் செயற்பாட்டில் இருக்கும் என்பதை தெரியப்படுத்த விரும்புகிறோம். எமக்கு கிடைத்த பணத்துடன் எத்தனை மாதிரி வினாத்தாள்கள் செய்ய முடியுமோ அத்தனையே செய்யப்படும். 5ம்தர மாணவர்களுக்கான புலமைப்பரிசு நிவாரணத் திட்டத்திற்கு லிட்டில் எயிட் மற்றும் மத்திய இலங்கை இஸ்லாமிய பட்டதாரிகள் அமைப்பினராலும் உதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

* முஹம்மட் பரீட் on October 27, 2009 11:27 am

வன்னி நிவாரணக் கிராமங்களின் நிலையை நேரில் பார்க்கும் இடத்து அங்குள்ள மக்களுக்கு அத்தியவசிய தேவைகளுக்கான சகல வசதிகளும் வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. உடை, மருந்து வகைகள், உணவு வகைகள் மக்களுக்குத் தேவையான அளவு கிடைக்கின்றன. மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நோக்கும் இடத்து அரசாங்கத்ததால் ஓரளவுக்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அதே நேரம், தொண்டர் நிறுவனங்கள் மாணவர்களுக்கான உடைகள், பாதணிகள், அப்பியாசப் புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கி வருகின்றன. ஆனால், அம்மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த திட்டமிட்ட நடவடிக்கைகள், குறைவாகவே உள்ளன. விசேடமாக நிவாரணக்கிராம ஆசிரியர்கள், மேலதிக கற்பித்தலுக்காக வேண்டி உசாத்துணை நூல்கள் இன்றி கஸ்டப்படுகின்றனர். அரசாங்கப் பரீட்சையை எழுத உள்ள இம்மாணவர்கள் பெருமளவில் பாடத்திட்டத்தை நிறைவு செய்யாமலே இருப்பதை காணமுடிகின்றது. இந் நிலையை கருத்திற் கொண்டே அம்மாணவர்களுக்கான பயிற்சியை அதிகரிப்பதற்கு அதிக அளவிலான மாதிரிப்பயிற்சிகள் தேவைப்படுகின்றன. இம்மாதிரிப் பயிற்சிகள் முழுமை

யான பாடத்திட்டத்தை தழுவிய வகையில் (தரம் 10 உற்பட) அமைந்தால் அதிக பயனுடையதாக இருக்கலாம். எனவே டிசம்பரில் பரீட்சை எழுத உள்ள மாணவர்களுக்கு இத்திட்டம் வரப்பிரசாதமாக அமையும்.

கல்வியமைச்சின் ஏற்பாட்டின் கீழும், சில தொண்டர் நிறுவனங்களின் ஏற்பாட்டின் கீழும் பல்கலைக்கழக மாணவர்கள், தெற்குப்பிரதேசத்தில் உள்ள பிரபல பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கி வருகின்றனர். இந்த வழிகாட்டல்கள் குறிப்பிட்ட சில நிவாரண கிராமங்களுக்கு மட்டுமே போய்ச் சேர்கின்றன. அதே போல் இல்லாமல் அனைத்து நிவாரண கிராமங்களுக்கும் இங்குள்ள அனைத்து மாணவர் களுக்கும் தங்கள் உதவிகள் போய்ச் சேர வேண்டும் என்பதே என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதனையும் கருத்திற் கொள்வீர்கள் என எதிர்பார்க்கின்றேன். மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த தற்போதைய நிலையில் இது போன்ற திட்டங்களைத் தவிர வேறு இல்லை. எனவே ஐந்து வினாத்தாள்களுடன் மாத்திரம் உங்கள் சேவையை மட்டுப்படுத்தி விடாதீர்கள்.

- முஹம்மட் பரீட் -
பேராதனைப் பல்கலைக் கழகம்.

**பல்லி** on October 27, 2009 11:38 am
சந்திரா - பல்லிக்கு இலக்கிய அறிவோ அல்லது எழுத்து நாகரிகமோ தெரியாது. யதார்த்தம் மனிதர்களது அன்றாட பேச்சுமுறை மட்டுமே தெரியும் என்பதால் இப்படியான (அன்னகாவடி) வார்த்தைகள் அடிக்கடி வந்துவிடுகிறது. அது தவறான வார்த்தையாயின் தணிக்கை செய்துவிடுங்கள். இருப்பினும் இந்த செயற்திட்டத்துக்கு தாங்கள் உதவியதும் அதை இங்கே பதிவில் இட்டதும் பலரையும் உள்வாங்க முயற்ச்சிக்கும் என நினைக்கிறேன்

சட்டம் பிள்ளை on October 27, 2009 12:13 pm
//chandran.raja காலம் கடந்தாவது ஒரு சிறுதொகையாவது 'லிட்டில் எயிட்' க்கு அனுப்பி வைக்கிறேன;.//
//T Sothilingam மேற்குறித்த செயற்றிட்டம் தேசம் நெற்றினாலும், சிந்தனை வட்டத்தின ராலும் முன்னெடுக்கப்பட்டது. 'லிட்டில் எயிட்'ஆல் அல்ல. இந்த திட்டத்திற்கு உதவி செய்ய விரும்புவர்கள் உதவி செய்ய ஒரு இரு வாரங்களே உள்ளது இருவாரங்களில் இந்த திட்டம் செயற்பாட்டில் இருக்கும் என்பதை தெரியப்படுத்த விரும்புகிறோம். எமக்கு கிடைத்த பணத்துடன் எத்தனை மாதிரி வினாத்தாள்கள் செய்ய முடியுமோ அத்தனையே செய்யப்படும;.//
கணக்கிலக்கம் ஒன்றை அறிவித்தால் நன்றாக இருக்குமல்லவா?

chandran.raja on October 27, 2009 12:57 pm
பல்லி! இங்கு இலக்கிய அறிவோ, எழுத்து நாகரிகமோ முக்கியமல்ல மனிதநேயமே கவனிக்க படவேண்டியது. அது நிறையவே உங்களிடம் இருக்கிறது. குறை கண்டு கொள்வதற்கு எதுவுமே இல்லை. அல்லது நீங்கள் விட்ட எழுத்துப் பிழையை துணிந்து நின்று ஜெயபாலன் திருத்துவாரா? எங்களை விட நீங்கள் உயர்ந்தவரே!. எந்தவித தாழ்வு மனப்பான்மையும் வேண்டாம் முன்பிருந்தது போலவே செயல்படுங்கள். மனிதநேயம் ஓங்கட்டும்.

* chandran.raja on October 27, 2009 1:16 pm

சட்டம்பிள்ளை, வங்கிகணக்கு இலக்கம் முகவரி எல்லாமே 'லிட்டில் எயிட்லில்' அமர்த்திப் பார்த்தால் எல்லா விபரமும் வரும். கொடுக்கிறவனுக்கு கேட்கிற உரிமையும் உண்டு என்பதை மானசீகமாக தேசம்நெற் ஏற்றுக்கொள்கிறது. சகல கணக்கு வழக்குகளையும் சல்லிக்காசு பிசகாமல் உங்கள் முன் பார்வைக்கு வைத்திருக்கிறது. இது தான் நவஉலகம்.

* சட்டம் பிள்ளை on October 27, 2009 2:09 pm

//வங்கிகணக்கு இலக்கம் முகவரி எல்லாமே லிட்டில் எயிட்லில் அமர்த்திப் பார்த்தால் எல்லா விபரமும் வரும்.// அது ''லிட்டில் எயிட்ன" கணக்கு

//மேற்குறித்த செயற்றிட்டம் தேசம் நெற்றினாலும், சிந்தனை வட்டத்தினராலும் முன்னெடுக்கப்பட்டது. லிட்டில் எயிட் ஆல் அல்ல.// என சோதிலிங்கம் குறிப்பிடுகிறார். எனவே யாதும் பங்களிப்புகள் வழங்குவதாயின் யாருக்கு எப்படி வழங்குவது? புரியவில்லை.

*****

***தொடர்பு விபரங்கள்:***

பிரித்தானியாவில்:

த ஜெயபாலன் : 0044 208 279 0354 அல்லது 0044 7800 596 786 அல்லது thesam97@hotmail.com

ரி சோதிலிங்கம் : 0044 7846 322 369 அல்லது sothi@btinternet.com

இலங்கையில்:

பி எம் புன்னியாமீன் : 0094 812 493 892 அல்லது pmpuniyameen@yahoo.com

2009ம் ஆண்டு ஆகஸ்ட் புலமைப்பரிசில் பரீட்சையை முன்னிட்டு எம்மால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாதிரிவினாத்தாள்கள் வழிகாட்டிப் புத்தகங்கள், கணக்கறிக்கைகள் போன்ற விபரங்களை தேசம்நெற் வாசகர்கள் பெறவிரும்பினால் பின்வரும் மின்னஞ்சல் முகவரிகளுடன் தொடர்புகொள்ளுமிடத்து பி.டி.எப். வடிவில் 126 பக்கங்கள் கொண்ட அவ்வறிக்கையை அனுப்பி வைப்போம்.

* **T Sothilingam** on October 27, 2009 7:30 pm

முஹம்மட் பரீட் - பேராதனைப் பல்கலைக் கழக குழுவினரின் கருத்துக்களுக்கு நன்றி. 0044 7846 322 369 - sothi@btinternet.com

* புன்னியாமீன்.on October 28, 2009 3:14 am

//அறிவை வழங்குவதற்கும் கஞ்சத்தனமா? அல்லது சமூக உணர்வின் புதிய வெளிப்பாடா?// - சட்டம் பிள்ளை

சட்டம் பிள்ளையின் இக்கேள்விக்கு எனக்கு விடை வழங்கத் தெரியாது. நிவாரணக் கிராம மாணவர்களுக்கு வழங்கவென ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்கள் டியுட்டுகள் கேட்டே இலங்கையிலுள்ள அனைத்துத் தமிழ் பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட முறையில் கடிதம் தபாலிட்டேன். அவர்களுள் ஒருவராவது பதில் வழங்கவில்லை. இச்சம்பவம் உண்மையில் வேதனையைத் தந்தது. அதேநேரம், கண்டியிலும் கொழும்பிலும் மிகப் பிரபல்யம் பெற்ற சில டியுசன் ஆசிரியர்களிடம் நான் தொடர்புகொண்டு அவர்கள் மாணவர்களுக்கு வழங்கும் டியுட்டின் பிரதிகளை கேட்டேன். தருகின்றேன் என்றார்கள். தரவில்லை. சிலநேரங்களில் அவர்களின் இன உறவுகள் அவ்வளவாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன். ஆனாலும்,

இந்த விடயத்தை அனைத்துத் தமிழ் மக்களும் உணர்வுபூர்வமாக சிந்திப்பது காலத்தின் தேவையாகும். நிவாரணக் கிராமங்களில் இருக்கும் சுமார் 70ஆயிரம் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைகின்றதென்றால் இதன் எதிரொலி தற்போது புலப்படாது. இன்னும் சில ஆண்டுகள் சென்ற பின்பு வெளிப்படலாம்.

- புன்னியாமீன்.

* **புன்னியாமீன்.** on October 28, 2009 4:02 am

முஹம்மட் பரீட் இன் கருத்தினை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றோம். உண்மையிலேயே நிவாரணக் கிராமங்களிலுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டியது அனைவருக்கும் கடமையே. இவர்களது கல்வித் தரத்தில் இடைவெளி ஒன்றை விட்டு விட்டால் பிற்காலத்தில் கல்விநிலையில் சமூக ரீதியில் ஒரு பாதிப்பு ஏற்பட இடமுண்டு. வவுனியா நிவாரணக் கிராமங்கள் தொடர்பாக அப்பிரதேச கல்வி அதிகாரிகளுடன் நாம் தொடர்புகொண்டு கதைத்த நேரத்தில் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தக்கூடிய வழிமுறைகளையே அவர்கள் எம்மிடமிருந்து எதிர்பார்த்தனர். இதற்கமையவே முதற்படியாக தரம் 05 மாணவர்களுக்கான வழிகாட்டல்களை மேற்கொண்டோம். எம்மைப் பொறுத்தவரையில் எமது மனசாட்சியுடன் ஒப்புநோக்கும் போது எம்மால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எமக்கு பாரிய திருப்தியையே அளிக்கின்றது. இம்மாணவர்களின் பரீட்சை முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை. வெட்டுப்புள்ளி சம்பந்தப்பட்ட பிரச்சினையாலேயே அது தாமதமாவதாக அறியமுடிகின்றது. இம்முடிவுகள் வெளிவந்தவுடன் எமது நடவடிக்கையின் வெற்றி, தோல்விகளைத் தீர்மானித்துக் கொள்ள முடியும்.

பரீட் - நீங்கள் குறிப்பிட்டது போல எமது செயற்றிட்டம் ஒரு குறிப்பிட்ட நிவாரணக் கிராமத்தை மாத்திரம் மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படவில்லை. அனைத்து நிவாரணக் கிராமங்களையும் கருத்திற் கொண்டு கல்வித் திணைக்களத்தினால் தரப்பட்ட மாணவர்கள் தொகைக்கேற்பவே 6290 மாணவர்களுக்கும் நாம் உதவிகளை வழங்கின்றோம். எனவே அனைத்து மாணவர்களுக்கும் எமது வேலைத்திட்டத்தின் கீழ் உதவிகள் போய்ச்சேரும். அதேநேரம், குறிப்பிட்ட மாணவர்கள் இந்த இடைக் காலத்துக்குள் மீள்குடியமர்த்தப்பட்டால் மீள்குடியமர்த்தப்பட்ட இடங்களுக்கு எமது மாதிரிவினாத்தாள்களை அனுப்ப விசேட ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம். இது ஒரு விசேட அம்சமாகும்.

அதேநேரம், மாணவர்களின் தற்போதைய கல்வித்தரத்தை ஆராய்ந்து படிப்படியாக அம்மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தக்கூடிய வகையிலேயே நாம் திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதற்கான நிதி வசதிகள் எமக்குக் கிடைக்கவில்லை. இதனாலேயே எமது திட்டம் தாமதித்தது. ஐந்து வினாத்தாள்களுக்கு மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையேற்பட்டது. நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி லண்டனில் ஜெயபாலன், சோதிலிங்கம் மற்றும் நண்பர்கள் தம்மாலான உச்ச நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இலங்கையில் நானும் இது தொடர்பாக பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டேன். எமக்கு உரிய ஆதரவு கிட்டவில்லை. பரீட்சை டிசம்பர் 2ஆம் வாரத்தில் நடைபெற இருப்பதினால் இன்னும் இரு வாரங்களுக்குள் யாதாவது நிதியுதவி கிடைக்குமிடத்து மேலும் சில மாதிரிவினாத்தாள்களை அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அது எந்தளவுக்கு சாத்தியப்படும் என்பதை எதிர்பார்க்க முடியாது. எப்படியாயினும் 'விரலுக்குத் தக்க வீக்கம்' என்பார்கள். அதே போல எமக்குக் கிடைக்கும் நிதியை வைத்தே நாம் திட்டமிட வேண்டியுள்ளது. ஏனெனில், நாம் பெரியளவில் பணவசதி படைத்தவர்களல்லர்.

-புன்னியாமீன்-

* nallurkanthan on October 28,2009 7:47 pm

My dear friends, It is very timely action. Our people still demonstrate that terrorism has not totally eliminated our values. Sri Lankans are really great. Pl publish the account numbers.

::::::::::::::::::::::::

இலங்கையில் சிந்தனை வட்டத்தின் வங்கிக் கணக்கிலக்கம்
கணக்கின் பெயர்- CV PUBLISHERS (PVT) LTD
வங்கி PAN ASIA BANK- KATUGASTOTA BRANCH
கணக்கிலக்கம்- 201664380116

* செல்வன் on October 31, 2009 2:51 am

வவுனியா நிவாரணக் கிராமங்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றியவர்களின் பெறுபேறுகள் இன்று வெளியிடப்படும். பரீட்சை திணைக்களம் இன்று (31.10.20090 காலை 10 மணியளவில் வவுனியா தெற்கு வலய கல்வி பணிப்பாளரிடம் பெறுபேறுகளை கையளிக்கிறது. இதேவேளை பரீட்சை திணைக்களத்தின் http:// www.doenets.lk/ என்ற இணையத்தளத்தினூடாகவும் பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியும். இங்கு பரீட்சைக்கு தோற்றியோருக்கான வெட்டுப்புள்ளி 111 எனவும் பரீட்சை திணைக்களம் தெரிவிக்கிறது.

---

செய்தி - 2

பிரசுரமான இணையத்தளம்: www.thesamnet.co.uk

திகதி: Nov 01.2009

# புலமைப் பரிசில் பரீட்சை - வவுனியா நிவாரண கிராமங்களில் 507 மாணவர்கள் சித்தி

- பீ. எம் புன்னியாமீன் -

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை வவுனியா நிவாரணக் கிராம மாணவர்களுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் 31.10.2009 இல் வெளியிடப்பட்டன. இம்முடிவுகளின்படி நிவாரணக் கிராமங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 5413 மாணவர்களுள் 507 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மாணவர்கள் கூடிய புள்ளிகளாக 175 புள்ளிகளைப் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வட மாகாணத்தின் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக 2009 ஜுன் மாத புள்ளி விபரப்படி தரம் 05இல் கல்வி பயிலும் 4872 மாணவர்கள் வவுனியா நிவாரணக்கிராமங்களில் அகதிகளாக்கப்பட்டனர். இம்மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்திற் கொண்டு சிந்தனைவட்டமும் தேசம்நெற் உம் கல்வி நிவாரண செயற்றிட்டமாக ஒவ்வொரு மாணவனுக்கும் 30 மாதிரி வினாத்தாள்களையும் 04 வழிகாட்டிப் புத்தகங்களையும் வழங்கியது. இத்திட்டம் ஒரு நிவாரணக் கிராமத்தை மாத்திரம் கருத்திற் கொள்ளாமல் வவுனியாவில் அமைந்துள்ள அனைத்து நிவாரணக் கிராமங்களையும் கருத்திற் கொண்டே செயற்படுத்தப்பட்டது.

வவுனியா நிவாரணக் கிராமங்களுக்கு வந்து சேர்ந்திருந்த மாணவர்கள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் பாடசாலை மண்ணையே மிதிக்காமலிருந்தனர். இந்த மாணவர்களை துரிதமாகப் பயிற்றுவிக்கும் வகையிலேயே சிந்தனைவட்டம், தேசம்நெற் கல்வி நிவாரண செயற்றிட்டம் அமைந்திருந்தது. எமது வழிகாட்டிப் புத்தகங்களையும், மாதிரி வினாத்தாள்களையும் நிவாரணக்கிராமங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் முறையாகப் பயிற்றுவித்தமையினால் 507 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இத்திட்டத்தை ஆரம்பிக்கும்போது 300 மாணவர்கள் சித்தியடைந்தால் போதுமென்ற இலக்கில் தான் நாம் ஆரம்பித்தோம். நாம் எதிர்பார்த்ததை விட மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை எமக்கு மன மகிழ்வைத் தருகின்றது.

2009 ஆகஸ்ட்டில் நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் 2 லட்சத்து 98,000 மாணவர்கள் தோற்றினர். இவர்களுள் 31,000 மாணவர்களே சித்தியடைந் துள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார். 2009 ஒக்டோபர் 02ஆம் திகதி அகில இலங்கை ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன. அச்சந்தர்ப்பத்தில் தமிழ்மொழி மூலம் மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி பின்வருமாறு அமைந்திருந்தது. கொழும்பு / கம்பஹா / களுத்துறை / கண்டி / மாத்தளை / காலி / மாத்தறை / குருணாகல் / கேகாலை மாவட்டம் 141 புள்ளிகள். நுவரெலியா 137 வவுனியா - 136, அம்பாறை 139, திருகோணமலை - 138, புத்தளம் 137, அநுராதபுரம்138, பொலன்னறுவை 140, பதுளை 138, மொனராகலை 135, மன்னார் 139 இரத்தினபுரி 134, மட்டக்களப்பு 139

வன்னி நிவாரணக்கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல வழிகளிலும் பாதிக்கப் பட்டிருந்தமையினாலும் 6 மாதங்களுக்கு மேல் கல்வியை தொடராமல் இருந்தமையினாலும், பரீட்சை நடைபெறவிருந்த காலகட்டத்தில்கூட நிவாரணக் கிராமங்களினுள் வெள்ளப் பாதிப்புக்குட் பட்டிருந்தமையினாலும் நிவாரணக் கிராமங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. இவற்றைக் கருத்திற் கொண்டே பரீட்சைத் திணைக்களம் நிவாரணக் கிராமங்களில் வசித்த மாணவர்களின் வெட்டுப்புள்ளியை 111ஆகக் குறைத்தது.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 196 மாணவர்களும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 267 மாணவர்களும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 27 மாணவர்களும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 7 மாணவர்களும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 10 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். இங்கு மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு வேறு வெட்டுப்புள்ளிகள் காணப்பட்ட போதிலும் கூட, இம்மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் நிவாரணக் கிராமங்களில் வசித்த நிலையில் இவர்கள் நிவாரணக்கிராம மாணவர்களாகவே கருத்திற் கொள்ளப்பட்டு நிவாரணக் கிராமங்களுக்குரிய வெட்டுப்புள்ளியே இவர்களுக்கு சேர்க்கப்பட்டன. இதன்படி 507 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன் வவுனியா மாவட்டத்தில் ஆகக் கூடிய புள்ளியாக 135 புள்ளியையும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 175 புள்ளியையும், கிளிநொச்சி மாவட்டத்தில் 175 புள்ளியையும், மன்னார் மாவட்டத்தில் 134 புள்ளியையும், யாழ். மாவட்டத்தில் 135 புள்ளியையும் பெற்று தலா ஒவ்வொரு மாணவர்கள் முதலிடத்தை பிடித்துள்ளனர்.

5413 மாணவர்களது பெறுபேறுகள் வவுனியா நிவாரணக் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள போதும் பெருந் தொகையானோர் யாழ்ப்பாணம், மன்னார், திருமலை, மட்டக்களப்பு மாவட்டங் களுக்கு மீள்குடியேற்றத்திற்கென அனுப்பப்பட்டுள்ளனர். எனவே இவர்களுடன் சென்றுள்ள பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளை அவர்களது சொந்த மாவட்ட வலய கல்வி பணிப்பாளர்களூடாக கிடைக்க வழிவகை செய்யப்படும் என வவுனியா வலய கல்விப் பணிப்பாளர் திருமதி ரஞ்ஜனி ஒஸ்வர்ல்ட் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்ட நேரத்தில் தமிழ்மொழி மூலமாக யாழ். வட்டுக்கோட்டை தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த லோகேஸ்வரன் ஸ்ரீகர்ஷன் 192 புள்ளிகளைப் பெற்று இலங்கையில் முதலாவது இடத்தை பிடித்தார். இந்த மாணவனும் சிந்தனைவட்டத்தால் வெளியிடப்பட்ட தரம் 5 மாதிரிவினாத்தாள் களையும் வழிகாட்டிப் புத்தகங்களையும் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை ரீதியில் சிங்கள மொழிமூலம் 196 புள்ளிகளைப் பெற்று அம்பாந்தோட்டை ருகுணு விஜயபா மகா வித்தியாலய மாணவன் கே. ஏ. பிரமோத் டில்ஷான் முதலாவது இடத்தையும் பிடித்திருந்தார்.

சாதாரண நிலையில் போட்டிப் பரீட்சையான புலமைப்பரிசிலுக்கு தோற்றும் மாணவர்களின் நிலையைவிட வன்னி நிவாரணக் கிராமங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நிலை மிகமிக பரிதாபகரமானது. பல்வேறுபட்ட மானசீகப் பிரச்சினைகள் மத்தியிலும் போதிய கல்வி போதனைகள் இன்றிய நிலையிலும் இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 507 மாணவர்கள் சித்தியடைந்திருப்பது பெருமைப்படக்கூடிய விடயமே.

இம்மாணவர்கள் அனைவருக்கும் தேசம்நெற், சிந்தனைவட்டம் இவற்றின் நிர்வாகத்தினரும் தேசம்நெற் வாசகர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகின்றனர். அதேநேரம், பல்வேறுபட்ட சிரமங்கள் மத்தியில் இம்மாணவர்களை வழிநடாத்திய நிவாரணக்கிராம ஆசிரியப் பெருந்தகைகள் என்றும் கௌரவிக்கப்பட வேண்டியவர்களே.

# 16 Comments

## இக் கட்டுரைக்கு வந்த பின்னூட்டங்கள் (வாசகர் கருத்துக்கள்)

**சட்டம் பிள்ளை** on November 1, 2009 7:43 am

வவுனியா நிவாரண கிராமங்களில் சித்தியடைந்த 507 மாணவர்களுக்கும் அவர்களைப் பயிற்று வித்த ஆசிரியர்களுக்கும், வழிகாட்டல்களை வழங்கிய சிந்தனைவட்டம், தேசம்நெட்டுக்கும் இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கிய சமூகநோக்கு கொண்ட இதயங்களுக்கும் எமது வாழ்த்துக்கள்.

**மாயா** on November 1, 2009 8:51 am

மகிழ்வாக இருக்கிறது. சிறு துரும்பும் தேவைக்கு உதவும் என்பது போல முடிந்ததை செய்யுங்கள் அந்த மக்கள் மகிழ்வாக வாழட்டும். இப்படியான சிறு வெற்றிகள் கூட, அவர்கள் வாழ நம்பிக்கை அளிக்கும்.

**uma** on November 1, 2009 8:52 am

காலையில் ஓர் நற்செய்தி. பரீட்சையில் சித்திபெற்ற அனைத்து மாணாக்கர்களுக்கும் பாராட்டுக்கள். இச்செயற்திட்டத்தை முன்னெடுத்த அனைத்து தரப்பினர்க்கும் நன்றிகள்.

**chandran.raja** on November 1, 2009 10:19 am

முப்பது வருடங்கள் இனத்தின் பெயரில் நடந்த போராட்டதிற்கு செலவழித்த தொகையும் தீர்கப்பட்ட வெடிகளும் பறிக்கப்பட்ட உயிர்தொகையையும் ஒப்பிடும் போது,. தேசம்நெற்றின் கூட்டுமுயற்சியால் ஒரு சிறுதொகையுடன் தீர்க்கப்பட வேண்டிய எமது சமூகத்தின் முற்றதில் வீழ்ந்து மத்தாப்பு பூரிப்பை அல்லவா! ஏற்படுத்துகிறது. இதன் பலனை வார்த்தைகளால் பாராட்டமுடியாது. உங்கள் முயற்சி மேலும் விரிவடைந்து சிறப்புபெறுமென உறுதியாக நம்பலாம். கடிமான உங்கள் உழைப்புக்கு பாராட்டுக்கள்.

**பார்த்திபன்** on November 1, 2009 12:38 pm உண்மையில் நல்லதொரு மாற்றத்திற்கான ஆரம்பம். பாராட்ட வார்த்தைகள் இல்லை. இந்தச் சிறார்களின் வாழ்க்கை இதுவரை பாழடிக்கப் பட்டிருக்கின்றது. இப்போதாவது அந்த நிலை மாறி அவர்கள் தங்கள் கவனங்களை கல்வியில் செலுத்த உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகள்.

Thaksan on November 1, 2009 6:32 pm

வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தும் எந்த முயற்சியும் தோல்வியை சந்திப்பதில்லை. சிறு சிறு ஊக்குவிப்புகளே பாரிய பலனை தந்துவிடும் பலமுள்ளது. இன்னமும் பரந்தளவில் பல முனைகளினூடாகவும் முயற்சிகளை மேற்கொள்வோம். உண்மையான போராட்டம் இந்த அவலங்களை வெல்வதற்கானதே. தொடர்ந்து போராடுவோம்: அதனூடாக வாழ்வின் உன்னதங்களை தரிசிப்போம்.

பரீட் on November 2, 2009 6:36 am

நிவாரணக்கிராமங்களில் மாணவர்கள் சிறப்பான முறையில் சித்தி எய்தியிருக்கிறார்கள் என்பது உண்மையிலே மகிழ்ச்சியான செய்தி. நிவாரணக்கிராமங்களில் மாணவர்களின் கற்றல் சூழ்நிலைகளை நேரடியாக அவதானித்தவன் என்ற வகையில், எதிர்பார்க்க முடியாத வெற்றியாகவே இது உள்ளது. நிச்சயமாக நிவாரணக்கிராமங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் தியாகங்களுக்கும், அம்மாணவர்களுக்கான திட்டமிடப்பட்ட முறையான வழிகாட்டலை வழங்கிய சிந்தனை வட்டம், தேசம் நெட் ஆகியவற்றிற்கும், கிடைத்த வெற்றியாகவே இதைக்கருத வேண்டும்.

ஒரு ஊடகம் சரியான முறையில் திட்டமிட்டு செயற்பட்டால், ஒரு சமுகத்தை ஆக்கவும் முடியும், வழிதவற வைக்கவும் முடியும், அழிக்கவும் முடியும். இந்த அடிப்படையில் தேசம் நெட் ஆக்க பூர்வமான ஓர் அரும் பணியைச் செய்து புலம்பெயர் ஊடகங்களுக்கு எடுத்துக்காட்டாக நிற்கின்றது. இதன் பெருமானம் தற்போது அளவிட முடியாது. தற்போதைய சூழ்நிலையில் இது ஒரு செய்தியாகவும் தெரியாது. நிச்சயமாக இன்னும் சில தசாப்தங்கள் சென்ற பிறகு இது ஒரு வரலாறாகும். இது நிச்சயம்.இந்தப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருமே மதிக்கப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்களே'..

பரீட் on November 2, 2009 7:05 am

சிந்தனை வட்டம், தேசம் நெட் ஆகியவற்றிற்கு கிடைத்த இந்த வெற்றியுடன், தங்கள் கடமை நிறைவேறி விட்டதாக நீங்கள் நினைத்து விடக்கூடாது. இதன் பிறகு தான், தங்களது பார்வை அகலமாக பதிய வேண்டும். குறிப்பாக தமது உறவுகளின் மேல் பற்றும், பாசமும் கொண்ட புலம்பெயர் உறவுகள், மீள்குடியேற்றம் பெற்ற பின்பு, வன்னி மாணவர்களின் கல்வியின் பால் கூடிய கரிசனை காட்ட வேண்டும். மீள்குடியேற்றம் பெற்ற முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் பாடசாலை நிலைகள், ஆசிரியர்களின் தட்டுப்பாடு போன்றவற்றை ஆராய்ந்து நீண்ட கால, குறுங்காலத் திட்டங்களை வகுத்து மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறாயின் தான் தற்போது பெற்ற வெற்றியை நிரந்தரமாக பெற்றுக் கொள்ள முடியும்.

மீள்குடியேற்றம் தற்போது வேகமாக நடைபெற்று வருகின்றது. மீள்குடியேற்றம் பெற்ற இடங்களில் கல்வி நிலை சீரான தன்மை பெற இன்னும் நீண்ட காலம் செல்லலாம். மக்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளை அவதானித்து உதவிகள் வழங்க பல்வேறு அமைப்புகள் காணப்படுகின்றன. ஆனால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த திட்டமிட்ட அமைப்புகள், இதுவரை செயற்பட்டதாக அறிய முடியவில்லை. இந்த அடிப்படையில் சிந்தனை வட்டம், தேசம் நெட் ஆகியவற்றின் பணி ஓரளவு மனநிறைவைத் தருகின்றது. ஆனால் இது போன்ற அமைப்புகளின் பணிகள் விரிவு படுத்தப்பட வேண்டும். அரசியல் தீர்வுகள், தற்போதைய பிரச்சினைக்கான தீர்வுகள் என்பவற்றை புலம்பெயர் சமுகத்தில் வாழும் தனிப்பட்ட ஒவ்வொரு நபராலும், மேற்கொள்ள முடியாது. இதற்கான பல்வேறு ஏற்பாடுகள் அமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றை இங்கே நான் விமர்சிக்கவில்லை. ஆனால் தனிப்பட்ட ஒவ்வொரு நபராலும்,, மனது வைத்தால் பாதிக்கப்பட்ட மாணவர் சமுகத்தின் கல்வித்தரத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும். இதை ஒவ்வொருவரும் மனசாட்சியுடன் யதார்த்த நிலையைக் கருத்திற்கொண்டு சிந்தித்தால் முடிவு வரும்.

செய்தி - 3

பிரசுரமான இணையத்தளம்: www.thesamnet.co.uk

திகதி: Nov 30.2009

# வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம் நிறைவுபெற்றது. : புன்னியாமீன்

வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான தேசம்நெட், சிந்தனைவட்ட கல்வி நிவாரண செயற்றிட்டத்தின் கீழ் கணிதம், வரலாறு, தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய ஐந்து பாடங்களுக்கும் 06 மாதிரி வினாத்தாள்களை வழங்கியுள்ளதுடன், தனது 2009ம் வருடத்துக்கான நிவாரண செயற்றிட்டத்தை நிறைவு செய்துகொண்டது.......

இக்கட்டுரை விரிவுபடுத்தப்பட்டு இதேயறிக்கையில் 17 தொடக்கம் 24ம் பக்கம் வரை இடம்பெற்றுள்ளது. தயவு செய்து வாசிக்க. இக்கட்டுரை இணையத்தளத்தில் பிரசுரமானபோது இடம்பெற்ற வாசகர் கருத்துகள் கீழே சேர்க்கப்பட்டுள்ளன.

## 04 Comments

### இக் கட்டுரைக்கு வந்த பின்னூட்டங்கள் (வாசகர் கருத்துக்கள்)

**விதி** on December 1, 2009 3:38 am //விமர்சனங்கள் மேற்கொள்வது இலகு. பத்திரிகை அறிக்கைகள் வெளியிடுவது இலகு. ஆனால் ஆக்கபூர்வமான ஒரு செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அதற்கு மானசீகமான முறையில் ஒத்துழைப்பு வழங்குவது மிகக் குறைவு.//
- இது தான் விதி

chandran.raja on December 1, 2009 9:46 am மிகமிகக் குறைவு புலம்பெயர் நாட்டிலில்லிருந்து கொண்டு பிறந்த நாட்டிற்கு நல்ல ஆக்கபூர்வமான காரியங்களை செய்வது என்பது'!?.அப்படி செய்தால் ஏதாவது ஒரு ஆதாயத்தை எதிர்பார்கிறார்கள் என்பதே உண்மை.

lio on December 1, 2009 4:09 pm //இத்திட்டத்திற்கு எம்மால் ஒரு மாணவனுக்கு வழங்க முடியுமாக இருந்த தொகை 45 பென்ஸ்கள் மாத்திரமே.// ஒரு மாணவனுக்கு 5 பவுண்ஸ் கொடுத்து உதவ மனமில்லாதோர்களின் அமைப்புகள் அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றக் கொடுக்கப் போராடுகிறார்களாம். பட்டப் பகலில் வெள்ளி காட்டுவார்கள் பார்த்துக் கொண்டிரு தமிழினமே

Ahilan Navaratnam on December 2, 2009 2:14 am மேற்படி திட்டத்தை தம்மால் இயன்றளவில் நடாத்திமுடித்த திருவாளர்கள் புன்னியாமீன், ஜெயபாலன் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். கொடுங்கோலர்களின் செயலால் தம் வாழ்வைத் துலைத்த எம் மாணவச் செல்வங்களுக்கு கல்விக்கு உதவி செய்வதற்க்கே எம்மால் முடியவில்லை என எண்ணும்போது மனம் வேதனை அடைவதுடன் வெட்கமும் குற்ற உணர்வும் ஏற்ப்படுகிறது. அழிப்பதற்க்கு அள்ளிக்கொடுத்தவர்களால் ஆக்கத்துக்கு கிள்ளிக்கொடுக்க முடியவில்லை. எம் நாட்டில் நடந்த போரில் அழிந்தவற்றுடன் மனிதநேயமும் அழிந்துவிட்டதா?

மாதிரி வினாத்தாள் இலக்கம்
Model Paper Number 01 — 01

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்திட்டம்.

PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

தேசம்

www.thasamnet.co.uk

| முழுப் பதிப்புரிமையுடையது. All Rights Reserved | சிந்தனை வட்டம் பரீட்சைப் பிரிவு Cinthanai Vattam Examination Div | | 33 | T | 1 |
|---|---|---|---|---|---|

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| வரலாறு 1 History 1 | | நேரம் : 01 மணித்தியாலம் One hour |
|---|---|---|

**கவனிக்க.**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வின…வுக்குரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி… இடுக.

1. வரலாற்றின் பிதா என்று கௌரவிக்கப்படுகின்ற …
   1. ஹெரடோடஸ் 2. ஸ்டுவர்ட் பிகொட் … …ஹர்லால் நேரு

2. ஆரியரின் ஆயிரம் குடியேற்றங்களும் … …ா. அவை நான்கு அரசுகளாக வளர்ச்சி பெற்ற…
   1. காசி 2. அவந்தி 3. …

3. "இந்திய நெப்போலியன்" என… …ர்?
   1. சமுத்திரகுப்தன் 2. …

♦ கீழே தரப்பட்டுள்ள… …ங்கு விடையளிக்க.

A - கா… …க்காண
F - … …காம

4. இ… 
   1. A…

5. மகாவிஜய… …தலைநகரங்களாக இருந்த இரு இடங்களையு…
   1. CD …

6. புராதன இலங்கையி… …ரண்டையும் சுட்டும் எழுத்துக்கள் எவை?
   1. CD 2. BF … 4. EG

மாதிரி வினாத்தாள் இலக்கம் 01இல் கடைசி பக்கத்தில் அச்சிடப்பட்ட குறிப்பு:

மாதிரி வினாப்பத்திரம் 01

வினாப்பத்திரம் தயாரிப்பு:
யூ.எல்.எம். பஷீர்
B.A(Cey), Dip in Edu
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
வத்தேகம கல்வி வலயம்

1 - 6 வரையிலான மாதிரி வினாத்தாள்களுக்கான அனுசரணை:- தேசம்நெற்
இலண்டனிலிருந்து … பொன் சிவசுப்பிரமணியம்
அகிலன் பவுண்டேஷன், கரன்ட் சேவிர்ஸ் ஸ்ரேஷன்ஸ்,
கனடாவிலிருந்து
Ahilan Nawaratnam, Vijayakaran, Seenivasagam Navaratnam, Jeyanandan Sinniah,
N. Visuvalingam, Sriskandarajah Anandarajah, Velupillai Pramsothy, P. Arunasalam,
Aiyadurai Shanmuganathan, R. Chandraraj…n, V. Joganathan
அச்சிடப்பட்ட பிரதிகள் - 6400

| மாதிரி வினாத்தாள் இலக்கம்<br>Model Paper Number | 02 |
|---|---|

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WEL-

www.thasamnet.co.uk

| முழுப் பதிப்புரிமையுடையது.<br>All Rights Reserved | சிந்தனை வட்டம் பரீட்சைப்பிரிவு<br>**Cinthanai Vattam Examination Div** | 34 | T | 1 |
|---|---|---|---|---|

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| விஞ்ஞானம் 1<br>SCIENCE 1 | | நேரம் : 01 மணித்தியாலம்<br>One hour |
|---|---|---|

**கவனிக்க.**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

---

1. பின்வரும் அங் ... ள் உபயவாழிகளாக இருக்கும் இரு உயிரினங்களும் எவை?
   1. அன்னமுட் ... ம்
   2. ஆமையும் தவளையும்
   3. தவளை ...
   4. தவளையும் சலமந்திராவும்

2. கலம் ...
   1. அ ... லகு கலம் ஆகும்.
   2. ... ல் புலப்படாத நுண்ணிய அமைப்பாகும்.
   3. ... ப்படுகின்றன.

3. ...

4. ... உதவும் சு ...
   1. பித் ...

5. அயடின் கரை ... ம் உணவுப் பொருள் எது?
   1. ஆட்டுப்பால்
   3. பச்சை வாழைக்காய்

6. பூக்கள் உருவாகாத தாவரத்திற்கு ...
   1. புல் 2. வாழை 3. பன்னம் ...

மாதிரி வினாத்தாள் இலக்கம் 02இல் கடைசி பக்கத்தில் அச்சிடப்பட்ட குறிப்பு:

**மாதிரி வினாப்பத்திரம் 02**

வினாப்பத்திரம் தயாரிப்பு:-
**திருமதி எம்.எச்.எஸ். மஸீதா**
பயிற்றப்பட்ட கணித, விஞ்ஞான ஆசிரியை
க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி
உடத்தலவின்ன

**1 - 6 வரையிலான மாதிரி வினாத்தாள்களுக்கான அனுசரணை:-**
**இலண்டனிலிருந்து**
அகிலன் பவுண்டேஷன், கரன்ட் சேவிர்ஸ் ஸ்ரேஷன்ஸ், பொன் சிவசுப்பிரமணியம் தேசம்நெற்
**கனடாவிலிருந்து**
Ahilan Nawaratnam, Vijayakaran, Seenivasagam Navaratnam, Jeyanandan Sinniah, N. Visuvalingam, Sriskandarajah Anandarajah, Velupillai Pramsothy, P. Arunasalam, Aiyadurai Shanmuganathan, R. Chandrarajan, V. Joganathan
அச்சிடப்பட்ட பிரதிகள் - 6400

| மாதிரி வினாத்தாள் இலக்கம் Model Paper Number | 03 |
|---|---|

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

தேசம்

www.thasamnet.co.uk

| முழுப் பதிப்புரிமையுடையது. All Rights Reserved | சிந்தனை வட்டம் பரீட்சைப்பிரிவு Cinthanai Vattam Examination Div | 22 | T | 1 |
|---|---|---|---|---|

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| தமிழ் மொழியும் இலக்கியமும் 1 TAMIL LANGUAGE & LIT 1 | | நேரம் : 01 மணித்தியாலம் One hour |
|---|---|---|

**கவனிக்க.**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக

---

01. நளன் தமயந்தியை நடுநிசியில் கானகத்தில் விட்டுச் சென்...
நடுநிசி என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. இரவு 2. இராத்திரி 3. நள்ளிரவு 4. நண்...

02. பின்வரும் சொற்கூட்டங்களில் வேறுபட்டுள்ள ...
1. இழித்தல் 2. அழுதல் 3. ப...

03. அந்த கிழவி கோபமிகுதியில் 'நீ ...
இங்கு 'நீ ஒழிக' என்பது
1. ஏவல் வாக்கியம் 2. வியங்...

04. 'தத்துநீர்த் தண் தஞ்...
1. யானை

05. 'கருக்கரிவா...
இங்கு கழனி...
1. ஆயுதம்

06. கேலிச்சித்திரம் என்ப...
1. வடமொழிச்சொல் ... ...சகவழக்குச் சொல்

07. ஆஸ்பத்திரி சிப்பந்தி அவ்வ... திடுக்கிட்டாள். இங்கே சிப்பந்தி என்பது
1. பாரசீகசொல் 2. வடசொல் ... 4. திரிசொல்

குறிப்பு: மாதிரி வினாத்தாள் இலக்கம் 03இல் கடைசி பக்கத்தில் அச்சிடப்பட்ட

மாதிரி வினாப்பத்திரம் 03

வினாப்பத்திரம் தயாரிப்பு:
தஸ்மின் ரியாழ்
B.A(Cey)
க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி
உடத்தலவின்ன

1 - 6 வரையிலான மாதிரி வினாத்தாள்களுக்கான அனுசரணை:
இலண்டனிலிருந்து
அகிலன் பவுண்டேஷன். காண்ட் சேவிர்ஸ் ஸ்ரேஷன்ஸ். பொன் சிவசுப்பிரமணியம் தேசம்நெற்
கனடாவிலிருந்து
Ahilan Nawaratnam, Vijayakaran, Seenivasagam Navaratnam, Jeyanandan Sinniah,
N. Visuvalingam, Sriskandarajah Anandarajah, Velupillai Pramsothy, P. Arunasalam,
Aiyadurai Shanmuganathan, R. Chandrarajan, V. Joganathan
அச்சிடப்பட்ட பிரதிகள் - 6400

| மாதிரி வினாத்தாள் இலக்கம்<br>Model Paper Number | 04 |
|---|---|

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

தேசம்

www.thasamnet.co.uk

| முழுப் பதிப்புரிமையுடையது.<br>All Rights Reserved | சிந்தனை வட்டம் பரீட்சைப்பிரிவு<br>Cinthanai Vattam Examination Div | 31 | E | 2 |
|---|---|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசம்பர்

**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| ஆங்கிலம் 2<br>ENGLISH 2 | | நேரம் : 02 மணித்தியாலம்<br>Tow hours |
|---|---|---|

i. Answer all the questions on this paper it self

1) In one of the class room assessments you did, your teacher asked to prepare a list of nouns and adjectives using suffixes and prefixes.

a) How many were there in your group?

_______________

b) Who was the group leader?

_______________

c) Write two ways that you and your friends used to fi[...]

i. _______________

ii. _______________

d) Write tw[...]

Eg: Demy[...]

i. _______________

ii. _______________

மாதிரி வினாத்தாள் இலக்கம் 04இல் கடைசி பக்கத்தில் அச்சிடப்பட்ட குறிப்பு:
மாதிரி வினாப்பத்திரம் 04
வினாப்பத்திரம் தயாரிப்பு:
வத்தேகம கல்வி வலயம்
வத்தேகம
1 - 6 வரையிலான மாதிரி வினாத்தாள்களுக்கான அனுசரணை:-
இலண்டனிலிருந்து
அகிலன் பவுண்டேஷன், கரன்ட் சேவிர்ஸ் ஸ்ரேஷன்ஸ், பொன் சிவசுப்பிரமணியம் தேசம்நெற்
கனடாவிலிருந்து
Ahilan Nawaratnam, Vijayakaran, Seenivasagam Navaratnam, Jeyanandan Sinniah,
N. Visuvalingam, Sriskandarajah Anandarajah, Velupillai Pramsothy, P. Arunasalam,
Aiyadurai Shanmuganathan, R. Chandrarajan, V. Joganathan
அச்சிடப்பட்ட பிரதிகள் - 6400

| மாதிரி வினாத்தாள் இலக்கம்<br>Model Paper Number | 05 |
|---|---|

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

www.thasamnet.co.uk

| முழுப் பதிப்புரிமையுடையது.<br>All Rights Reserved | சிந்தனை வட்டம் பரீட்சைப் பிரிவு<br>**Cinthanai Vattam Examination Div** | | 32 | T | II |
|---|---|---|---|---|---|

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| கணிதம் 2<br>Maths II | | நேரம் : 03 மணித்தியாலம்<br>Three hours |
|---|---|---|

- விடைகள் தெளிவான கையெழுத்தில் எழுதப்படல் வேண்டும்.
- பகுதி "A" இல் 6 வினாக்களில் 5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.
- பகுதி "B" இல் 6 வினாக்களில் 5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.
- r ஆரையும் h உயரமும் உடைய உருளையின் கனவளவு $\pi r^2h$ ஆகும். r ஆரையும் h உயரமும் உடைய கூம்பொன்றின் கனவளவு $\frac{1}{3}\pi r^2h$ ஆகும்.

மாதிரி வினாத்தாள் இலக்கம் 05இல் கடைசி பக்கத்தில் அச்சிடப்பட்ட குறிப்பு:

மாதிரி வினாப்பத்திரம் 05

1 - 6 வரையிலான மாதிரி வினாத்தாள்களுக்கான அனுசரணை:

அகிலன் பவுண்டேசன், கரன்ட் சேவிஸ் ஸ்ரேஷன்ஸ், பொன் சிவசுப்பிரமணியம் தேசம்நெற் கனடாவிலிருந்து இலண்டனிலிருந்து

Ahilan Nawaratnam, Vijayakaran, Seenivasagam Navaratnam, Jeyanandan Sinniah, N. Visuvalingam, Sriskandarajah Anandarajah, Velupillai Pramsothy, P. Arunasalam, Aiyadurai Shanmuganathan, R. Chandrarajan, V. Joganathan

அச்சிடப்பட்ட பிரதிகள் - 6400

வினாப்பத்திரம் தயாரிப்பு: ஏ.எம். பாயிஸ்
பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்
க. ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி
உடத்தலவின்ன

01. | தொலைக்காட்சிப் பெ... வாடகைக்குக் கொள்வனவு முறையில் முதலி... ஒன்றரை வருடங்களில் 2 சதவீதம் மாதா... |

மேற்படி அ... ...க்காட்சிப் பெட்டியை வாடக...

i. முதலில் பணம் செலுத்திய ...

ii. ஒரு மாதத்திற்கு செலுத்த வேண்டி...

iii. ஒரு மாத வட்டி எவ்வளவு?

iv. வட்டி அறிவிடப்படும் மாத அலகுகளின் எண்...

v. மொத்த வட்டி எவ்வளவு?

vi. ஒரு மாத தவணைக் கட்டணம் எவ்வளவு?

மாதிரி வினாத்தாள் இலக்கம் 06
Model Paper Number 06

வடக்கில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரண செயற்றிட்டம்.

PROJECT TO GRANT EDUCATIONAL RELIEF SERVICE TO THE DISPLACED STUDENTS IN THE WELFARE CENTRES IN THE NORTH.

www.thasamnet.co.uk

| முழுப் பதிப்புரிமையுடையது. All Rights Reserved | சிந்தனை வட்டம் பரீட்சைப் பிரிவு **Cinthanai Vattam Examination Div** | 33 | T | 1 |
|---|---|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2009 டிசம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2009**

| வரலாறு 1<br>History 1 | | நேரம் : 01 மணித்தியாலம்<br>One hour |
|---|---|---|

கவனிக்க.

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க
iii. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்குரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.

---

01. எமது இலங்கையின் மன்னர்கால ஆட்சியின் இறுதித் தலைநகராகத் திகழ்ந்தது எது?
1. கண்டி 2. கோட்டை 3. சீதாவக்கை 4. கொழும்

02. கீழ்வரும் தகவல்களுள் பொருத்தமற்ற ஒன்று எது?
1. மார்கோபோலோ எனும் இத்தாலியப் பிரயாணி இலங் ... ல்களைத் தந்துள்ளார்
2. பாகியன் என்ற சீனப் பிக்கு 5ஆம் நூற்றாண் ... ருந்து சமய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.
3. 13 ஆம் நூற்றாண்டில் மலாயா நா ... ன பௌத்த மதப் பிளவைப் பற்றிப்
4. மொரோக்கோ நாட்டிலிருந் ... அராபியரான இப்னு பச

03. இந்திய வரலாற்றி ...
1. மௌரியர்

04. இந்தி ...
விடை
1. நந்த
3. மௌர

05. கற்கால மன ... மூவரும் இடங்களு டன் அவை ... விடையாக எதனைக் கொள்வீர்?
1. பதிய கம்பல
2. பாஹியன்கல
3. பொம்பரிப்பு ... ற
4. பெல்லன் பெதி ... லை
1. D C B A ... A D C 4. C D A B

மாதிரி வினாத்தாள் இலக்கம் 06இல் கடைசி பக்கத்தில் அச்சிடப்பட்ட குறிப்பு:

மாதிரி வினாப்பத்திரம் 06

வினாப்பத்திரம் தயாரிப்பு:
யூ.எல்.எம். பஷீர்
B.A(Cey), Dip in Edu
முன்னாள் ஆசிரிய ஆலோசகர்
வத்தேகம கல்வி வலயம்

1 - 6 வரையிலான மாதிரி வினாத்தாள்களுக்கான அனுசரணை:
இலண்டனிலிருந்து
அகிலன் பவுண்டேஷன், கரன்ட் சேவிர்ஸ் ஸ்ரேஷன்ஸ், பொன் சிவசுப்பிரமணியம் தேசம்நெற்
கனடாவிலிருந்து
Ahilan Nawaratnam, Vijayakaran, Seenivasagam Navaratnam, Jeyanandan Sinniah,
N: Visuvalingam, Sriskandarajah Anandarajah, Velupillai Pramsothy, P. Arunasalam,
Aiyadurai Shanmuganathan, R. Chandrarajan, V. Joganathan
அச்சிடப்பட்ட பிரதிகள் - 6400

PRINTED AND PUBLISHED BY

C.V. PUBLISHERS (PVT) LTD
(PRINTING DIVISION)
14, UDATALAWINNA MADIGE,
UDATALAWINNA 20802
SRILANKA

T/P : 0094 812 493892
FAX : 0094 812 493746
E-Mail : pmpuniyameen@yahoo.com

ISBN: 978-955-1779-28-3